# பெண்மணி

செப்டம்பர் - 2003 ரூ.10/-



ஆன்மீக - ஜோதிட மலர்

12 ராசிகளுக்கும்

ராகு - கேது பெயர்ச்சி பலன்கள்

வைத்தீஸ்வரன் கோயில்

நாடி ஜோதிடம்

வேண்டும் உந்தன் உறவு

(முழு நாவல்)



# வேண்டும் நதன் உறவு



ஆர். மணிமாலா

இருபக்கமும் வாழைமரங்கள் கட்டப்பட்டு சீரியல் பல்புகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த வீடு, பார்க்க... பாந்தமாய், நிறைவாய் இருந்தது.

ஸ்பீக்கரில் அலறிய சினிமாப் பாடல்கள் சூழ்நிலையை மேலும் கலகலப்பாக்கிக் கொண்டிருக்க... வந்திருந்த உறவுக்கார வாண்டுகள் ஒன்று சேர்ந்து பாட்டிற்கேற்ப டான்ஸ் ஆடிக்கொண்டிருந்தன.

ஒரு பக்கம் சமையல் தயாராகிக் கொண்டிருந்தது.

மாதவன் அவர்களை நோக்கிச் சென்றான்.

''இன்னுமா சமையல் முடியலே? அரைமணி



நேரத்திலே எல்லோரும் வர ஆரம்பிச்சிடுவாங்க சார்! இவ்ளோ ஸ்லோவா பண்ணிட்டிருக்கீங்க?'' என்று சமையல்காரரிடம் கேட்டான்.

''இதோ... அஞ்சே நிமிஷம். முடிஞ்சிடும் சார். தொழில்லே எப்பவும் சுத்தமான ஆள் சார். இந்த ராகவாச்சாரி சமையலைப்பத்தி பத்து பேருக்கிட்டே நீங்க பெருமையா சொல்லணுமே! எந்தக் குறையும் வைக்க மாட்டேன். பாதாம் பாயசம் ரெடியாயிருக்கு. சங்கரா... சாருக்கு டம்ளர்ல பாயசம் கொண்டு வாடா!''

''அதெல்லாம் வேண்டாங்க. இப்பதான் காபி சாப்பிட்டேன். அஞ்சு நிமிஷத்திலே சமையல் முடிஞ்சிடுமில்லே?''

''மாதவா!''

அம்மாவின் குரல் கேட்டது.

வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, ''இதோ வந்துட்டேன்ம்மா!'' என்று ஓடினான்.

''போன் வந்திருக்கு...'' என்றாள் நீலாம்பிகை.

அறைக்குள் ஓடினான்.

''ஹலோ...!''

''மாது... நான்தான்!''

''ஹாய்... சொல்லுடா!''

''இளம்பவா? வீட்டிலேர்ந்து ஆட்டோவிலே புறப்பட்டா... சரியா நாப்பது நிமிஷத்திலே வந்திடுவேன்!''

''இன்னும் யாரும் வர ஆரம்பிக்கலே... ஒன் அவர் கழிச்சி புறப்படு... என்ன அவசரம்?''

''என் புகுந்த வீட்டையும், மாமியாரையும் பார்க்கணும்ங்கற ஆசைதான் நைட்டெல்லாம் தூக்கமே இல்லே தெரியுமா?''

''இதுக்குக் கூடவா?''

''உங்களுக்கு என்னத் தெரியும் பொண்ணுங்க மனசைப்பத்தி? உங்கம்மா மனசுல இடம் பிடிக்கிற மாதிரி நடந்துக்கணும்னு வேற சொல்லிட்டீங்க!''

''அதெல்லாம் உன் தலைவலி! 'டேய்... எனக்கு இந்தப் பெண்ணை பிடிச்சிருக்குடா... கல்யாணம் பண்ணிக்கிறியா'ன்னு அம்மா கேட்டாதான் நான் உன் கழுத்திலே தாலிக்கட்டுவேன்... சொல்லிட்டேன்!''

''அடப்பாவி... பெரிய கல்லைத் தூக்கி தலையிலேப் போடறியே?'' மறுபுறம் அலறினாள் கீர்த்தனா.

''அம்மா வர்றாங்க... வச்சிடறேன்!''

''யாருப்பா போன்லே?''

''ஆபீஸ்லே என் கூட வேலை பார்க்கிறவங்க. நம்ம வீட்டுக்கு வர்றதுக்கு வழி கேட்டாங்க!''

''கண்ணெல்லாம் சிவந்திருக்கு''

''உனக்கும்தான்ம்மா சிவந்திருக்கு. ஹோம புகையோட கைங்கர்யம்!''

''முகம் கழுவி டிரஸ்ஸை மாத்திக்கப்பா! எல்லோரும் வர ஆரம்பிச்சிடுவாங்க!''

''சரிம்மா!''

நீலாம்பிகை வீட்டை கண்களால் கழுவினாள்.

புத்தம் புதிய வீடு!

அவனின் இருபது வருடக் கனவு!

சொந்தமாய் ஒரு வீடு கட்டி வசிக்க வேண்டும். ஒரே பிள்ளை மாதவன். சின்னஞ்சிறு குடும்பம்தான். தாராளமாய் சேர்த்து வைத்து இதைவிடப் பெரியதாகவே வீடு கட்டியிருக்கலாம்தான். ஆனால் மாதவனின் தந்தை ராமனாதனுக்கு மூன்று தங்கைகள். பெற்றோர் இல்லாத தங்கைகளை கல்யாணம் பண்ணி கரையேற்றும் பெரும் பொறுப்பு அவருக்கு. இதில் எந்த கனவை நனவாக்க முடியும்? ஆறு வருடத்திற்கு முன்பு ராமனாதனும் மேலே போய் சேர்ந்து விட்டார்.

அம்மாவின் கனவை மகன் நிறைவேற்றி வைத்து விட்டான். மாதவன் நல்ல வேலையில் கைநிறைய சம்பளத்தில் இருந்தான். அம்மா மீது பாசம் அதிகம். அவள் கண்களில் ஒரு சொட்டுக் கண்ணீர் வந்தால் கூட அவனால் தாங்கிக் கொள்ள முடியாது.

இதோ... இன்று கிரஹப்பிரவேசம்!

நீலாம்பிகையின் முகத்தில் பரவசம், பெருமிதம் எல்லாம் கலந்த கலவையான உணர்வு!

''ரொம்ப சந்தோஷமா இருக்கு மாதவா! பல வருஷக் கனவு! நிறைவேத்திட்டியே...!''

''உன் சந்தோஷம் தான் என் சந்தோஷம்மா!''

''வீட்டைக் கட்டிப்பார்... கல்யாணம் பண்ணிப்பார்னு சொல்வாங்க. வீட்டைக் கட்டியாச்சு. இந்த வீட்டுக்கு சீக்கிரமே மகாலட்சுமி மாதிரி ஒரு மருமகளை கொண்டு வரணும்!''

''நான் டிரஸ் மாத்திட்டு வந்திடறேன்ம்மா!''

''கல்யாணப் பேச்சை எடுத்தாலே நழுவிடுவியே! உனக்கும் வயசாகுதே மாதவா! வரப்போற சொந்த பந்தங்களெல்லாம் இன்னைக்கு உன் கல்யாணத்தைப் பத்திதான் பேசப்போறாங்க. இன்னைலேர்ந்து உனக்கு பொண்ணுப் பார்க்கற வேலையை ஆரம்பிச்சிடப் போறேன்!''

''மொதல்ல வர்றவங்களை கவனிம்மா!'' சிரித்தபடி நழுவினான் மாதவன்.

''கலக்கிட்டே மாதவா... வீடு ரொம்ப சூப்பரா இருக்கு. இந்த காலத்துக்கு ஏத்தபடி ஐடியாவோட கட்டியிருக்கே?'' ஆபீஸ் நண்பர்கள் பாராட்டினர்.

''நீலா... இதுதான் உன் ரூமா... யப்பா... எவ்ளோ பெரிசாயிருக்கு? காற்றோட்டமா ஜன்னல்... அட உனக்கு தனியா டி.வி. வேறயா? பிள்ளைன்னா உன் பிள்ளை மாதிரியில்லே இருக்கணும்? உன் மேலேதான் எவ்வளவு பாசம்?''

உறவுக்காரியொருத்தி பொறாமையோடு பெருமூச்சு விட்டாள்.

நீலாம்பிகைக்கு பெருமை பிடிபடவில்லை.

''என் ரூமுக்கு ஏசி போடறேன்னான். நான் தான் வேண்டாம்னுட்டேன்!''

''மாதவனுக்கு எப்பக் கல்யாணம்?''

''இனி தான் பொண்ணுப் பார்க்கணும்!''

''நல்லதாப் போச்சு! என் நாத்தனார் பொண்ணு ஒருத்தி இருக்கா! அழகுன்னா அப்படியொரு அழகு. பேங்க்லே வேலை செய்யறா. பத்தாயிரம் சம்பளம் வாங்கறா. வீட்டுக்கு ஒரே பொண்ணு! சொத்து பத்துன்னு வசதிக்கு குறைச்சல் இல்லே. பேசி முடிச்சிடலாமா நீலா?''

''இல்லேக்கா... வேண்டாம்!''

''ஏன்? இன்னும் பொண்ணு பார்க்கலேன்னு சொன்னே?''

''அது சரிதான்க்கா! நான் பேராசைக்காரியில்லே. என் பிள்ளைக்கு மனைவியா வரப்போறவ இப்படிதான் இருக்கணும்னு மனசுக்குள்ளே ஒரு கற்பனை இருக்கு. வரப்போறவ என் பிள்ளைக்கு மனைவியா இருந்தா மட்டுமே போதாது. எனக்கு மகளா, என்னை தன் தாயா நினைக்கிறப் பொண்ணுதான் வேணும். ஆடம்பரமா வாழ்ந்து பழக்கப்பட்ட பொண்ணால இதெல்லாம் சாத்தியமில்லே! எங்களை மாதிரி நடுத்தரக் குடும்பத்திலேர்ந்து எடுத்தாதான் பதவிசா நடந்துப்பா. பொய், புரட்டு இல்லாத நல்ல குடும்பமா இருந்தாப்போதும்.''

''அதுசரி! எந்தப் புத்துல எந்தப் பாம்போ? கீழ் மட்டப் பொண்ணுங்க மட்டும் நீ நினைக்கிற மாதிரி தான் இருப்பாங்கன்னு எப்படி சொல்றே? எல்லாப் பொண்ணுங்களுக்கும் புகுந்த வீட்லே புருஷன் மட்டும்தான் உறவு! எந்த காலத்திலே இருக்கே நீ?''



''நீ வேணாப் பாருக்கா! நான் ஆசைப்பட்ட மாதிரிதான் மருமக வரப்போறா!''

வாசலில் ஆட்டோ வந்து நிற்கும் சப்தம் கேட்டது. ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள் நீலாம்பிகை. ஒரு அழகிய இளம்பெண் கையில் பரிசுப் பார்சலுடன் இறங்கிக் கொண்டிருந்தாள்.

''யாரது? பங்கஜம் மகளா?''

''இல்லே... யாருன்னுத் தெரியலே. மாதவன் கூட வேலை பார்க்கிறவளாயிருக்கும்!'' என்ற நீலாம்பிகை அவளை இமைக்காமல் பார்த்தாள்.

சந்தன நிறத்தில் மயில்நிற பார்டர் போட்ட மைசூர் சில்க் சேலை. தலைநிறைய முல்லை. ஒற்றைச் செயின். மெலிதாய் இரண்டு வளையல்கள். வெள்ளைக் கற்கள் பதித்த கம்மல். பளிச்சென்ற முகத்தில் படபடத்த கருவிழிகளும், செப்பு வாயும், கூர்மூக்கும், செதுக்கின மோவாயுமாய்... தான் கற்பனை செய்து வைத்திருந்தப் பெண் மனசுக்குள்ளிருந்து வெளிப்பட்டு உயிருடன் நடமாடுவதுப் போலிருந்தது.

'யாரிவள்?'

அவள் நேரே நீலாம்பிகையை நோக்கி தான் வந்தாள்.

''எக்ஸ்க்யூஸ்மீ... மிஸ்டர் மாதவன்...'' என்றிழுத்தாள்.

''என் பிள்ளைதான்... மாதவா'' என்று இடதுபக்கமாய் முகத்தை மட்டும் திருப்பிக் குரல் கொடுத்தாள்.

''ஓ... நீங்க அவரோட அம்மாவா? வணக்கம்மா... நான் உங்க பிள்ளையோட ஃப்ரெண்ட். இந்தாங்க!'' அழகாய் சிரித்தபடி பரிசுப் பொருளை நீட்டினாள் கீர்த்தனா.




ரெஸ்டாரெண்டில் மாதவனுக்காக காத்திருந்தாள் கீர்த்தனா.

ஐந்து நிமிடம் மேலும் ஓடிப்போக... பல்ஸரை நிறுத்தி விட்டு இவளருகே ஓடி வந்தான்.

''கையக்குடு கீர்த்தனா'' என்றான் வந்ததும்.

''என்னாச்சு மாது? ரொம்ப ஹாப்பியா இருக்கீங்க?''

''இருக்காதா பின்னே? அம்மாவுக்கு உன்னை ரொம்ப பிடிச்சிருக்கு.''

''நிஜமாகவா? எதை வச்சு அப்படி சொல்றீங்க?''

கீர்த்தனாவின் முகமெங்கும் மகிழ்ச்சிப் பூக்கள்.

''நீ பங்ஷனுக்கு வந்துப் போனதும், உன்னைப் பத்திதான் விசாரிச்சிட்டிருந்தாங்க. 'யார்டா அந்தப் பொண்ணு? லட்சணமா இருக்கா. கல்யாணமாயிடுச்சா? எங்கிருக்கா?' அப்படி இப்படின்னு. நீ வேற வெள்ளியிலே லட்சுமி சிலையை ப்ரசென்ட் பண்ணியிருந்தியா? ரொம்ப பூரிச்சுப் போயிட்டாங்க. 'மகாலட்சுமியே வந்து சிலையை குடுத்துட்டுப் போயிருக்கா'ன்னு... சொல்லி சொல்லி சந்தோஷப்பட்டாங்க.''

''அப்புறமென்ன? என்னைதான் பிடிச்சிருக்கே. நம்ம லவ் மேட்டரைப் போட்டு உடைச்சிட வேண்டியதுதானே?''

''ம்ஹூம்... அவசரப்படக்கூடாது. பொதுவா எல்லா பேரென்ட்ஸும் பிள்ளைங்க காதலிக்கிறாங்கன்னாலே காரணமே இல்லேன்னாக்கூட எதிர்க்கத் தோணும். அம்மாவுக்கு என் மேலே ரொம்ப பாசம், மரியாதை. தன் பிள்ளை தான் கிழிச்சக் கோட்டை தாண்ட மாட்டான்னு பெரிய நம்பிக்கை வச்சிருக்காங்க. திடுதிப்புன்னு உன்னைக் கூட்டிட்டுப் போய் அவங்க முன்னாடி நிறுத்தி, 'நான் இவளை காதலிக்கிறேன்ம்மா... நீதான் எப்படியாவது எங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வைக்கணும்'னு சொல்லியிருந்தா நடந்ததே வேறயா இருந்திருக்கும். 'காதலிக்கிறியா? நீயா? எப்படா இப்படிக் கெட்டுப் போனே? அதுக்குள்ளே உனக்கென்னடா அவசரம்? ரதி மாதிரி நானே ஒரு பொண்ணுப் பார்த்து பண்ணி வைக்க மாட்டேனா? இவகிட்டே என்ன இருக்குன்னு மயங்கிட்டே? உனக்கு நான் வேணுமா? அவ வேணுமா? இப்பவே முடிவுப் பண்ணிக்க'ன்னு ஒரே போடாப் போட்ருவாங்க. பரவாயில்லையா?''

''கேக்கவே பயமாயிருக்கே? அப்ப நாம லவ் பண்றதே தெரியக் கூடாதுன்னு சொல்றீங்களா?''

''அப்படியுமில்லே. அம்மாவுக்கு முழுக்கவே உன்னை பிடிச்சுப்போய்டும். அப்ப நம்ம மேட்டரை லீக் அவுட் பண்ணுவேன். 'படவா... இவ்வளவு நாளும் மறைச்சிட்டியே'ன்னு செல்லமா கோவிச்சுப்பாங்க.''

''பயங்கர கில்லாடிதான் நீங்க.'' கண்ணாடித் தம்ளரிலிருந்த தண்ணீரை எடுத்து செல்லமாய் அவன் முகத்தில் தெளித்தாள்.

''ரொம்ப ஹாப்பியா இருக்கேன். ஸ்வீட் ஆர்டர் பண்ணலாமா?''

''சீக்கிரம்.'' என்றாள் கீர்த்தனா.

''சினிமாவுல வர்ற மாதிரி இருக்கு... நீ சொல்றது.'' வெஜிடபிள் புலாவை தாருக்காய் ஸ்பூனில் எடுத்து சாப்பிட்ட வினிதா ஆச்சர்யத்துடன் சொன்னாள்.

ஒரே அலுவலகத்தில் தான் வினிதாவும், கீர்த்தனாவும் பணிபுரிகின்றனர். இருவரும் பள்ளி முதல் கல்லூரி வரை ஒரே வகுப்பில் படித்த இணைபிரியா தோழிகள்.

''முதல்ல மாதவன் இப்படியொரு ஐடியா சொன்னப்ப எப்படி வொர்க் அவுட் ஆகும்னு தான் சந்தேகப்பட்டேன். ஆனா, இப்ப அவர் சொன்னபடிதான் நடக்குது.''

''உன்னை யாருக்குதான் பிடிக்காது கீர்த்தனா? அழகு, குணம், படிப்பு, சுயமா சம்பாத்தியம். நீ கிடைக்க மாதவன்தான் கொடுத்து வச்சிருக்கணும்ங்கறது என்னோட அபிப்ராயம்.''

''இல்லே வினிதா. மாதவன் கிடைக்க நான்தான் கொடுத்து வச்சிருக்கணும். தன் தாய் கண்லேர்ந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வீணாகக் கூடாதுன்னு நினைக்கிற ஆண்பிள்ளைதான் தனக்கு வரப்போகிற மனைவியையும் தாய் போல நேசிப்பான். அந்த வகையிலே நான் தான் அதிர்ஷ்டசாலி.''

''பொண்ணுங்களுக்கு பிறந்த வீட்டை விட புகுந்த வீடு நல்லாயிருக்கணும். இல்லேன்னா பொண்ணாப் பிறந்தே பிரயோஜனம் இல்லே. நீ சொல்றதைப் பார்த்தா உன் வருங்கால மாமியார் எளிமையானவங்களா, பேராசை இல்லாதவங்களாதான் இருக்கணும்.''

''ஆமாம்... பாரேன்... நான் யார் என்னன்னு தெரியாமலேயே என்னை பிடிக்கப் போய்டுச்சு.''

''அடுத்து என்ன மூவ்?''

''கூடிய சீக்கிரம் என்னை அவங்கம்மாவோட பேச வைக்கப் போகிறார்.''

''ஹூம்... பேசினதும் பிடிச்சுப் போய்டும். உன் வீட்டுக்குப் பொண்ணு கேட்க வந்துடுவாங்க. அடடா உங்க திங்கிங் அப்படியே சினிமாட்டிக்கா இருக்கே.'' என்றாள் அலுத்தபடி.

''வாழ்க்கைதான் சினிமா. புரிஞ்சுக்குங்க மேடம்.''

''ஓஹோ... உங்க காதல்ல டூயட் உண்டா?''

''ம்... கனவுல மட்டும்'' என்றாள் கீர்த்தனா சிரித்தபடி.

''எனக்கும் வீட்லே தீவிரமா அலையன்ஸ் பார்த்துக்கிட்டிருக்காங்க கீர்த்தி.''

''கங்க்ராஜுலேஷன்ஸ்.'' சாப்பாட்டுக் கையுடன் பற்றிக் குலுக்கினாள். ''பரவாயில்லையே... இந்த விஷயத்திலும் இணைபிரியாம இருக்கோம்.''

''யூ ஆர் ராங் கீர்த்தி. நாம பிரிஞ்சிடுவோமோன்னு பயமாயிருக்கு.''

## துணியை ஒட்டராங்கோ

பேண்ட்டை மடித்து தைத்[...]போன்ற பேஸ்ட் கொண்டு ஒட்டி விடுகி வைக்க வேண்டுமா, சட்டை கிழிந்து விட்[...]றார்கள் ஹாங்காங்கில்! இந்த பேஸ்ட்

[...]தா, அதை தெரியாமல் தைக்க வேண்டுமா? ஊசி நூல் இல்லாமல், இது [...]டியூப்கள் நம் நாட்டுக்கும் வந்துள்ளன. முக்கிய கடைகளில் கேட்டுப் பாருங்களேன்!

-வச்சலா பார்த்தசாரதி, பாரிஸ்.




''என்னடி சொல்றே?'' என்றாள் வாய்[...]குக் கொண்டு போனதை அப்படியே நிறுத்தி.

''ஆமாம் கீர்த்தி. என் ஜாதகத்துல வெ[...] நாட்டுக்குப் போவேன்னு இருக்காம். அதனால பாரின்லேயே அலையன்ஸ் பார்த்துட்டிருக்காங்க.''

''என்னடி பெரிய குண்டைத் தூக்கிப் போடறே?''

''எனக்கும் இதிலே இஷ்டமில்லே. ஆனா, மலேஷியா அலையன்ஸ் ஒண்ணு மு[...]வாகிற மாதிரி இருக்கு. சரி... இப்பவே எதுக்[...] அதைப் பத்தி பேசி மனசை கஷ்டப்படுத்திக்கணும்? ம்... சொல்ல மறந்திட்டேனே... நேத்து தீனா போன் பண்ணினான்.''

''என்னவாம்?''

''வழக்கம்போல உன் புராணம்தான். கீர்த்தி மேலே நான் எவ்வளவு காதல் வச்சிருக்கேன்னு உனக்கு தெரியாதா? நீயாவது அவளுக்கு எடுத்து சொல்லக் கூடாதா'ன்னு புலம்பறான்.''

''அவனோட பெரிய தொல்லையாப் போய்டுச்சு வினிதா. காலேஜ்ல ஒண்ணா சேர்ந்து படிச்சோம். அப்பதான் ஏதோ உளறிக் கொட்டினான். படிப்பை முடிச்சு நேவியிலே போய் சேர்ந்து அஞ்சு வருஷமாகுது. இன்னும் மாறாம அப்படியே இருக்கான்னா... எரிச்சலா வருது. பேசாம நான் மாதவனை லவ் பண்றதை சொல்லிடப் போகிறேன்.''

''அவசரப்படாதே கீர்த்தி. தீனா உன் மேலே உயிரையே வச்சிருக்கிறவன். அவன் காதலை மறுத்தும் கூட என்னைக்காவது உன் மனசு மாறாதான்னு காத்துக்கிட்டிருக்கிறவன். அவன்கிட்டே போய் நீ மாதவனைப் பத்தி சொன்னா... எனக்கென்னமோ சரியாப் படலே. அந்த அன்பெல்லாம் வெறுப்பா மாற வாய்ப்பிருக்கு.''

''இதென்ன வம்பு? என் மனசுக்கு பிடிச்ச வாழ்க்கைய வாழறது தப்பா?''

''தீனா மாதிரியான காதல் பைத்தியத்துக்கு இது தப்புதான். அவன் உனக்கு போன் பண்ணினா கேர்புல்லா ஹேண்டில் பண்ணு.''

கீர்த்தனா கவலையுடன் யோசித்தாள்.

நடையில் செருப்பைக் கழற்றி விட்டு, காலை கழுவி விட்டு உள்ளே நுழைந்த போது ஊதுபத்தியின் வாசம் நாசியைத் தொட்டது.

ஜானகி விளக்கேற்றி விட்டு பூஜையறையிலிருந்து வெளிப்பட்டவள் மகளைப் பார்த்ததும் மலர்ந்தாள்.

''வாம்மா கீர்த்தனா... முகம் கழுவிட்டு வா. வெங்காய அடையும், கொத்துமல்லி சட்னியும் பண்ணி வச்சிருக்கேன். சூடு ஆறிடறதுக்கு முன்னே சாப்பிட்டுடு.''

''அஞ்சு நிமிஷத்திலே வந்திடறேன்ம்மா.''

உடையை களைந்து நைட்டிக்குள் புகுந்து கொண்டவள் சந்தன சோப்பின் மணம் கமழ, பூத்துவாலையால் முகம், கழுத்தை துடைத்தபடி பளிச்சென்று அம்மாவின் முன் அமர்ந்தாள்.

பழங்காலத்து வீடு அது. மூன்று அறைகள், முற்றம், பாத்ரூம், நீண்ட வராண்டா, கொல்லைப்புறம் என்று பழமையை பறை சாற்றி நிற்கும் ஒடுவேய்ந்த வீடு. காரைப் பெயர்ந்த சுவர்கள். அந்தத் தெருவில் எல்லா வீடுகளும் மாடிகளாய் உயர்ந்து நிற்க, இவர்கள் வீடு மட்டும் பரிதாபமாய் தனித்துத் தெரிந்தது. அது மட்டும்தான் அவர்களின் சொத்து.

''வீட்லே யாருமில்லேப் போலிருக்கே? அண்ணன், அண்ணியெல்லாம் எங்கேம்மா?''

''பொண்டாட்டியோட மாமியார் வீட்டுக்குப் போயிருக்கிறான்.'' அவள் பேச்சில் சலிப்புத் தெரிந்தது.

''என்னம்மா? அண்ணனோட சண்டையா?''

''சண்டையெல்லாம் ஒண்ணுமில்லே கீர்த்தனா. இந்த பிஸினஸ் பண்றேன், அந்த பிஸினஸ் பண்றேன்னு உங்கப்பா சேர்த்து வச்சிட்டுப் போனதையெல்லாம் அழிச்சிட்டான். கடைசியா என்னை எப்படியோ பேசி சரிக்கட்டி, வீட்டையும் அடகு வச்சிருக்கிறான். இந்த வீட்டை வித்துதான் உன் கல்யாணத்தை முடிக்கணும். இப்பவே நல்ல நல்ல வரன்கள் வீடு தேடி வருது. இதை வித்து கையிலே ரெடியா பணத்தை வச்சுக்கணுமில்லையா? அதனால தான் சீக்கிரம் இந்த வீட்டு டாகுமெண்ட் என் கைக்கு வந்தாகணும்னு பவித்ரன்கிட்ட சொன்னேன். உடனே செல்வியை கூட்டிக்கிட்டு மாமியார் வீட்டுக்குப் போய்ட்டான்.''

''அண்ணன் அப்படி என்னதான் பிஸினஸ் பண்றார் லட்சக்கணக்குல பணத்தைப் போட்டு? அண்ணி புதுபுதுசா நகை வாங்கறாங்க. ஆனா, பிஸினஸ்ல நஷ்டம்னு பாட்டுப் பாடறார். எனக்கென்னமோ அவர்கிட்டே என்னவோ தப்பிருக்குன்னுதான் தோணுது.''

''அவனை நினைச்சா எனக்கும் பயமாயிருக்கும்மா. தங்கச்சியாச்சேன்னு உன் வாழ்க்கையப்பத்தியும் கவலைப்படாம இருக்கிறான்.''

''சரி... எல்லாத்தையும் போட்டு குழப்பிட்டிருக்காதேம்மா. நல்லதே நடக்கும். நீ சாப்பிட்டியாம்மா?''

''இல்லே.''

''நீயும் தட்டு போட்டுக்க.. இல்லேன்னா நானும் சாப்பிட மாட்டேன்'' என்றவள் அம்மா

வுக்கு தானே ஒரு தட்டு வைத்து பரிமாறினாள்.

ஜானகி யோசனையுடனே... அடையை விண்டு வாயில் போட்டான்.



நீலாம்பிகை மகனுக்கு சாப்பாடு பரிமாறிக் கொண்டு இருந்தாள்.

''சலவைக்கார முத்து காலையிலே வந்திருந்தான்.''

''என்னவாம்? மன்னிக்கணுமாமா? இனிமே அவன்கிட்டே சலவைக்கு கொடுக்காதேம்மா.''

''உன் சட்டையை மாத்தி இன்னொருத்தர் துணியோட வச்சுக் கொடுத்திட்டதுக்கு நானே நல்லா திட்டிட்டேன் மாதவா. அந்த சட்டையை வாங்கி வந்து மறுபடி சலவைப் பண்ணி எடுத்துட்டு வந்தான். இனிமே இது மாதிரி நடக்காம பார்த்துக்கறேன்னு கெஞ்சறான்.''

''சட்டையை என்னப் பண்ணினே?''

''உன் கட்டில் மேலேதான் வச்சிருக்கேன்.''

''எம்மா... என்னைப்பத்தி உனக்குத் தெரியாதா? எவனோ ஒருத்தன் போட்ட சட்டையை மறுபடி நான் போடுவேனா?''

''அது உன் சட்டைதானே மாதவா?''

''இருந்தாலும்... யாரோ ஒருத்தன் போட்டுட்டானே. என் பொருளை என்னைத் தவிர யாரும் பயன்படுத்தக்கூடாதுன்னு உனக்குதான் நல்லாவே தெரியுமே. அந்த சட்டையை அவன் முகத்திலேயே வீசியெறியறதை விட்டுட்டு வாங்கி வச்சிருக்கீங்க?''

''புதுச் சட்டையாச்சேன்னு... மனசு கேட்கலே. சரி விடு... முத்து வந்தா குடுத்துடறேன். அந்தப் பொண்ணு பேரென்ன சொன்னே?''

''நான் எந்தப் பொண்ணு பேரைச் சொன்னேன்? முத்துவைப் பத்திதானே பேசினேன்?'' விழித்தான்.

''அட... அன்னைக்கு நம்ம வீட்டுக் கிரகப் பிரவேசத்துக்கு வந்துச்சே... அந்த பொண்ணைக் கேட்டேன்.''

''கீர்த்தனா..''

''உன் கூடவா வேலை பார்க்கிறா?''

''இ...இல்லே... பக்கத்து ஆபீஸ்லே.''

''அந்தப் பொண்ணை ஒருநாள் நம்ம வீட்டுக்கு வரச் சொல்லேன்.''

'அடடா!' என்று மனசு கும்மாளம் போட்டது மாதவனுக்கு.

''எம்மா?''

''அது ஒரு விஷயம் இருக்கு. வரச் சொல்லேன்.''

''சரிம்மா.'' என்றான் சந்தோஷத்தை சாமர்த்தியமாய் மறைத்து.

உள்ளே நுழையும்போதே மடிந்திருந்த கார்ப்பெட்டை சரிப்படுத்தி விட்டு வந்தாள் கீர்த்தனா.

நீலாம்பிகை கவனித்து விட்டாள்.

''வாம்மா கீர்த்தனா.''

''வணக்கம்மா.''

''உட்காரும்மா.''

கையிலிருந்த பழங்கள் அடங்கிய கூடையைக் கொடுத்தாள்.

''இதெல்லாம் எதுக்கும்மா?''

''அன்பாகத் தருகிறேன். அவ்வளவுதான் உங்கள் உடம்பு எப்படி இருக்கிறது. ஷுகர் நா[...] மலாக இருக்கிறதா?''

''இதெல்லாம் உனக்கெப்படித் தெரியும்?'' என்றாள் ஆச்சர்யமாக.

''உங்க பிள்ளைதான் சொன்னார்.''

''பக்கத்து ஆபீஸ்லேதான் வேலை செய்[...] றியாமே?''

''ஆ... ஆமாம்.''

''உனக்கு வீடு எங்கே கீர்த்தனா?''

''திருவான்மியூர்ல...''

''உன் கூடப் பிறந்தவங்க?''

''ஒரு அண்ணன் மட்டும்தான். அப்ப[...] இல்லே. அம்மா, நான், அண்ணன், அண்ணி எல்[...] லோரும் ஒன்றாக இருக்கிறோம்.''

''கல்யாண வயசாயிடுச்சே? வரன் பார்க்[...] றாங்களா?''

''பார்த்துக்கிட்டுதாம்மா இருக்கிறாங்க.''

''அப்படியா?'' என்ற நீலாம்பிகையின் முகத்தில் யோசனை.

அடுத்த இரண்டுநாள் கழிந்து சாப்பிட்டு முடித்தபின் மகனிடம் பேசினாள்.

''மாதவா... நான் ஒண்ணு சொல்லுவேன் தப்பா நினைச்சுக்க மாட்டியே?''

''பெரிய வார்த்தை எதுக்கும்மா? நே[...] விஷயத்துக்கு வாங்க.''

''நான் எந்தப் பொண்ணை சொன்னாலு[...] கட்டிப்பியா?''

''உங்களுக்கு பிடிக்கிறது எனக்கும் பிடி[...] கும்... சொல்லும்மா.''

''கீர்த்தனாவை பத்தி என்ன நினை[...] றே?''

''ரொம்ப நல்ல பொண்ணு.''

''எனக்கும் அவளை ரொம்பப் பிடிச்சிருக்கு மாதவா. நம்ம குடும்பத்துக்கு ஏத்தவளா இருப்பா. உனக்கு விருப்பம்னா... பேசி முடிச்சிடலாம்.''

''முடிச்சிடுங்கம்மா.''

''மாதவா...'' சந்தேகத்துடன் மகனை உற்று நோக்கினாள். ''முடிச்சிடுங்கம்மான்னு அவசர அவசரமாச் சொல்றே? உனக்கு அவ மேலே...''

''என்னை மன்னிச்சிடும்மா. உங்கிட்டே எந்த விஷயத்தையும் மறைக்க எனக்கு மனசில்லே. கீர்த்தனாவும், நானும் ரெண்டு வருஷமா விரும்பறோம். உங்கிட்டே இந்த விஷயத்தை எப்படி சொல்றதுன்னு முழிச்சுக்கிட்டு இருந்தேன். நல்லவேளை... உனக்கே அவளை ரொம்ப பிடிச்சிருக்க.''

''டேய் படவா.. என்கிட்டேயே நடிக்கிறியா?'' மகனின் காதை பிடித்துத் திருகினாள்.

மாதவன் வெட்கத்துடன் சிரித்தான்.

உலகையே வென்று விட்ட சந்தோஷத்தில் காதல் பறவைகள் இரண்டும் பைக்கில் சிறகடித்துப் பறந்தன.

கீர்த்தனா தன் வலக்கையை மாதவனின் கழுத்தில் போட்டு மிக நெருக்கமாய் அமர்ந்திருந்தாள்.

''இது ஆடி மாசம்ங்கறதால இந்த மாசம் முடிஞ்சதும் அம்மா முறைப்படி உன் வீட்டுக்கு பொண்ணு கேக்க வருவாங்க. நீயும் உன் வீட்லே நம்ம விஷயத்தைச் சொல்லிடு.''

''ஐயம் ஸோ ஹாப்பி மாது. மவுனராகத்துல ரேவதி மழையிலே நனைஞ்சுக்கிட்டே ஆடற மாதிரி எனக்கும் ஆடணும் போலிருக்கு.''

''இப்ப மழை வந்தாக்கூட நல்லாயிருக்கும். என்னை அப்படியே இறுக்கிக்கிட்டு...''

''போதும்... போதும் உங்க கற்பனை. நாளைக்கு ஏதாவது பிக்சர் போகலாமா மாது?''

''மேடத்துக்கு குஷி தாங்கலே போலிருக்கு. எந்த படத்துக்குப் போகலாம்னு நீயே டிஸைட் பண்ணு.''

''ஐ லைக் இட் அஜீத். அஜீத் நடிச்ச படத்துக்கேப் போகலாமா?''

''.....?!''

''என்ன மாது சைலண்டாயிருக்கீங்க?''

''உனக்கு வெட்கமாயில்லே?'' என்றான் கோபமாக.

''எ... என்ன மாது?''

பைக்கை நிறுத்தினான்.

''ஒரு இந்தியப் பெண், அதிலும் தமிழ்ப் பெண், கல்யாணம் ஆகப்போகிற வருங்கால கணவனிடம், இன்னொரு ஆம்பளையை பிடிச்சிருக்குன்னு சொல்வாளா?''

''மா..து? நா... நான் நடிகர் அஜீத்தை தானே சொன்னேன்?'' என்றாள் அதிர்ச்சியுடன்.

''அஜீத்தும் ஆண் தானே? இதோ பார் கீர்த்தி உனக்கு என்னைப் பத்தித் தெரியும் தானே? எனக்கு சொந்தமானப் பொருளை மத்தவங்க ரசிக்கக் கூட விடமாட்டேன். எங்க அம்மா மேலே உயிரையே வச்சிருக்கேன். இருந்தாலும் நான் யூஸ் பண்ற சோப்பை தொட விடமாட்டேன். என் பொருள் எனக்கு மட்டும் தான் சொந்தம். நீ என் மனைவியாகப் போகிறவ. உன் மனசுல என்னைத் தவிர வேற எந்த ஆணும் இடம் பெறக் கூடாது. இதுக்கு முன்னாடி யாரை யாவது லவ்வு கிவ்வுன்னு பண்ணியிருந்தா சொல்லிடு. இப்பவே கல்யாண மேட்டரை ட்ராப் பண்ணிடலாம்.''

விக்கித்துப் போய் விட்டாள் கீர்த்தனா.

சாதாரண சிறு விஷயத்துக்குப் போய் அவன் இந்தளவு டென்ஷனாவான் என்று எதிர் பார்க்கவில்லை.

''சேச்சே... என்ன மாது இது? நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். என் மனசுல எப்பவும் உங்களைத் தவிர யாருக்கும் இடம் இல்லை. வண்டியை எடுங்க. சினிமாவுக்கு வேண்டாம். நாளைக்கு வேற எங்கேயாவது போகலாம். பொண்டாட்டியை இப்படி அடிமைத்தனமா கொண்டாடறதுக்கூட ஒரு சுகம் தான். ஐ லைக் யூ. வண்டியை எடு புருஷா.''

அவள் அப்படி சொன்னதும் பழைய உற்சாகம் தொற்றிக் கொள்ள... பைக்கை சீற விட்டான்.

அலுவலகத்தினுள் நுழைந்தான் மாதவன்.

பியூன் மருது எதிர்ப்பட்டான்.

''குட்மார்னிங் சார்.'' என்றவன் கண்களை அகல விரித்தான்.

''தோடா... சார்... நீங்களும் என்னை மாதிரியே டி ஷர்ட் போட்டிருக்கீங்க? அதே கலர், அதே டிசைன்... போத்தீஸ்ல தானே எடுத்தீங்க?'' என்றான் உற்சாகம் பீறிட.

மாதவனின் முகம் மாறியது.

மருதுவுக்கு பதிலேதும் கூறாமல் சட்டென வெளியேறினான்.

அரைமணி நேரத்தில் திரும்பி வந்தவன் வேறு டி ஷர்ட் போட்டிருந்தான்.

அஸிஸ்டண்ட் மேனேஜர் சுந்தரம் அவனிடம் வந்தார்.

''என்ன மாதவன்... கொஞ்சம் முன்னாடி பிளாக் கலர் டி ஷர்ட் போட்டிருந்தீங்க. இப்ப வேற போட்டிருக்கீங்க''

''இதோ இருக்கு பழைய ஷர்ட்.''

''இதுவும் நல்லாதானே இருந்தது.''

''மருதுவும் இதே கலர் டிஸைன்ல போட்டிருந்தானே?''

''அதனாலென்ன?''

''அதென்னவோ சின்ன வயசிலேர்ந்தே ஒரு பழக்கம். யாரும் போடாத டிரஸ்சை நான் போடணும். என்னை மாதிரி வேற யாராவது போட்டிருந்தாங்கன்னா... உள்ளுக்குள்ளே ஆத்திரம், எரிச்சல் வருது. அதுக்குப் பிறகு அந்த டிரஸ்சைத் தொடவே மாட்டேன். அதனால தான்... பக்கத்திலிருந்த கடைக்குப் போய் வேற ஷர்ட்டை வாங்கி மாட்டிக்கிட்டேன்.''

சுந்தரம் விநோதமாய் அவனைப் பார்த்தார்.

''உங்க நல்லதுக்கு சொல்றேன் மாதவன்... இந்தப் பழக்கத்தை மாத்திக்குங்க. இது வாழ்க்கைக்கு உதவாது'' என்றார்.




ஞாயிற்றுக்கிழமை!

கீர்த்தனா திக்கித் திணறி அம்மாவிடம் மாதவனைப் பற்றி கூறிக் கொண்டிருந்தாள்.

இரண்டு வருடமாய் தனக்குத் தெரியாமல் மகள் ஒருவனை காதலித்து வந்திருக்கிறாள் என்பதே அதிர்ச்சியாக இருக்க... கவலையுடன் அவள் கூறுவதை செவிமடுத்துக் கொண்டிருந்தாள்.

''என்னம்மா அமைதியாயிருக்கே?'' சங்கடத்துடன் கேட்டாள் கீர்த்தனா.

''அம்மா மேலே உனக்கு நம்பிக்கைப் போய்டுச்சா கீர்த்தி? இவ எங்கே நமக்கு கல்யாணம் பண்ணி வைக்கப் போகிறான்னு நினைச்சிட்டியாம்மா?''

பதறிப்போய் விட்டாள்.

''ஐயோ... என்னம்மா இப்படிப் பேசறே? அவர் நல்லவர்ம்மா. பிடிச்சிருந்தது. ஆனா, உங்க எல்லாரோட ஆசீர்வாதத்தோட கல்யாணம் நடக்கணும்னு தானே ஆசைப்படறோம்?''

''.....?!''

''அவரோட அம்மாவுக்கு என்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. உனக்கும் அவரைப் பிடிக்கும். சின்னக்குடும்பம். பிக்கல் பிடுங்கல் இல்லே. பணத்துக்கு நகைக்குன்னு ஆசைப்படறவங்க இல்லே. கல்யாணத்தை மட்டும் கவுரவமா நடத்திக் கொடுத்திட்டா போதும்னு சொன்னார்!''

''நீ சொல்றதும் சரின்னுதான் படுது. இந்த காலத்திலே வரதட்சணை, நகைன்னு எதிர்பார்க்காம இப்படியொரு வரன் கிடைக்கிறது கஷ்டம் தான். நானே பார்த்திருந்தாக்கூட இப்படிப்பட்ட வரனைப் பார்த்திருக்க முடியாது. ஆதங்கத்திலே ஏதோ பேசிட்டேன். உன் மனசுக்கு பிடிச்சிட்ட பிறகு வேறென்ன தகுதி வேணும் கல்யாணத்துக்கு? உங்கண்ணன் கிட்டே சொல்லி சீக்கிரம் வீட்டை மீட்டுத்தரச் சொல்லணும்!''

போன் அடித்தது.

கீர்த்தனா எழுந்துச் சென்றாள்.

எஸ்.டி.டி. கால். தீனா தான் பேசினான்.

''எப்படியிருக்கே கீர்த்தி?''

''ம்... நீங்க எப்படியிருக்கீங்க?''

''பெருமூச்சுவிட்டுக்கிட்டிருக்கேன். அஞ்சாறு வருஷம் ரிவர்ஸ்லப் போய் மறுபடி நாமெல்லாம் காலேஜ்ல படிக்க மாட்டோமான்னு இருக்கு.''

''ஹி...ஹி!'' எரிச்சலை அடக்கிக் கொண்டு சிரித்தாள்.

''இங்கே இருக்கவே முடியலே கீர்த்தி. உன் ஞாபகம் என்னை ரொம்பவே அலைக்கழிக்குது''

''வந்து... தீனா... வீட்லே கெஸ்ட் வந்திருக்காங்க... பிஸியாயிருக்கேன். ஸாரி... இப்ப என்னாலப் பேச முடியாது...''

''இட்ஸ் ஒக்கே கீர்த்தி! என்னை மறக்கலே இல்லே நீ?''

''இ... இல்லே!'' என்று ரிசீவரை வைத்தாள்.

நெஞ்சுக்கூடு பக்பக் என துடித்தது.

'பைத்தியக்காரன்... இவனோடு பெரிய தொந்தரவாய் போய்விட்டதே! இப்படியொரு ஆணிடம் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தால் மாதவன் என்ன சொல்லுவார்?'

அதுவரை இருந்த உற்சாகம் வடிந்துப்போனது. கவலை குடிக்கொண்டது.

கீர்த்தனா, வினிதா படித்த அதே கல்லூரியில், அதே வகுப்பில் தீனாவும் படித்தான்.

கீர்த்தனாவைப் பார்த்த நாள் முதலாய் காதல் பித்துப்பிடித்து அலைபவன். சமயம் பார்த்து தன் காதலையும் சொன்னான். கீர்த்தனாவிற்கு அப்படியொரு எண்ணமே இல்லை. நன்றாகப் படித்து, வேலைக்குப் போய், சம்பாதித்து தன்னை கஷ்டப்பட்டு வளர்த்த அம்மாவிடம் கொடுத்து அந்த முகத்தில் தென்படும் பெருமிதம் கலந்த சிரிப்பைக் காணும் ஆவலைத் தவிர அவள் மனதில் எந்த எண்ணமும் இல்லை. அதிலும் தீனாவைக் காணும் போதெல்லாம்.. இவன் மீது எந்த ஜென்மத்திலும் காதல் என்கிற உணர்வே வராது என்று தான் தோன்றும்.

தீனா தன் காதலை சொல்லி வற்புறுத்திக் கொண்டேயிருந்தான். அவனை அவாய்ட் பண்ண வேண்டும் என்பதற்காக 'தனக்கு திருமணத்தில் விருப்பமில்லை. காலம் முழுக்க அம்மாவுக்குத் துணையாக இப்படியே இருந்து விடப்போவதாக' கூறினாள்.

'காலம் உன் மனசை மாற்றும். அதுவரை உனக்காக காத்திருப்பேன்... எத்தனை வருஷமானாலும் காத்திருப்பேன்!' என்றான் உறுதியாக.



படிப்பு முடிந்ததும் தேவியில் சேர்ந்துவிட்டான். மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதுப்போல் அங்கிருந்து அடிக்கடி போன் பண்ணுவான்.

'என்னை மறந்து விடவில்லையே... கீர்த்தி! எப்போதும் எனக்கு உன் நினைவுதான். பெண்களுக்கு திருமணம் மிக அவசியம். அதை உணர்வாய். அப்போது நான் உன் முன் நிற்பேன்' என்பான்.

தலையிலடித்துக் கொள்வாள் கீர்த்தனா.

படிப்பு முடிந்ததும் தனியார் கம்பெனியில் வேலை கிடைத்தது. அதே அலுவலகத்தில் வினிதாவிற்கும் வேலை கிடைக்க தோழிகளுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

இரண்டு வருடத்திற்கு முன்புதான் மாதவனை சந்தித்தாள். கீர்த்தனா வேலை பார்க்கும் அலுவலகம் உள்ள அதே காம்ப்ளக்ஸில் வேறு அலுவலகத்திற்கு அஃபிஷியல் மேட்டராக வந்தவன் விழிகளில் கீர்த்தனா விழுந்து மனதில் நிறைந்துப்போனாள்.

அந்தப் பக்கத்திலும் அதே கதைதான்... என்றதால் காதல் தீ உடனே பற்றிக் கொண்டது.

தீனாவிடம் தன் காதலைப் பற்றியோ, மாதவனைப் பற்றியோ சொன்னதில்லை. அவனைப்பற்றிய சிந்தனையே தலைவலியாய் இருந்தது.

ஜானகி மகளருகே வந்தாள்.

''என்ன கீர்த்தி ஒரு மாதிரியாய்ட்டே? யாரு போன்லே?''

''என் கூட படிச்சானே... தீனா... அவன் தான். போர் அடிக்குது... வினிதா வீடு வரைக்கும் போய் வரட்டுமாம்மா?''

''ஒரு நாள் கூட அவனை பிரிஞ்சிருக்க முடியலியே... கல்யாணமானா எப்படியிருப்பியோ? போறப்ப... பால் கொழுக்கட்டை எடுத்துட்டுப் போ. அவனுக்கு ரொம்ப பிடிக்குமே! நம்ம வீட்டுக்கு வந்தாலே செய்யச் சொல்லி சாப்பிடுவாளே?''

''சரிம்மா!'' சிரித்தபடி சமையலறைக்குள் சென்றாள்.

ஆர்வமாய் ரசித்து, ருசித்து சாப்பிட்டாள் வினிதா.

என்னதான் பல் துலக்கினாலும் சிலருக்கு வாய் துர்நாற்றம் வீசும். அவர்கள் நெருங்கி வந்தாலே தூர விலகிச் செல்ல மாட்டார்களா என்ற அருவருப்பு தோன்றும்.

வாய் துர்நாற்றத்தை முற்றிலுமாக போக்க வேண்டுமா? அதற்கு ஒரே வழி; இரவில் சாப்பிட்டு முடித்ததும் வெது வெதுப்பான நீரில் உப்பைக் கரைத்து, அந்த உப்புக் கரைசலை தினமும் வாயில் ஊற்றி கொப்பளித்து வந்தால், வாய் துர்நாற்றம் முற்றிலுமாக அகன்று விடுவதுடன் பற்களும் பளிச்சென்று மின்னும். ஈறு வீக்கம், பற்கள் சேதம் எதுவும் ஏற்படாது. ஆரோக்கியமாக இருக்கலாம்.

மேற்கண்ட இந்த கை வைத்தியம் செய்தாலே போதும். பல் டாக்டர்களை தேடிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

-எஸ்.என்.எஸ்.

"சூப்பர்டி! எங்கம்மாவும் தான் செய்யறாங்க. பக்குவம் தெரியலியோ என்னவோ? இந்த டேஸ்ட் வரலே!"

"அம்மாவையே குறைச் சொல்றியா? உன்னை மலேஷியாவுக்கு பேக் பண்ணி அனுப்பினப் பிறகு தான் என்னோட அருமைத் தெரியும். சாப்பிடும்மா கீர்த்தி" என்றபடி வெங்காய பஜ்ஜி அடங்கிய பிளேட்டை டீப்பாய் மீது வைத்தாள் வினிதாவின் அம்மா பார்கவி.

"உன்னைக் குறை சொல்வேனா? பால் கொழுக்கட்டைத் தவிர மத்த ஐட்டத்தை சூப்பரா சமைக்கிறதுல உன்னை அடிச்சுக்க ஆளே இல்லையேம்மா!"

"ஐஸ் வைக்கறியா?" செல்லமாய் கோபித்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினாள் பார்கவி.

"என்ன வினிதா அம்மா சொல்றது நிஜமா? மலேஷியா அலையன்ஸ் முடிவாயிடுச்சா?"

"ஆமான்டி! தூரத்து உறவாம். எற்கனவே தெரிஞ்ச குடும்பம்ங்கறதால ஃபார்மாலிட்டீஸ் இல்லாம நேரடியா கல்யாணத்துக்கு நாள் குறிக்க ஆரம்பிச்சிடுவாங்க. அவருக்கு லீவு கிடைச்சதும் இண்டியா வந்துடுவார். உடனடியா டும்டும் தான்!"

"அவர் பேரென்ன? அவரைப் பார்த்திருக்கியா?"

"மகேஷ்! ரெண்டு வருஷம் முன்னாடி லீவுல வந்தப்ப எங்க விட்டுக்கு வந்திருக்கிறார். சூப்பரா இருப்பார்!"

வெட்கத்தைப் பாரேன்! ஹூம்... கல்யாணம் பண்ணிக்கிட்டு மலேஷியாவுக்கு பறந்திடப் போறே? அவ்வளவுதானா நம்ம ஃப்ரண்ட்ஷிப்?

"ச்சச்சே... என்ன கீர்த்தி அப்படி சொல்லிட்டே? வாரம் தவறாம போன் பண்றேன். இண்டியா வரும் போதெல்லாம் பார்க்க ஓடோடி வரமாட்டேனா? கூடிய சீக்கிரம் உனக்கும் கல்யாணமாகப் போகுது. என் பிரிவு உன்னை அந்தளவு பாதிக்காது. சரி... மாதவன் பத்தி அம்மாக்கிட்டே பேசிட்டியா?"

"இன்னைக்குதான் பேசினேன். சம்மதிச்சிட்டாங்க. அந்த சந்தோஷத்தை ஷேர் பண்ணிக்க தான் வந்தேன்" என்ற சீர்த்தனா பக்கத்திலிருந்த ஆல்பத்தை எடுத்துப் புரட்டினாள்.

"அம்மா சம்மதிப்பாங்கன்னு நானும் எதிர்பார்த்தேன்."

"அட... இது ஸ்கூல்ல சென்ட் ஆஃப் நடந்தப்ப எடுத்த ஃபோட்டோ இல்லே? நாம ரெண்டு பேரும் முதன் முதல்ல சேலை கட்டினது... அன்னைக்குதானே?"

"திரும்ப வராத அருமையான நாட்கள். நாம ஸ்கூல், காலேஜ் லைஃப்ல எடுத்த ஃபோட்டோஸ் அத்தனையும் கலெக்ட் பண்ணி ஆல்பம் போட்டிருக்கிறேன். மலேஷியாவுக்குப் போய்ட்டா... இதுதான் என் துணை!" என்றாள் நெகிழ்வாக வினிதா.

"நிஜம் தான். கவலையே தெரியாத வயசு. குழந்தைத்தனமான குறும்புகள், எதுவும் திரும்ப வராது!" ஆல்பத்தை ஆர்வமாய் புரட்டிக் கொண்டிருந்தாள்.

சட்டென ஓரிடத்தில் கண்கள் நிலைப் பெற்றது.

"இந்த ஃபோட்டோவை இன்னுமா வச்சிருக்கே?" என்றாள் ஆச்சர்யமாய்.

வினிதா எட்டிப்பார்த்தாள்.

தீனா நடுவில் நிற்க இருபக்கமும் கீர்த்தனாவும், வினிதாவும்.

"ஆமா.. இது உன் கிட்டே கூட ஒன்னு இருக்குமே!"

"அதை நான் அப்பவே கிழிச்சுப் போட்டுட்டேன்!"

"என்னால முடியாது... நீயிருக்கியே!"

"தப்பா நினைச்சுக்காதே வினிதா! இதிலே தீனா இருந்ததால தான் கிழிச்சுப்போட்டுட்டேன்!"

"புரியுது! தீனா உன்னோட சேர்ந்து ஒரு ஃபோட்டோ எடுத்துக்கணும்னு கையிலே கேமராவை வச்சுக்கிட்டு கப்ப்பல் பண்ணினான். நீ லேசிலே சம்மதிக்கலே. அப்புறம் நானும் உன் கூட நிக்கறேன்னு சொன்னப் பிறகு தான் அரை மனசோட சரின்னே! இந்த ஃபோட்டோவைப் பார்க்கிறப்பவெல்லாம் எனக்கு பழசெல்லாம் ஞாபகம் வரும். சில சமயம் தீனா மேலே ஒரு பரிதாபம் ஏற்படும். உன் மேலே இவ்வளவு காதல் வச்சிருக்கானே... உன் மனசு என்னைக்காவது மாறாதான்னு பல மைல்களுக்கு அப்பால் இருந்துக்கிட்டு ஏதோ ஒரு நம்பிக்கையிலே காத்துக்கிட்டிருக்கானே? ஆச்சர்யமாயிருக்கு!"

"எனக்கு பயமாயிருக்கு வினிதா! இன்னைக்குக் கூட அவன்கிட்டேர்ந்து போன் வந்தது."

"சொல்லிட வேண்டியது தானே? உனக்கு கல்யாணம் ஆகப்போறதைப்பத்தி."

"எ... என்னது?"

"ஏன் அலர்றே?"

"உனக்கு அவனைப் பத்தி நல்லாத் தெரியும். தெரிஞ்சுமா இப்படிப் பேசறே? அவன் [சை]க்கோ மாதிரி பிஹேவ் பண்ணிட்டிருக்கி[றா]ன். நான் வேற யாரையும் லவ் பண்ணக்கூ[டா]தா? கல்யாணம் பண்ணிக்கக் கூடாதா? நான் [ஏ]ன் அவனுக்குப் பயப்படணும்?"

"அதையே தான் நானும் சொல்றேன். நீ [ஏ]ன் பயப்படறே? எனக்கு உன்னை பிடிக்க[லே]ன்னு அந்த வருஷத்துக்கு முன்னாடியே [க]ரிச்சுனு சொல்லியிருந்தா... உனக்காக நம்பிக்[கை]யோட காத்துக்கிட்டிருக்க மாட்டான். கல்யா[ண]மே பண்ணிக்க மாட்டேன்னு சொன்னது[தா]ன் அவனுக்கு அட்வான்டேஜ். இதுக்கு [மே]லேயும் அவனோட நம்பிக்கையை வளர[விட]டாதே! அது நல்லதில்லே. அடுத்த முறை போன் பண்ணினான்னா... உண்மையப் [போ]ட்டு உடைச்சிடு!"

கீர்த்தனா அவள் சொல்வதை ஆமோதிப்பதுபோல் மெல்லத் தலையாட்டினாள்.




வினிதாவிற்கு அடுத்த பத்தாவது நாளே [தி]ருமணம் நடந்து முடிந்தது.

எல்லாமே அசுரகதியில் நடந்தன.

மாப்பிள்ளைக்கு திடீரென லீவு கிடைத்து [ஊ]ருக்கு வந்து விட்டார். அதுவும் பத்துநாள் லீவில். உடனடியாக திருமணம் நடக்க வேண்[டு]ம் என்று அவசரப்படுத்தியதால்... உடனடி[யாக] இன்விடேஷன் பிரிண்ட் பண்ணி, கொரிய[ரில்] அனுப்பி, வடபழனி கோவிலில் திரும[ண]ம், ஹோட்டல் அசோகாவில் ரிசப்ஷன் என்று [அ]வசரமாக நடந்தாலும் விமரிசையாகவே [நட]ந்து முடிந்தது.

மகேஷிற்கு இன்ஃப்ளுயன்ஸ் இருந்த[தா]ல் வினிதாவிற்கு விசா பிரச்சினை ஏதுமின்றி [எ]ல்லாம் உடனடியாக கிடைத்தது.

வினிதா கீர்த்தனாவை கட்டிப்பிடித்துக் [கொ]ண்டு அழுதாள்.

"என்னால உன் கல்யாணத்துல கலந்துக்க [மு]டியாது கீர்த்தனா. ஆனா, கண்டிப்பா இன்வி[டே]ஷன் அனுப்பணும். உன் கல்யாணத்தன்[று எ]னக்கு கோவிலுக்குப் போய் அர்ச்சனைப் பண்[ணு]வேன். நான் போன் பண்றேன். நீயும் பண்ண[ணு]ம். என்னை மறந்துடாதே கீர்த்தி!"

"ஏய்... என்னடி சொல்றே? நான் எப்படி [ம]றப்பேன்? அப்படியாப் பழகினோம்?"

பிரிய மனமின்றிப் பிரிந்தனர் தோழிகள்.

மகேஷுடன் மலேஷியாவிற்கு பறந்தாள் வினிதா.

"வர்ற வெள்ளிக்கிழமை நாங்க உங்க வீட்டுக்கு பொண்ணுப் 'பார்க்க வர்றோம்! வீட்லே சொல்லிடு" என்றான் மாதவன்.

"நிஜமாகவா?" கீர்த்தனாவின் முகத்தில் செம்மைப் படர்ந்தது.

"என்ன வெட்கமா?"

"ம்ஹூம்...!" என்றாள் இன்னும் தலைகவிழ்ந்து. "நம்ம நாட்டுப் பொண்ணுங்களுக்கே உரிய வெட்கம். ஐ லைக் இட்! எவ்வளவுதான் நாம பேசிப் பழகியிருந்தாலும் கல்யாணம்னு பேச்செடுத்ததும் வெட்கத்துல எப்படி மாறிப் போய்டுச்சு உன் முகம்?"

"......!?"

"சீக்கிரமே கல்யாணமாகி ஃபர்ஸ்ட் நைட்ல..."

"ஃபர்ஸ்ட் நைட்லா?"

"முகம் முழுக்க முத்தத்தாலேயே சிவக்க வைக்கணும்னு ஆசையாயிருக்கு கீர்த்தி!" என்றான் தாபத்துடன்.

"ச்சீ... சும்மாயிருங்க... என்னென்னமோ பேசிக்கிட்டு" அவனை நிமிர்ந்து பார்க்கக் கூட முடியாமல் கூச்சம் பிடுங்கித் தின்றது.

"ரொம்ப அழகாயிருக்கிறே வெட்கப்படும்போது."

இமைக்காமல் அவளையேப் பார்த்தான் மாதவன்.

அம்மா சொல்வதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான் பவித்ரன். அவன் மனைவி செல்வி அறைக் கதவு பக்கமாய் நின்றபடி காதில் வாங்கிக் கொண்டிருந்தாள்.

"வர்ற வெள்ளிக்கிழமை அவங்க வீட்லேர்ந்து முறைப்படிப் பொண்ணு பார்க்க வர்றாங்களாம்!" என்று சொல்லி முடித்தாள் ஜானகி.

"கீர்த்தனா... அவளாகவே ஒரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக்கிட்டா. நான் தப்புன்னு சொல்ல வரலே. நல்ல ஃபேமிலியாதான் தெரியுது! ஆனா, அவளுக்கு இவ்வளவு சீக்கிரம் கல்யாணம் பண்ணணுமா?"

"இப்பவே இருபத்தஞ்சு வயசு. இதுவே லேட்தானே பவித்ரன்?"

"அப்படியில்லே! உனக்கு நானும் கீர்த்தனாவும் தானே? நானாவது எப்பவும் உன் கூடவே இருப்பேன். ஆனா, கீர்த்தனா கல்யாணம் ஆகறவரைக்கும் தானே உன்னோட இருக்

கப் போகிறா. அதான்... இன்னும் ஒரு வருஷம் போகட்டு மேன்னு...''

''இல்லேப்பா... பொட்டைப்புள்ளைய எவ்வளவு காலம் வீட்லேயே வக்கக்க முடியும்? நல்ல விஷயங்கள் வீடுத்தேடி வரும் போது தள்ளிப் போடக்கூடாது. அப்புறம்... அவங்க உடனடியா கல்யாணம் வக்கக்க சொன்னா மறுக்க முடியாது. வீட்டை மீட்டு டாகுமெண்ட்டை சீக்கிரமே என் கையிலே கொடுத்துடு பவித்ரன்!''

''ச... சரிம்மா!'' என்றவன் மனைவியை பார்த்து எச்சில் விழுங்கினான்.

கல்யாணக் கனவுகளில் லயித்திருந்தாள் கீர்த்தனா.

'இரண்டு வருடக்காதல் முடிவுக்கு வரப்போகிறது. கல்யாணத்தில் ஜெயமாகப் போகிறது. எத்தனைப் பெண்களுக்கு காதலனையே கைப்பிடிக்கும் பாக்கியம் கிடைக்கிறது? நான் அதிர்ஷ்டசாலி!'

போன் அலறியது.

ஓடிப்போய் எடுத்தாள். தீனாதான் பேசினான்.



அதுவரை இருந்த சந்தோஷம் காணாமல் போய் பயம் பற்றிக் கொண்டது.

''எப்படியிருக்கே கீர்த்தி?''

''ம்... நல்லாயிருக்கேன்!''

''என்னை கேக்க மாட்டியா? ப்ச்... என்னால இங்கே இருக்கவே முடியலே கீர்த்தி. உன் ஞாபகம் அதிகமா வாட்டுது. உன்னோட சேர்ந்து எடுத்துக்கிட்ட போட்டோவை அடிக்கடி எடுத்துப் பார்த்துப்பேன். உன்னைப் பார்த்து எத்தனை வருஷமாய்டுச்சு? உன்னைப் பார்க்கணும் போலிருக்கு. வரட்டுமா கீர்த்தி?''

''தீனா... ப்ளீஸ் இப்படியெல்லாம் பேசாதீங்க!''

''ஏன்? நான் புதுசா எதையும் பேசலையே!''

''அதைத்தான் சொல்ல வர்றேன். இது நாள் வரை பேசினதும் தப்பு. இனிமேலும் பேசினா ரொம்ப தப்பு!''

''எ... என்ன தப்பு? நான் உன்கிட்டே தானே...?''

''ப்ளீஸ்... பேசாதீங்க! இன்னொருத்தருக்கு மனைவியாக போகிறப் பெண்ணிடம் இப்படி பேசக்கூடாது.''

''கீ..ர்..த்..தி... என்ன சொல்றே?'' ஸ்பஷ்டமாய் அதிர்ந்தான்.

''எனக்கு கல்யாணமாகப் போகுது தீனா.''

பட்டென லைன் கட்டானது.

தீனா கோபத்தில் போனை வைத்ததுப் புரிய... களைத்ததுப் போல் உணர்ந்தாள் கீர்த்தனா.

நீலாம்பிகைக்கு ஜானகியையும் மிகவும் பிடித்துப் போயிற்று. நேரடியாக விஷயத்திற்கு வந்தார்கள்.

''பாருங்கம்மா... எங்களுக்கு வரதட்சணை, நகை, சீர்னு எதுவும் வேணாம். எல்லாமே எங்க வீட்லே இருக்கு. உங்க மகளை மட்டும் அனுப்பி வைங்க போதும்! ஆனா...''

''சொல்லுங்கம்மா...!'' என்றாள் ஆர்வமாய் ஜானகி.

''எங்களுக்கு சொந்த பந்தங்கள் நிறைய. மாதவன் எனக்கு ஒரே பிள்ளை. கல்யாணத்தை மட்டும் கொஞ்சம் கிராண்டா நடத்திக் கொடுத்தீங்கன்னா...''

''உங்களை மாதிரி ஒரு மாமியார் கிடைக்க என் பொண்ணு கொடுத்து வச்சிருக்கணும்மா! இந்த வீடு மூணு லட்சம் போகும். என் பொண்ணு கல்யாணத்தை இந்த வீட்டை வித்து நீங்க சொல்ற மாதிரி சிறப்பா நடத்திடறேங்க. ஏற்கனவே இருபது பவுன் நகையும் சேர்த்து வச்சிருக்கேன்.''

''அது உங்க விருப்பம். வீடு பெரிசாதான் இருக்கு. பில்டிங் பழசு. லேண்ட் வேல்யூதான் போடுவான். அவசரத்துக்கு வித்தா அடிமாட்டு விலைக்கு இல்லே கேப்பாங்க? இப்படி பண்ணினா என்ன? மாதவா இப்படி வா!'' என்று அவன் காதில் கிசுகிசுத்தாள்.

மாதவனின் முகம் பிரகாசமானது.

''இதுவும் சரிதான்!''

ஜானகி ஆர்வமாய் அவர்களையே பார்த்தாள்.

''என்ன சொல்றேன்னா... இந்த காலத்துல உருவாக்கறது தான் ரொம்ப கஷ்டம். உருவாக்கினதை அழிக்கறதுக்கு ஒரு நிமிஷம் போதும். சொந்தமாய் ஒரு வீடு கட்டணும்ங்கறது என்னோட பல வருஷக் கனவு. இப்பதான் என் பிள்ளையால அதுவும் நனவாச்சு. இது நீங்க உங்க புருஷனோட வாழ்ந்த வீடு. பொண்ணு கல்யாணத்துக்காக விக்கறதாயிருந்தாலும் அந்த வலி...


எனக்குப் புரியும்மா! நீங்க வீட்டை வி[...] வேணாம். அதை அப்படியே உங்க பொண்[...] பேருக்கு மாத்தி எழுதிக் கொடுத்துடுங்க. பி[...] கால சந்ததிக்கு உதவும். உங்க காலம் வரைக்கு[...] நீங்க இங்கேயே இருந்துக்குங்க. கடவுள் பு[...]ணியத்துல ஏதோ நாலு காசு இருக்கு. கல்யா[...] செலவை நாங்களேப் பார்த்துக்கறோம்!''

என்று சொல்லி முடித்தாள்.

ஜானகி பேச்சு வராமல் கைகூப்பி க[...] கலங்கினாள்.

கீர்த்தனாவும் கண்ணீரில் கண்[...] பளபளக்க மாதவனைப் பார்த்து ''தாங்க்[...] என்று சத்தமின்றி உச்சரித்தாள்.

பவித்ரனும் செல்வியும் ஒருவரையொ[...]வர் பார்த்துக் கொண்ட பார்வையில் பயமிரு[...]ந்தது.




அடுத்த இரண்டு மாதத்தில் திருமண[...] என்று நல்ல நாள் பார்த்து தேதியும் குறித்த[...]யிற்று.

''எனக்கு உங்களை உடனே பார்க்கணு[...] மாதவன்.''

''என்ன கீர்த்தி... ஏதாவது பிரச்[...]னையா?''

''அதெல்லாமில்லே. ப்ளீஸ்... வாங்க[...] என்றாள்

நெகிழ்ந்த குரலில்.

அடித்து பிடித்து ஓடி வந்தான். அவ[...] விருப்பப்படி ரெஸ்டாரெண்டில் பேமிலி ரூமி[...] அமர்ந்தனர். உட்கார்ந்த அடுத்த கணமே அவ[...] தோளில் சாய்ந்து விசும்பினாள்.

திடுக்கிட்டான் மாதவன்.

''கீர்த்தி... என்னாச்சும்மா? ஏன் அழறே?''

''......!''

''சொல்லு... பதறுது.''

''தாங்க்ஸ்ங்க... ரொம்ப ரொம்[...] தாங்க்ஸ்.''

''எதுக்கு?'' புரியாமல் நெற்றி சுருங்கியது[...]

''உங்கம்மா இவ்ளோ நல்லவங்க[...] இருக்காங்களே. அம்மாவை அதே வீட்ல இரு[...]கச் சொல்லி... கல்யாண செலவெல்லாம் நீ[...]களே ஏத்துக்கிட்டு... தாங்க முடியலீங்க. எனக்[...] இப்படியொரு புருஷனும், மாமியாரும் கிடை[...]

பாங்கன்னு கனவிலேயும் நினைக்கலீங்க.''

மாதவன் அப்போதுதான் நிம்மதியாய் மூச்சு விட்டான்.

''அடி அசடு... இதுக்கா இவ்ளோ ஆர்ப்பாட்டம்? நான் என்னவோ, ஏதோன்னு பயந்துட்டேன். இதோ பார்... எங்கம்மா ரொம்ப நல்லவங்க. அடுத்தவங்க பொருளுக்கு ஆசைப்பட மாட்டாங்க. எதிலேயும் உண்மை, உழைப்பு, நீதி, நேர்மைன்னு எதிர்பார்ப்பாங்க. நல்ல மனுஷங்கன்னா அவங்களுக்காக என்ன வேணும்னாலும் பண்ணுவாங்க. ஆனா பொய் பேசறவங்களை மட்டும் ஆகாது. அம்மாவோட குணம் தான் எனக்கும். பணம், காசு முக்கியமில்லே கீர்த்தி. நல்ல மனிதர்களை சம்பாதிப்பதுதான் கஷ்டம். நீ என்னை பொறுத்தவரை சிறகில்லா தேவதை. என் தேவதைக்கு நான் தானே எல்லாம் செய்யணும்?''

கீர்த்தி அவன் தோளில் முகம் புதைத்து சட்டென கன்னத்தில் இதழ் பதித்தாள்.

''என்னடா?'' என்றான் நேசத்துடன். ''உன்னை அப்படியே இறுக கட்டிப் பிடிக்கக்கணும் போலிருக்கு. ரெஸ்டாரெண்டாச்சேன்னுப் பார்க்கிறேன்'' என்று யாரும் பார்க்காதவாறு நெற்றியில் முத்தமிட்டான் மாதவன்.

''உங்க அம்மாவை எங்க அம்மாவை விட மேலாய் கண்ணுக்குள்ளே வச்சு பார்த்துப்பேன் மாதவன்.''

''சொல்லணுமா? எனக்குத் தெரியாதா? கல்யாணப் பொண்ணா, லட்சணமா கனவுல என்னை கட்டிப்பிடிச்சு முத்தம் கொடுத்திட்டிரு... அழக்கூடாது என்ன?''

''ச்சீ.''

தோளில் முகத்தைப் போட்டு அழுத்தினாள்.

தீனாவிடமிருந்து போன்.

''சொ... சொல்லுங்க தீனா... நல்லாருக்கீங்களா?''

''கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிக்கிட்டிருந்தியே. இப்ப என்ன திடீர்னு?'' நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

கீர்த்தனாவுக்கு கோபம் வந்தது.

''இதென்ன கேள்வி? ஏன் நான் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதா?''

''உனக்காக நான் இத்தனை வருஷமா காத்துக்கிட்டிருக்கேனே?''

''நானா காத்திருக்கச் சொன்னேன்?''

''கீர்த்தி... கோபமாய் பேசறியா என்ன?''

தன்னை கட்டுப்படுத்திக் கொண்டாள் கீர்த்தனா.

''பாருங்க தீனா... இது அம்மாவும், அண்ணனும் பார்த்து முடிவு செய்தது. என் வீட்டில் ஜாதி, மதம் பார்க்கிறவங்க. காதல்னாலே வெட்டிப் போட்ருவாங்க. எனக்காக பார்த்திருக்கிற மாப்பிள்ளையை நான் இன்னும் சரியாக் கூடப் பார்க்கலே. அதுக்குள்ளே நிச்சயதார்த்தமும் நடந்தாச்சு. நான் என்ன பண்ணட்டும்?''

மறுமுனையில் அமைதி. லேசாய் மூக்கை உறிஞ்சும் சப்தம்.

'அழுகிறானா?'

கேட்கவும் பயம்.

''முடியலே கீர்த்தி. நீ எனக்குத்தான்னு கற்பனையிலேயே வாழ்ந்தேன். எல்லாமே கானல் நீர்னு தெரிஞ்சப்பிறகு தாங்கிக்க முடியலே. எப்பக் கல்யாணம்?''

''பதினஞ்சு நாள்ல.''

''அவ்வளவு சீக்கிரமாகவா?''

''ஆமா... திடீர்னு முடிவாய்டுச்சு.'' பொய் மேல் பொய் சொன்னாள்.

''மறக்காம இன்விடேஷன் அனுப்பு.''

''நிச்சயமா.''

''கல்யாணமாய்ட்டப் பிறகு நான் உனக்கு போன் பண்ண முடியாது. இல்லையா?''

''......''

''என்னை மறந்திடுவியா கீர்த்தி?''

''சேச்சே.''

''உன்னால என்னை மறக்க முடியாத அளவுக்கு ஒரு பிரசென்டேஷன் அனுப்புவேன். வச்சிடட்டுமா?''

''நீங்களும் சீக்கிரம் நல்லப் பொண்ணாப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கணும் தீனா.''

''அட்வைசா? கல்யாணமாகப் போற சந்தோஷத்துல அட்வைஸ் பண்றியா? வேணாம் கீர்த்தி. நம்பிக்கைத் துரோகம் பண்ணவங்களுக்கு அட்வைஸ் பண்ண தகுதியில்லே.''

''தீ...னா...''

''காதல் தோல்வியோட வலி தெரியுமா? உனக்குத் தெரியாது கீர்த்தி. தெரிஞ்சா அட்வைஸ் பண்ணமாட்டே. வச்சிடு.'' ரிசிவரை கவிழ்த்தினான்.

அவனிடம் தெரியப்படுத்தி விட்டோம் என்ற நிம்மதியை மீறி ஏதோ ஒரு சங்கடம் மனதை ஆக்ரமித்தது, கீர்த்தனாவுக்கு.

மாதவன் விருப்பப்படி வேலையை ரிசைன் செய்து விட்டாள் கீர்த்தனா. கல்யாண வேலை நெருங்கி விட்டதால் ஏற்பாடுகளை மும்முரமாய் கவனித்துக் கொண்டிருந்தாள்

ஜானகி. கீர்த்தனா அழைப்பிதழ் கொடுக்கச் சென்றிருந்தாள்.

"அலங்க வேண்டாம்னு சொன்னா... அதுக்காக நாம சீர் செய்யாம அனுப்ப முடியுமா? குக்கர் வகைகளை வாங்கிக் கொண்டு வந்து விடலாம். தயாராயிரு" என்று மருமகளிடம் சொல்லிவிட்டு, தானும் தயாராகி விட்டாள் ஜானகி.

"ரெடியாய்ட்டியா செல்வி? இன்னும் கல்யாணத்துக்கு எழெட்டு நாள்தான் இருக்கு. வீட்டு டாகுமெண்ட்டை கல்யாணத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பே ஒப்படைக்கிறதா வாக்குக் கொடுத்திருக்கேன். நாளைக்கு நல்ல நாள். கொடுத்தாகணும். இன்னைக்கு டாகுமெண்ட் டோட வர்றேன்னு சொன்னானே பவித்ரன்... இன்னும் வரலையாம்மா? எவ்வளோ வேலையிருக்கு. நாளையிலேர்ந்து உறவுக்காரங்களுக்கெல்லாம் அழைப்பிதழ் வைக்க ஆரம்பிக்கணும். புடவை எடுக்க காஞ்சிபுரம் போகணும். ஆச்சாம்மா... ரெடியாய்ட்டியா?" புடவையை சரி பண்ணிக் கொண்டே செல்வியின் அறைக்குள் நுழைந்தவள் ஆச்சர்யமானாள்.

கட்டிலில் வலக்கையை நெற்றியில் குறுக்கே வைத்துக் கொண்டு மல்லாந்து படுத்திருந்தான் பவித்ரன்.

"பவித்ரா... நீ எப்ப வந்தே? செல்விக்கிட்டே உன்னைப் பத்திதானே கேட்டுக்கிட்டிருந்தேன். நீ வந்துட்டேங்கறதையே சொல்லலையே."

அப்போதும் அசையவில்லை பவித்ரன்.

செல்வியும் உடை மாற்றாமல் பேயறைந்தாற்போல் கணவனின் அருகில் அமர்ந்திருந்தாள்.

சூழ்நிலையின் வித்தியாசம் உணர்ந்த ஜானகி அவர்களின் அருகில் சென்றாள்.

பவித்ரனின் கண்களில் கண்ணீர் காது வரை கோடு போட்டிருக்க...

திடுக்கிட்டாள்.

"என்னப்பா... ஏன் அழுதுக்கிட்டிருக்கே?"

பவித்ரன் சட்டென எழுந்து அம்மாவின் கையைப் பற்றிக் கொண்டு கதறினான்.

"ஐயோ... என்னப்பா... என்ன ஆச்சு? ஏன் இப்படி அழறே?"

"நா... நான் சொல்றதைக் கேப்பியா?"

"என்ன சொல்லு?"

"கீர்த்தியோட கல்யாணத்தை நிறுத்திடும்மா."

"எ... என்னது?"

"இல்லேன்னா ஒரு வருஷத்துக்கு தள்ளி வச்சிடும்மா."

"எதுக்காக?" என்றாள் சினத்துடன்.

"எ... என்னால டாகுமெண்ட்டை..."

"டாகுமெண்ட்டை?"

"திருப்பித் தர முடியாதும்மா."

"....." விக்கித்துப் போனாள் ஜானகி.

"பிஸினஸ்ல ஏகப்பட்ட நஷ்டம். என்னால பணம் கட்ட முடியலே. வட்டிக் குட்டிப் போட்டு அடகு வச்ச அமவுண்ட்டை விட அஞ்சு மடங்கு அதிகமாய்டுச்சு. ஆறுமாசம் முன்னாடியே ஏலத்துக்கு விட்ருவேன்னு நோட்டீஸ் கொடுத்தான். நான் எப்படியாவது மீட்டுடலாம்னு ஆறுமாசம் கெடு கேட்டேன். ஆறுமாசம் கெடு முடிஞ்சுப் போச்சு. எங்கெங்கேயோ கேட்டுப் பார்த்தேன். பணம் கிடைக்கலேம்மா. எனக்கு கொஞ்சம் டைம் குடும்மா. நான் பிஸினஸ் பண்ணி எப்படியாவது கீர்த்திக்கு கல்யாணம் பண்ணி வச்சிடறேன்ம்மா. என்னை மன்னிச்சிடும்மா."

"அடப்பாவி. என் தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டுட்டியே. நான் என்னப் பண்ணுவேன்? ஐயோ... மாப்பிள்ளைக்கு என்ன பதிலை சொல்லுவேன்?"

"நம்ம கீர்த்திக்கு இதை விட நல்ல இடமா... நான் பார்த்து..."

"நிறுத்துடா ராஸ்கல்."

முகத்தில் அனல் பறக்க வாசலில் நின்றிருந்தாள் கீர்த்தனா.



## எங்கே வைக்கலாம்...!

காய்கறி, பழவகைகள் ஆகியவற்றை கண்டிப்பாக பிரிட்ஜில் வைக்க வேண்டிய அவசியமில்லை. ஆரஞ்சு, வாழைப்பழம், தக்காளி, அன்னாசி, ஆப்பிள் போன்றவைகளை மிதமான ஈரமுள்ள இடத்தில் வைத்தால் போதும். அல்லது தண்ணீரில் நனைத்த துணியை இவைகள் மேல் போட்டு வைத்தாலே போதும். கேரட், கீரை வகைகள், கொத்தமல்லி, வெள்ளரிப்பிஞ்சு, கோஸ், கத்தரிக்காய் போன்றவைகளை கண்டிப்பாக பிரிட்ஜில் வைக்கவேண்டும்.

-வச்சலா பார்த்தசாரதி.





நண்பர்களுக்கு அழைப்பிதழ் கொடுத்துவிட்டு வீடு திரும்பியவளின் காதில் அவர்கள் பேசியது அத்தனையும் தெளிவாய் விழுந்தது.

"கீ...ர்...த்...தி." என்றான் பவித்ரன்.

"என்ன கீர்த்தி... அவர் உனக்கு அண்ணன். கொஞ்சம் கூட மரியாதையில்லாம..." பொருமினாள் செல்வி.

"அ... மரியாதை... இவருக்கா? கொஞ்சம்... கொஞ்சமாவது என் வாழ்க்கையைப் பத்தி அக்கறை இருந்திருந்தா இப்படி பண்ணியிருப்பியா? ஏற்கனவே அழிச்சதுப் பத்தாதுன்னு வீட்டையும் கோட்டை விட்டு நடுத்தெருவிலே நிக்க வச்சிட்டியே. நீயெல்லாம் மனுஷனா? த்தூ."

அவ்வளவுதான்.

பவித்ரன் சமையலறை நோக்கி ஓடினான். கெரசின் டின்னை எடுத்து அப்படியே தலைவழியே கவிழ்த்துக் கொண்டு தீப்பெட்டியை தேடினான்.

ஜானகியும், செல்வியும் பதறிக் கொண்டு ஓடினர்.

"டேய் பவித்ரா... என்ன காரியம் பண்றே?"

"ஐயோ... என்னங்க..."

"விடும்மா... மானமே போன பிறகு எதுக்கும்மா இந்த உயிர்? எனக்குப் பின்னாடி பிறந்தவ... என்னவெல்லாம் பேசறா? கேட்டுக்கிட்டு தானே இருந்தே? உனக்கு நான் தேவையில்லே... அப்படித்தானே?"

"பணமில்லேன்னா நாய் கூட மதிக்காது. நீங்க என்ன வேணுமின்னா பண்ணீங்க? நஷ்டம் வரும்னா பிஸினஸ் பண்ணுவாங்க? எங்க நேரம் சரியில்லே. ஏங்க... நீங்க மட்டும் போய்டலாம்னு முடிவுப் பண்ணிட்டீங்களா? நீங்க இல்லாம நான் மட்டும் இருந்து என்ன பண்ணப் போறேன்? இதுதான் முடிவுன்னு ஆகிட்டப் பிறகு நீங்க மட்டும் ஏன் போகணும்? வாங்க நாம ரெண்டு பேரும் சேர்ந்தேப் போகலாம்" செல்வி கணவனை கட்டிக் கொண்டு அழுதாள்.

பயந்து போனாள் ஜானகி.

"ஐயோ... ரெண்டு பேரும் சேர்ந்து என்னைக் கொல்லாதீங்க. பணம் இன்னைக்கு வரும், நாளைக்குப் போகும். ஆனா, உயிர்ப் போனா திரும்ப வருமா? போடா... போய் முதல்லக் குளி. எனக்கு நீயும் முக்கியம்டா. க... கல்யாணத்தை நிறுத்திடலாம்."

"அ...ம்...மா..." கீர்த்தனாவின் கையிலிருந்த அழைப்பிதழ்கள் கீழே விழுந்து சிதறின.



ஜானகி மகளிடம் கெஞ்சினாள்.

"அழுதுக்கிட்டே இருந்தா எப்படிம்மா? எந்திரிச்சி சாப்பிட வாம்மா!"

".....!"

"சொன்னாக்கேளு... சாப்பிட வா!" கீர்த்தனாவின் முதுகைத் தொட்டாள்.

சட்டெனத் திரும்பி அவள் கையைத் தட்டி விட்டாள்.

"தொடாதே!"

"கீர்த்தி... என்னையா, அம்மாவையா தொடாதேங்கிறே?" அதிர்ச்சியும் அழுகையுமாய் கேட்டாள்.

"அம்மாவா, நீயா? நீ உன் பிள்ளைக்கு மட்டும் தான் அம்மா! எனக்கில்லே!" அழுதழுது முகம் வீங்கி இருந்தது.

"கீ..ர்..த்..தி!"

"அப்பா சேர்த்து வச்சிட்டுப் போன பணத்தையெல்லாம் அழிச்சவன் உன் பிள்ளை. நான் நல்லாயிருக்கணும்னு நினைச்சிருந்தா அவன் கேட்டதும் டாகுமெண்ட்டை தூக்கிக் குடுத்திருப்பியா?"

"இப்படியாகும்னு நினைச்சேனா?"

"அவன் கைக்குப் போனா வேற எப்படியாகும்? இதோ... இன்னைக்கு என்னை அம்போன்னு நிறுத்தி வச்சிட்டீங்களே...!"

".....?!"

"கல்யாணம் நிச்சயமாகி, இன்விடேஷன் எல்லாம் இஷ்யூப் பண்ண ஆரம்பிச்சு, இப்ப கல்

யாணத்தை நிறுத்திட்டீங்களே... என் வலி என்னன்னுப் புரியுதாம்மா?''

''என்னை என்னடிப் பண்ணச் சொல்றே? மணமேடை ஏறாம பாதியிலேயே நிக்கறாளே என் பொண்ணுன்னு உனக்காக அழுவேனா? இல்லே... எல்லாத்தையும் தொலைச்சிட்டு, உயிரையும் மாய்க்கத் துணிஞ்சிட்ட அவனுக்காக அழுவேனா? வயசான காலத்துல இப்படியொரு வேதனையா எனக்கு? வயசுப் பொண்ணை கரையேத்த வழித்தெரியாம தவிக்கிற இந்தத் தாயோட வலியையும் கொஞ்சம் புரிஞ்சுக்க கீர்த்தி'' ஜானகி கதறி அழுதாள்.

மாதவன் சொல்லச் சொல்ல... நீலாம்பிகை முகம் களித்தாள்.

''என்னது?''

''ஆமாம்மா... வீடு ஏலத்துக்கு வரப்போகுதாம்!''

''அந்தப் பொம்பளை அப்படிப் பேசினாளே! வீடு பொண்ணுக்குதான்... அப்படி இப்படின்னு! அவ்வளவும் பொய்யா? பொண்ணோட கல்யாண விஷயத்துல பொய் சொல்ல எப்படிப்பா மனசு வரும்? மோசமான குடும்பமா இருக்கும் போலிருக்கே?''

''...?!''

''நாம எவ்வளவு கவுரவமா நடந்துக்கிட்டோம்? கட்டினப் புடவையோடப் பொண்ணை அனுப்பி வைங்கன்னு சொன்னோமே! அப்பவே, 'அம்மா, எங்களிடம் பணமில்லே... பெரிய மனசுப் பண்ணி என் பொண்ணை ஏத்துக்குங்கன்னு சொல்லியிருந்தா... எதையும் எதிர்பார்க்காம நாமளே எல்லா செலவையும் ஏத்துக்கிட்டிருப்போமே! வீட்டை வித்து கல்யாணம் பண்ணணும். அது இதுன்னு சொல்லி நம்மளை முட்டாள் ஆக்கிட்டாளே!'' மனசு ஆறவில்லை நீலாம்பிகைக்கு.

''இல்லேம்மா... வீடு ஏலத்துக்கு வரப் போற விஷயம் அந்தம்மாவுக்கு கடைசி நேரத்திலேதான் தெரியுமாம். எல்லாம் கீர்த்தியோட அண்ணன் பண்ணின குளறுபடிதானாம்.''

''அதை நீயும் நம்பிட்டியா? தாய்க்குத் தெரியாம எந்த விஷயம் நடக்கும்? அடகு வச்ச வீட்டுக்கு பணம் கட்டலேன்னா... வீடு தேடி வந்து எச்சரிக்கைப் பண்ண மாட்டாங்களா? அவ ஒண்ணும் தெரியாத மாதிரி நடிக்கிறா. நம்மளை மாதிரி ஒரு ஏமாளி குடும்பம் கிடைச்சதும் பட்டையா நாமம் போட நினைச்சிட்டா. அதனாலதான் அழைப்பிதழ் கொடுக்க ஆரம்பிச்சிட்ட பிறகு விஷயத்தைப் போட்டு உடைச்சிருக்கா. அப்பதான் கவுரவத்துக்கு பயந்து கல்யாணத்தை நிறுத்த மாட்டோம்னு! ஆனா, அவளுக்கு நல்லப் பாடத்தைப் புகட்டணும்.''

''என்னம்மா பண்ணப் போறீங்க?''

''உடனே கல்யாணத்தை நிறுத்து!''

''அ..ம்..மா!''

''ஏன்டா அலர்றே? உனக்கென்னடா ஆம்பளை. அவளை விட ஆயிரம் மடங்கு நல்லப் பொண்ணாப் பார்த்து நான் கட்டி வைக்கிறேன்.''

''பாவம்மா கீர்த்தனா! அவளை ஒரு பகடைக்காயா வச்சு அவளோட அம்மாவும், அண்ணனும் விளையாடினதுக்கு அவளை தண்டிக்கணுமா?''

''அதுக்காக?''

''கீர்த்தனாவை மறந்து என்னால வேறொருப் பெண்ணோட நிச்சயமா வாழ முடியாதும்மா!''

''மா..த..வா!''

''இந்த கல்யாணம் நடக்கணும்மா ப்ளீஸ்... எனக்கு கீர்த்தனா வேணும். ரொம்ப நல்லவம்மா! உன்னை நல்லா பார்த்துக்குவா. அவளை மாதிரி ஒரு மருமகள் கிடைக்கிறது கஷ்டம்மா!'' மாதவன் கெஞ்சினான்.

''எப்படி மாதவன்? இவ்வளவுப் பெரிய துரோகம் பண்ணின குடும்பத்தோட சம்பந்தம் வச்சுக்கச் சொல்றியா?''

''குடும்பம் வேண்டாம். கீர்த்தனா மட்டும் இந்த வீட்டுக்கு வந்தாப் போதும். ஒரு பெண்ணை காதலிக்க கைவிட்ட பாவம் எனக்கு வேண்டாம்மா! கீர்த்தனாவோட வீட்டைச் சேர்ந்தவங்க யாரும் கல்யாணத்துக்கு வரக்கூடாது. அவ வீட்டைச் சேர்ந்தவங்க மட்டுமில்லே... அவங்க உறவுக்காரங்க, நண்பர்கள்னு யாரும் வரக்கூடாது. கீர்த்தனா எல்லோரையும் தலை முழுகிட்டு வரணும்னு கண்டிஷனா சொல்லிடலாம். கீர்த்தனா சம்மதிப்பா. அந்த குடும்பத்துக்கு இதைவிடப் பெரிய தண்டனை வேற என்ன தரமுடியும்?''

''நீ சொல்றதும் சரிதான். பாவம் கீர்த்தனா நல்லப் பொண்ணு! அவளை தண்டிக்கறது தப்புதான்'' என்றாள் யோசனையாய்.

''பணத்திற்கா ஆசைப்பட்டோம்? நல்ல உறவுகளை சொத்தா நினைத்தோம்! ஆனா, நம்மளையே முட்டாளாக்கிட்டாங்க. அப்படிப்பட்டவங்களுக்கு நல்ல பாடம் கற்பிக்கணும். கீர்த்தனா இந்த விஷயத்திலே தெளிவான முடிவு எடுக்கணும்ங்கறது முக்கியம்'' என்றாள் முகம் இறுக.

''ஏ... என்னங்க சொல்றீங்க?'' அதிர்ச்சியுடன் மாதவனை ஏறிட்டாள் கீர்த்தனா.

''ஆமாம்... உன் வீட்டைச் சேர்ந்தவங்க செய்த தப்புக்கு உன்னை தண்டிக்க விரும்பலே. அதே நாள்ல நம்ம கல்யாணம் நடக்கும். ஆனா, உன் வீட்டைச் சேர்ந்தவங்க யாரும் கல்யாணத்துக்கு வரக்கூடாது. ஒட்டுமொத்தமா எல்லோரையும் நீ தலை முழுகிட்டு கட்டினப் புடவையோட வரணும். இதிலே உனக்கு சம்மதம்னா... நம்ம கல்யாணம் நடக்கும்.''

''இந்த சூழ்நிலையிலும் என்னை ஏத்துக்க நீங்களும், உங்க அம்மாவும் முன் வந்தது மிகப் பெரிய விஷயம், நானே எதிர்பார்க்கலே. அதுக்காக காலம் முழுக்க நன்றியோட இருப்பேன். ஆனா...''

''ஆனா?''

''அண்ணன் செஞ்ச தப்புக்கு எங்கம்மாவையும் தண்டிக்கறது நியாயமா? பெத்தப் பொண்ணோட கல்யாணத்துக்கு வராதேன்னா எப்படிங்க?''

''இதோ பார்! உன் நிலைய கொஞ்சம் யோசி! நடுத்தெருவிலே உன்னை நிக்க வச்சிட்டாங்க. இன்விடேஷன் இஷ்யூ பண்ணினப் பிறகு கல்யாணம் நின்னுப்போனா... அந்தப் பொண்ணுக்கு சமூகம் கொடுக்கிற பெயர் என்ன? உன்னைப்பத்தி உன் குடும்பத்திலே யார் கவலைப்பட்டாங்க? கீர்த்தி உன்னை நான் ஒருமனப்பூர்வமா நேசிச்சேன். உன் பணமோ, வீடோ எதுவுமே தேவையில்லே. ஆனா, என்னையும் எங்கம்மாவையும் நாய்க்கு பிஸ்கட் காட்டற மாதிரி வீட்டைக் காட்டி அவமானப்படுத்தின உங்கம்மாவை மன்னிக்க நாங்கத் தயாரயில்லே.

உங்கம்மாவுக்குத் தெரியாம எதுவும் நடக்க வாய்ப்பில்லே. திட்டம் போட்டு எங்களை ஏமாத்திட்டாங்க. பிள்ளைதான் முக்கியம்னு நினைக்கும் அம்மா வேண்டுமென்றால் என்னை மறந்து விடு! கட்டினப் புடவையோட என்னை ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கும் நான் வேண்டுமென்றால்... உன் குடும்பத்தைத் தலைமுழுகிட்டு வா!'' என்று முடிவாய், உறுதியாய் கூறிவிட்டு பைக்கை சீற விட்டு புறப்பட்டான் மாதவன்.

கீர்த்தனா பல்லிடுக்கில் மாட்டிக்கொண்ட துணுக்கைப் போல் அவஸ்தைப் பட்டாள்.

'புகுந்த வீடா?

பிறந்த வீடா?

மாதவனா?

அம்மாவா?'

'யார் எனக்குத் தேவை?'



இதயத்தை பாறாங்கல்லால் வைத்து நசுக்குவதுப் போல் வேதனை எழுந்தது ஜானகிக்கு.

கீர்த்தனா, மாதவன் சொன்னதை கவற்றைப் பார்த்தபடி சொல்லி முடித்தாள்.

''இப்ப நான் என்னப் பண்றதுன்னு எனக்குப் புரியலே!''

ஜானகி பொங்கி வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

''புத்திசாலித்தனமா முடிவெடு கீர்த்தி!''

''...!?''

''ஏதோ கடவுளோட கருணை உன்மேலே இருக்கிறதாலதான் உனக்கு இப்படியொரு வாழ்க்கை கிடைச்சிருக்கு. நான் இருக்கிற நிலைமையிலே உனக்கொரு வாழ்க்கைய ஏற்படுத்தி தரமுடியும்னு தோணலே!''

''ஏன், உன் பிள்ளை இருக்காரே! அவரே எனக்கு நல்ல மாப்பிள்ளையாப் பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கறேன்னு சொன்னாரே!'' என்றாள் நக்கலாய்.

''அவனா? மொதல்ல அவனோட பொண்டாட்டிய காப்பாத்தறானாங்கறதே சந்தேகம்!''

''புரியுதுல்லே? அப்புறம் எப்படி நம்பி வீட்டு டாகுமெண்ட்டை கொடுத்தே என்னை இப்படி நிக்க வைக்கவா?''

''என் மேலே கோவமாயிருக்கே. தப்பா நினைச்சிட்டே! பரவாயில்லே. இனி நடக்க வேண்டியதைப் பார்ப்போம். நீ என்ன முடிவு எடுக்கப்போறே?''

''எனக்கு கல்யாணம் வேண்டாம். தலைவிதியேன்னு உங்களோடவே இருந்துடறேன்.''

''முட்டாள்தனமாப் பேசாதே கீர்த்தி! இந்த வீட்லே இருக்க ஒரு மாசம் வரைக்கும் தான் கெடு! பவித்ரன் மாமியார் வீட்டோடப் போய்டப் போறான். நானும் அவனோடதான் போயாகணும். நீயும் அங்கே வந்து இருக்கறதுன்னா... சரியாயிருக்காது கீர்த்தி!''

''ஏன் அங்கே இருக்கணும்? நாம ரெண்டு பேரும் தனியா வீடு பார்த்துப் போய்டலாம். நான் மறுபடி வேலைக்குப் போறேன்!''

''இல்லே... வேணாம். முட்டாள்தனமாப் பேசாதே! கடவுள் எப்பவாவதுதான் நல்ல சந்தர்ப்பத்தைத் தருவான். பயன்படுத்திக்கணும். மாதவனும், அவங்கம்மாவும் ரொம்ப நல்லவங்க. இந்த காலத்திலே அவங்களை மாதிரி உறவுகள் அமையறது அபூர்வம்.''

''அதுக்காக... நீ கூட இல்லாம ஒரு அனாதை மாதிரி கல்யாணம் நடக்கணுமா?''

''நான் செத்துப் போய்ட்டேனா... நீ அனாதை தானே?''

''அம்மா!!''

''அப்படி நினைச்சுக்க. பொண்ணாப் பொறந்த யாருக்குமே பிறந்தவீடு அந்நியம் தான்! அவங்கக் கோபம் நியாயமானது. அப்பக் கூட உன்னைக் கைவிடலியே! அதுதான்டி தெய்வ கருணை! நீ எங்கே இருந்தாலும் இந்தத் தாய்மனசு கடவுள்கிட்டே வேண்டிக்கிட்டேதான் இருக்கும். போம்மா... போய் சரின்னு சொல்லு! நாங்கள்லாம் கல்யாணத்துக்கு வரமாட்டோம்னு சொல்லு. என் பொண்ணுக்காக இந்த உதவியைக் கூட செய்யலேன்னா எப்படி? பத்து மாதம் சுமந்து பெத்தவளுக்கு அட்சதை போட உரிமையில்லே. சுமந்த வயித்திலே சூடு வைக்கிற மாதிரியிருக்குடி. எனக்கு வந்த நிலைமை யாருக்கும் வந்துடக்கூடாது பகவானே'' அடிவயிற்றிலிருந்து துக்கம் பீறிட்டு வர... கேவல் வெடித்து அழுதாள் ஜானகி.

கீர்த்தனாவின் உள்ளம் கசிந்தது.

திருமணத்திற்கு இரண்டு நாள் முன்னதாகவே மாதவன் அறிவுரைப்படி வீட்டை விட்டு வெளியேறி, அவன் உறவினர் வீட்டில் தங்க வைக்கப்பட்டாள்.

எல்லாருமே அந்நிய முகங்கள்.

நீலாம்பிகை அவளுக்காக வாங்கி வைத்திருந்த நகைகளையும், பட்டுப்புடவைகளையும் கொடுத்தாள்.

தன் சொந்தபந்தங்கள் இருந்தும், பக்கத்தில் யாருமின்றி, வேறு யார் யாரோ வந்து சாப்பாடு கொடுப்பதும், டிரஸ் பண்ணி விடுவதுமாய்... கீர்த்திக்கு எதிலுமே மனசு ஈடுபடவில்லை.

விடிந்தால் திருமணம்.

அம்மா தன்னையே நினைத்து கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பாள் என்றுப் புரிந்தது. அழுகைக் குமுறிக் கொண்டு வந்தது. பக்கத்தில் யார் யாரோ படுத்திருந்ததால், அழக்கூட முடியவில்லை.

''பொண்ணோட அம்மா, அப்பால்லாம் எங்கே? யாரையுமேக் காணோம்? வீட்[...] விட்டு ஓடி வந்திடுச்சா?'' யாரோ ஒரு பெ[...] மணி கிசுகிசுக்க...

''அது ஒரு பெரிய கதை! சரியான டு[...] கர் பார்ட்டியாம். இதை செய்யறேன், அ[...] செய்யறேன்னு ஏமாத்திட்டாங்களாம். நீல[...] பிகை நல்ல மனசுக்காரி. பொண்ணை மட்[...] எடுத்துக்கிட்டு உறவை வெட்டி விட்டுட்[...] பொண்ணு கொடுத்து வச்சவ. இந்த காலத்[...] யாருக்கு கிடைக்கும் இப்படியொ[...] வாழ்க்கை?''

கீர்த்தனாவின் காதில் இந்தப் பேச்சு து[...] யமாகவே விழுந்தது.

இன்று இரண்டு பேர் பேசுகிறார்க[...] நாளை?

'அம்மா... உன்னால் நானும் அசிங்க[...] டப் போகிறேன். வருகிற அத்தனை பே[...] இதே கேள்வியை கேட்கப் போகிறார்கள். ந[...] எல்லோர் வாய்க்கும் அவலாகப் போகிறே[...] மோசக்காரி என்ற பட்டப் பெயர் உனக்கு!' க[...] ணீர் காதுமடலைத் தொட்டது.

வினிதா இருந்திருந்தால் எவ்வளவோ [...]

## சிக்ஸ் இன் ஒன் கோவில்

**நீ இன் ஒன் டேப்ரிக்கார்[...] போல் சிக்ஸ் இன் ஒன் கோவில் இரு[...] கிறது தெரியுமா?**

**அதுதான் கோயம்புத்தூர் சூலூ[...] அருகில், திருச்சி பாதையில் உள்[...] கோவை குமரன் கோட்டம்- ஆறுபடை[...] விடு, அருள்மிகு சுவாமிநாத சுவா[...] திருக்கோவில்!**

**முருகப் பெருமானின் ஆறுபடை [...]டுகளான சுவாமிமலை, பழனி, திருச் [...]செந்தூர், திருத்தணி, பழமுதிர்ச் [...]சோலை, திருப்பரங்குன்றம் அனைத் [...]துமே இந்த ஒரே கோவிலில் ஒரே இடத் [...]தில் சுற்று சன்னதிகளாக அற்புதமாக [...]அமைக்கப்பட்டு உள்ளது. ஆகம [...]விதிப்படி இப்படி ஒரு கோவில் எங் [...]குமே காணமுடியாது.**

-ஆர். ரங்கநாயகி, மதுரை-18.

ஆறுதலாயிருந்திருக்கும். அவளுமில்லை.

அலங்கரிக்கப்பட்டாள்! அறிமுகமே[...] லாத பெண்கள் மத்தியில்... அலங்கரிக்கப்[...] வது சங்கோஜமாயிருந்தது. கிண்டல் இல்[...] கேலி இல்லை. இயந்திரத்தனமாய் இருந்த[...]

''பொண்ணை அழைச்சிட்டு வாங்கோ[...]'' ஐயர் குரல் கொடுக்க அழைத்து வரப்பட்டா[...]

சில சம்பிரதாயங்கள் அரங்கேறியது.

''பொண்ணோட அம்மா, அப்பாவை[...] பிடுங்கோ.''

''பொண்ணுக்கு யாருமில்லே ஐயரே[...]''

''அக்கா, அண்ணன் இருந்தா கூ[...] டுங்கோ!''

''யாருமே இல்லேன்னு சொல்றேனே!''

''ஓ...!'' என்று அவளை இரக்கத்துடன் [...]ரு பார்வைப் பார்த்து [...]விட்டு, ''உங்கள்ல [...]யாரையாவது அம்மா, அப்பா ஸ்தானத்துல உக்[...]கார வைங்கோ'' என்[...]றார்.

யாரோ ஒரு [...]ஜோடி உட்கார வைக்[...]கப்பட்டு, அவர்களை [...]நமஸ்கரித்து, அவர்கள் [...]அவளை தாரை வார்த்[...]துக் கொடுத்து...

ஒரு வழியாய் [...]கழுத்தில் தாலிக் கட்டியாயிற்று. தானொரு [...]அனாதை என்பதுப் [...]போன்ற உணர்வுதான்



தன் நண்பர்களிடம் தன் காதல் மனைவியை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தான்.

எல்லோரும் நீலாம்பிகையையும், மாதவனையும் கீர்த்திக்கு வாழ்க்கைக் கொடுத்ததற்காக வாயாரப் புகழ்ந்தார்கள்.

எங்காவது ஒரு மூலையில் அம்மா மறைந்திருந்து தன்னைப் பார்க்கிறாளோ என்ற ஆவலில் இங்குமங்கும் கண்களை அலைய விட்டாள்.

''என்ன கீர்த்தி... யாரைத் தேடறே?'' என்றான் மாதவன்.

''ஒ... ஒண்ணுமில்லே...''

[...]மலோங்கியிருந்தது.

நீலாம்பிகையின் உறவினர்கள் கூட்டம், கீர்த்தனாவின் அலுவலக நண்பர்கள் கூட்டமும் தான் வந்திருந்தனர்.

பெண் வீட்டு சைடில் யாரும் திருமணத்திற்கு வரவில்லை என்ற செய்தி மண்டபம் முழுக்கப் பரவி விட்டது.

அலுவலக நண்பர்கள் இவளிடம் துக்கம் விசாரிப்பதுப் போல விசாரித்தனர்.

''கீர்த்தி... நாங்க கேள்விப்பட்டது [...]ஜமா? அதனாலதான் உங்கம்மாக் கூட வரலயா?''

கூனிக்குறுகிப் போனாள் கீர்த்தனா.

மாதவன் குதூகலமாயிருந்தான்.

கட்டில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாதவன் காதல் மனைவிக்காக காத்திருந்தான்.

கீர்த்தனா அறைக்குள் தள்ளி விடப்பட்டு கதவு சார்த்திக் கொள்ளப்பட்டது.

பால் சொம்பை டீப்பாய் மீது வைத்து விட்டு அவன் காலில் விழப்போனவளை தடுத்து நிறுத்தி பக்கத்தில் அமர்த்திக் கொண்டான்.

''எதுக்கு ஃபார்மாலிட்டியெல்லாம்.''

''....?!''

''என்ன இவ்வளவு வெட்கப்படறே? ரொம்ப சந்தோஷமாயிருக்கு கீர்த்தி. காதல் கல்யாணத்துல முடியறதுனா பெரிய விஷயம் தான்... இல்லையா?'' அவளின் கையை எடுத்து தன் கைகளுக்குள் பொத்திக் கொண்டான்.

கட்டில் அலங்காரம், ஜாதிமல்லியின் மயக்கும் மணம், மெல்லிய விளக்கு வெளிச்சம், மன்மதன் போல் காதல் கணவன்... இதெல்லாவற்றையும் விட மனசு தன் வீட்டிற்கு ஓடியது.

'இந்த சடங்கு என் வீட்டில் நடந்திருக்குமல்லவா? எல்லாம் சரியாய் நடந்திருந்தால்?'

''அம்மா ரொம்ப ஆச்சாரம் பார்ப்பாங்க. உன் மேலே அஃபெக்ஷன் இருந்தாலும் உன்கிட்டம் பர்ஃபெக்ஷன் எதிர்பார்ப்பாங்க. யார் வந்தாலும் பணிவா, மரியாதையா நடந்துக்கணும்.

காலையிலே எந்திரிச்சிடணும். குளிச்சிட்டு தான் மத்த வேலை செய்ய ஆரம்பிக்கணும். இது உன் வீடு. அதனால எல்லாத்தையும் நீதான் பார்த்துக்கணும். அம்மா ஒரு பேஷண்ட்! அவங்களை எந்த வேலையும் செய்யவிடாம ரெஸ்ட் குடு. அப்புறம் உன் புருஷனை இப்ப குழந்தை மாதிரி நினைச்சு, மடியிலேப் போட்டு...'' அவன் ஆசையாய் சொன்னான்.

''எங்கம்மாவை மட்டுமாவது கல்யாணத்துக்கு வர அனுமதிச்சிருக்கலாம். ஒரு அனாதையைப் போல் என் திருமணம் நடந்திருக்க வேண்டாம்!'' என்றாள் திடீரென்று.

இதை... அதுவும் இந்த நேரத்தில் பேசுவாள் என்று எதிர்பார்க்காத மாதவனுக்கு கோபம் சுருசுருவென ஏறியது.

மெல்ல எழுந்து ஜன்னலருகேச் சென்றான். திரைச்சீலையை விலக்கினான்.

வெள்ளித்தட்டைப் போல் பவுர்ணமி நிலா... தகதகத்தது.

அவன் பின்னால் வந்து நின்றாள் கீர்த்தனா.

மல்லிகையின் வாசமும், மெல்லிய கொலுசு சப்தமும் அவள் பின்னால் நிற்பதை சொல்ல.. திரும்பாமலேயே நின்றான்.

'இந்த நேரத்தில் கூடவா அம்மாவைப் பற்றிய நினைப்பு? எங்களை அவமானப்படுத்தியது கூட பெரிதாய் தெரியவில்லை இவளுக்கு!' மனம் வெதும்பினான்.

''தப்பா நினைச்சுக்காதீங்க. மண்டபத்திலே ஒருத்தர் விடாம எங்க குடும்பம் வராததுப் பத்திதானே பேசினாங்க? மனசுக்கு கஷ்டமா இருந்துச்சு அதான்!''

'நிறுத்தறாளாப் பார்! இன்னும் அதேப் பேச்சு.'

உடம்பில் குறுகுறுவென ஓடிக் கொண்டிருந்த மின்சார அதிர்வுகள் மாதவனிடம் காணாமல் போயின.

''கீர்த்தனா...!''

''என்னங்க?''

''கல்யாண வேலையா பயங்கர அலைச்சல். தலைவலி அதிகமாயிருக்கு...''

''நான் தைலம் தேய்ச்சு விடவா? மாத்திரைப் போட்டுக்கறீங்களா!''

''எனக்கு பழக்கமில்லே. நீ போய் படுத்துக்க... நான் கொஞ்ச நேரம் ரிலாக்ஸ் பண்ணிக்கிட்டு வர்றேன்!''

கீர்த்தனாவுக்கு அந்த வார்த்தைகள் முகத்திலடித்தாற் போலிருந்தது.

''ஏ...என் மேலே கோபமா?''

''இல்லே...''

''பின்னே?'' விளக்கிக் கேட்க பெ... மைத் தடுத்தது.


''பின்னேன்னா? தலை வலிக்குதுன்... சொல்றேனே? தொண தொணன்னு பேசி... எனக்குப் பிடிக்காது. போய் படுத்துக்க... கு... நைட்!''

விளக்கை அணைத்துவிட்டு கட்டிலி... மறுமுனையில் படுத்துக் கொண்டான்.

கீர்த்தனா ஒரு போர்வையை விரித்து தரை... யில் படுத்துக் கொண்டாள்.

'ஆரம்பமே இப்படியா?'

இதயம் பாறாங்கல்லாய் கனத்தது.



9

'வாதம் சயித்தியம், வலிப்புப் பித்த... சூலைசயம் குன்மம், சொக்குச் சிரங்கு, குடை... சல் சிலந்தி...' டேப்பில் கந்த சஷ்டி கவச... கசிய...

உறக்கத்திலிருந்து விடுபட்டாள் நீலா... பிகை.

சாம்பிராணி வாசம் கமகமக்க... கட்டி... லிருந்து வேகமாய் எழுந்து அறையிலிருந்... வெளிப்பட்டாள்.

எதிரிலேயே பூஜையறை.

விளக்குகள் ஏற்றப்பட்டு ஜகஜ்ஜோதியா... காட்சியளித்தது.

சிலிர்த்துப் போனவளாய் 'வாசலுக்... விரைந்தவள் பிரம்மித்துப் போனாள்.

வாசலையடைத்து பெரிதாய், நெ... நெளியான கோலம்... அழகாய் ஜம்மென்றிரு... தது.

'என் வீட்டு வாசலா இது? இவ்வள... அழகா?'

நெய்யில் முந்திரி வறுபடும் வாச... நாசியை சீண்ட...

சமையலறை நோக்கி விரைந்தாள் நீலா... பிகை. குளித்து முடித்து தலையில் கட்டிய து... டுடன், முகத்தில் மஞ்சள் மினுக்க, நெற்றி... லும் வகிட்டிலும் குங்குமம் வீற்றிருக்க... சமை... யலில் மும்முரமாய் இருந்தாள் கீர்த்தனா.

''என்னம்மா பண்ணிக்கிட்டிருக்கே... இங்கே?''

''வாங்க அத்தை. எந்திரிச்சிட்டீங்களா... ...ஷ் பண்ணிட்டு வந்துடுங்க. சர்க்கரைப் ...டாம உங்களுக்கு பிடிச்ச மாதிரி ஃபில்டர் ...பி ரெடியா இருக்கு. குளிச்சிட்டு வந்துட்டீங் ...னா, டிபனும் ரெடியா இருக்கு. சாப்பிட்டுக் ...ங்க.''

நீலாம்பிகை நெகிழ்ச்சியுடன் அவள் ...த்தை கைகளில் ஏந்திக் கொண்டாள்.

''என் வேண்டுதல் வீண் போகலே கீர்த் ...னா. என் வீட்டுக்கு மருமகள் வரலே... மகா ...க்ஷ்மியே வந்திருக்கா. கோவில் மாதிரி ...ஜொலிக்குது என் வீடு. நான் சொல்லத் ...தேவையே இல்லாம எல்லாத்தையும் செய்து ...ச்சிருக்கியே... என் ராஜாத்தி.''

கீர்த்தனா வெட்கத்துடன் புன்னகைத் ...தாள்.

''மாதவன் எந்திரிச்சிட்டானா?''

''இன்னும் இல்லே அத்தை. கல்யாண ...வேலை, அலைச்சல்... அதான் கொஞ்ச நேரம் ...தூங்கட்டும்னு ...ிச்சு எழுப்பலாமேன்னு...''

நீலாம்பிகை வேறு எதையோ கற்பனை ...பண்ணிக் கொண்டு பூடகமாய் சிரித்தாள்.

''சரி... சரி... மாதவன் வெந்நீர்லதான் ...குளிப்பான்.''

''தெரியும் அத்தை.. அதுவும் ரெடியாயி ...ருக்கு.''

திருப்தியுடன் அங்கிருந்து நகர்ந்தாள் ...நீலாம்பிகை.

தங்கள் அறைக்கு காபி எடுத்துச் சென் ...றாள்.

மாதவன் அப்போதுதான் கண் விழித்திருந் ...தான். கீர்த்தனா புத்தம் புதுமலராய் மஞ்சள் குங் ...குமம் மிளிர காபியுடன் உள்ளே நுழைந்தவளை ...ரம்மியத்துடன் பார்த்தான்.

''குட்மார்னிங்'' என்றாள்.

''குட்மார்னிங்.''

''காபி...''

''ஸாரி... சொல்ல மறந்துட்டேனே. குளிக்... ...ம காபி குடிக்க மாட்டேன். குளிச்சிட்டு வந் ...றேன். சூடா வேணும்.''

''சரிங்க... குளிச்சிட்டு வந்திடுங்க. வேற ...காபி எடுத்திட்டு வர்றேன்.''

அவன் பத்து நிமிடத்தில் குளித்து விட்டு ... வேறு காபியுடன் கீர்த்தனா வந்தாள்.

அரைகுறையாய் துடைத்த உடம்புடன் ...காபியை வாங்கிப் பருகியவன்... கண்களால் ...அவளைப் பருகினான்.

தந்தச் சிலைப்போல் எடுப்பான அங்கங்க ...ளுடன் அவன் உடம்பில் மின்சாரத்தை உற்பத்தி ...செய்தாள்.

மாதவன் கதவை சாத்தினான்.

''ஏ... எதுக்கு?'' என்றாள் திகைப்புடன் கீர்த்தனா.

''பர்ஸ்ட் நைட் தான் நடக்காமப் போச்சு. பர்ஸ்ட் மார்னிங்கையாவது நடத்தலாம்னு தான்.'' அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

''ஐயோ... இதென்னங்க இப்பப்போய்... அத்தை தப்பா நினைச்சுக்கப் போறாங்க.''

''புதுசா கல்யாணமான சின்னஞ்சிறுசுங்க இப்படித்தான் இருப்பாங்கன்னு உன் அத்தைக்கு நல்லாவேத் தெரியும். ஆபீசுக்கு பதினஞ்சுநாள் லீவுப் போட்டது வேற எதுக்காம்? இப்படி ஷிப்ட் போட்டு...'' அதற்கு மேல் அவளைப் பேச விடாமல் இதழ்களை பொத்தினான் தன் இதழ்களால்.

நாட்கள் விரைந்தோடுகின்றன.

நீலாம்பிகை நிம்மதியாய் மூச்சு விட்டாள். மருமகளை தலைமேல் வைத்துக் கொண்டாடினாள்.

மாதவன் மனைவியை உயிரினும் மேலாக நேசித்தான். ஒரு வாரம் கொடைக்கானலுக்கு ஹனிமூன் சென்று வந்தனர்.

கீர்த்தனா வீட்டைப் பளிச்சென்று வைத்துக் கொண்டாள். விதவிதமாய் சமைத்தாள். மாதவன் ஊட்டமான உணவினாலும், உற்சாகத்தினாலும் ஒரு சுற்று சதைப் போட்டு மெருகேறினான்.

நீலாம்பிகை ஷுகர் பேஷண்ட் என்பதால் தினமும் இன்ஜெக்ஷன் போட ஒரு நர்சுக்கு ஏற்பாடு செய்திருந்தான் மாதவன். கீர்த்தனா அந்த வீட்டிற்கு வந்த பின்பு நர்சை நிறுத்தி விட்டு தானே இன்ஜெக்ஷன் போட்டு விட்டாள். மாமியாருக்கு வேளா வேளைக்கு கொடுக்க வேண்டிய மருந்து மாத்திரைகளை கொடுப்பது முதல் பத்தியமாய் சாப்பிடுவது வரை அவளே கவனித்துக் கொண்டாள்.

ஒரு வேலை கூட மாமியாரை செய்ய விடுவதில்லை. ''போரடிக்குது கீர்த்திம்மா... மசாலா அரைக்கிற வேலையாவது நான் செய்யறேனே'' என்று கெஞ்சுவாள்.

''உங்களை யாரு சமையலறைப் பக்கமெல்லாம் வரச் சொன்னது? போதும் நீங்க உழைச்சது. போய் டி.வி. பாருங்க. விஜய் டி.வி.யிலே உங்களுக்கு பிடிச்ச பழைய படம் போட்டிருக்கிறான். இனி உங்களுக்கு முழு ரெஸ்ட். போங்க இங்கிருந்து.'' மாமியாரை செல்லமாய் விரட்டுவாள்.

''இவ ஒருத்தி... என்னை சோம்பேறியாக் கிட்டுட்டு...'' பெருமையாய் முணுமுணுத்தபடி செல்வான்.

மாதவன் இந்த காட்சியை பார்த்து பூரித்துப் போவான்.

இரண்டு வருடத்திற்கு குழந்தை வேண்டாம் என்று தம்பதிகள் முடிவு செய்திருந்தனர்.

என்னதான் இல்லற வாழ்க்கை இனிமையாகச் சென்றாலும் அம்மாவின் நினைவு கீர்த்தனாவை அலைக்கழித்தது. மாமியார் தன்னை மகளாய் நினைக்கும் அளவிற்கு ஒரு குறையுமின்றி தான் நடந்துக் கொள்ளும் போது, 'என் அம்மாவும் இதுபோல் சந்தோஷமாய் இருப்பார்களா?' என்றெண்ணுவாள்.

அம்மாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. ஆசைப்படதான் முடிந்தது. அதை சுவற்றைப் பார்த்து சொல்லக்கூட 'முடியவில்லை அவளால். காரணம் இது புகுந்த வீடு. அம்மாவை விரோதியாய் நினைக்கும் வீடு.

'வீடு ஏலத்திற்கு போய் விட்டிருக்கும். அம்மா, அண்ணனோடு அவன் மாமியார் வீட்டில் தங்கியிருப்பார்கள். சம்பந்தி வீட்டில் அம்மா எவ்வளவு நாட்களுக்கு தங்கியிருக்க முடியும்? மரியாதையிருக்குமா? அண்ணனின் மாமியார் ஒரு மாதிரி டைப். அடுத்தவர் மனம் புண்படுமே என்று தயங்காமல் வெடுக்கென்று பேசும் ரகம். விருந்தும் மருந்தும் மூணு நாளைக்கு. அம்மா எத்தனை நாளைக்கு அங்கிருக்க முடியும்? அண்ணன் தனியே வீடெடுத்து இருந்தால் பரவாயில்லை. அவன் இருக்கும் சூழ்நிலைக்கு இப்போதைக்கு எந்த பிஸினசும் அமையப் போவதில்லை. எப்படியும் குறைந்தது ஒரு வருஷத்துக்கு அவன் மாமியார் வீட்டை விட்டு அசையப் போவதில்லை. அது வரைக்கும் அம்மாவால் அங்கிருக்க முடியுமா? தினமும் மாத்திரை சாப்பிடுகிறார்களா? நான் இருந்தவரை கவனித்துக் கொண்டிருந்தேன். பிரஷருக்கான மாத்திரை ஒருநாள் போடாவிட்டாலும் தலை சுற்றல் வருமே.' பலதையும் எண்ணிக் கவலைப்பட்டாள்.

ஒருநாள் பக்கத்து வீட்டிற்கு வந்திருந்த பெண்மணியைப் பார்த்து ஆச்சர்யப்பட்டாள். அவளுக்கும் அதே உணர்வு. காரணம், அந்த பெண்மணி பக்கத்துத் தெருவைச் சேர்ந்தவர். அரசுப் பணியில் இருப்பவர். அதனால் அலுவலகம் செல்லும் போது பஸ் ஸ்டாண்டில் சந்தித்துக் கொள்வதுண்டு.

''கீர்த்தனா... இதுதான் உன் மாமியார் வீடா? நல்லா இருக்கியா?''

''எனக்கு எந்த குறையுமில்லேம்மா... எங்கம்மா எப்படியிருக்காங்கம்மா?''

''அதுக்கூடத் தெரியாதா உனக்கு? பாவம்மா உங்கம்மா. வீடு ஏலத்துக்குப் போய்ட்ட பிறகு, சம்பந்தி வீட்லேப் போய் தங்கினாங்க. ஒருவாரம் கூட தாக்குப் பிடிக்க முடியலே. சம்பந்தியம்மா, என்னவோ கேவலமா பேசியிருக்காங்க. கொண்டாங்கொடுத்தான் வீட்லே மழைக்காக கூட ஒதுங்கக் கூடாதுன்னு அப்பத்தான் புரிஞ்சுக்கிட்டாங்க. அன்னைக்கே உங்கம்மா அந்த வீட்டை விட்டு வெளியேறிட்டாங்க.''

''அண்ணன்?''

''அவர் மாமியார் வீட்லேதான் இருக்கிறார்.''

''இப்ப அம்மா எங்கே தங்கியிருக்காங்க?'' பதட்டத்துடன் கேட்டாள்.

''தெரியாதும்மா. அதுக்குப் பிறகு உங்கம்மாவை பத்தி எந்தத் தகவலும் இல்லை.''

வேதனை நெஞ்சை அடைத்தது.

'அம்மா... எங்கேயிருக்காங்கன்னுத் தெரியாதா? ஐயோ... அம்மா... எந்த ஆதரவுமில்லாம என்ன பண்ணிக்கிட்டிருக்கே? எங்கே இருக்கிறே? நானாவது புருஷன், மாமியார்னு செட்டிலாய்ட்டேன். ஆனா ரெண்டு குழந்தைகளைப் பெத்தும் பிரயோஜனமில்லாம ஆய்ட்டியேம்மா. உண்மையில் நீதாம்மா அனாதையாய்ட்டே. எங்கே இருக்கேம்மா? உயிரோடதான் இருக்கியா? இல்லே அவமானம் தாங்காம ஏதாவது தப்பான முடிவுக்கு....? இல்லே, அப்படியெல்லாம் இருக்காது... இருக்கக்கூடாது. என் அம்மா பாவம். அதிகப்படியா பிள்ளை மேலே பாசம் வச்சதைத் தவிர எந்தப் பாவமும் செய்யாதவங்க. கடவுளே... எங்கம்மாவை எங்கேயிருந்தாலும் காப்பாத்து.' பாத்ரூமில் அழுது தீர்த்தாள்.

தன் வேதனையைப் பகிர்ந்து கொள்ளக் கூட ஆள் இல்லை. அழுதழுது முகம் வீங்கிப் போனது.

நீலாம்பிகை மருமகளை உற்றுப் பார்த்தாள்.

''கீர்த்தனா... அழுதியா?''

''இ... இல்லையே.. நா... நான் ஏன் அழணும்?''

''பின்னே, உடம்பு சரியில்லையா?''

''இல்லே அத்தை... நான் நல்லாதான் இருக்கிறேன்.''


''அப்ப ஏன் முகமெல்லாம் வீங்கியிருக்கு?''

''கொஞ்சம் தூங்கினேன்... அதான். காபி வேணுமா அத்தை'' என்று பேச்சை மாற்றினாள்.

பெற்ற தாயை பற்றிக்கூட பேச உரிமையில்லை பெண்ணிற்கு. காரணம் பணம்.

அம்மாவின் நினைவு அவளை அலைக்கழித்தது.

'எங்கேம்மா இருக்கே?'




''மாதவனுக்கு நல்லபடி கல்யாணம் நடந்தா ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்தறதா வேண்டிக்கிட்டேன். கோவில்லேயே பணம் கட்டிட்டேன். இன்னைக்கு சாயந்திரம் நீ, நான், மாதவன் மூணு பேரும் நங்கநல்லூர் போகிறோம்'' என்றாள் நீலாம்பிகை.

''அம்மா... நான் வரலே... எனக்கு ஆபீஸ்லே ஏகப்பட்ட வேலையிருக்கு. நீங்க ரெண்டு பேரும் போங்க!'' என்றான் மாதவன் அலுவலகம் செல்லும் பரபரப்புடன்.

''என்னப்பா இப்படி சொல்றே? வேண்டிக்கிட்டதே உனக்காக தானே? நீ வரலேன்னா எப்படி?''

''ஆஞ்சநேயருக்கு என் பிரச்சினை நல்லாவேத் தெரியும். அவர் கோவிச்சுக்க மாட்டார். நான் வரலேன்னா என்ன? என் சார்பாதான் மிஸஸ். கீர்த்தனா மாதவன் வர்றாளே... அப்புறமென்ன?''

''கோவிலுக்கு வர்றதுக்கு கூட டைமில்லேன்னு சொல்றது தப்புப்பா!''

''என்னை விட்ரும்மா ப்ளீஸ்!''

''பிடிவாதம்டா உனக்கு!'' அம்மா அறையை விட்டு வெளியேப் போனாள்.

''கீர்த்தி....''

''.....?!''

''கீர்த்தி... உன்னைத்தான்!''

''அ... என்னங்க?''

''வழக்கமா நீதானே டை கட்டிவிடுவே! கட்டிவிடு. ஏன் ஒரு மாதிரியாயிருக்கே?''

''நானா? இல்லையே!''

''ம்ஹூம்... கொஞ்சநாளா உன் முகம் டல்லடிக்குது. எந்நேரமும் ஏதோ யோசனையிலே இருக்கிறே! அப்படியென்ன யோசனை?''

''இல்லைங்க... ஒண்ணுமில்லே!'' டை கட்டி சரிப்படுத்தினாள்.

''வினிதா பத்திய ஞாபகமா?''

''ஆமாம்... ரொம்ப நாளாச்சு அவள்கிட்டேப் பேசி!'' அவளுக்காகவும் வருந்தினாள்.

''ஏன், அவ உனக்கு போன் பண்றதில்லையா?''

''நம்ம கல்யாணத்துக்குப் பிறகு ரெண்டு முறைப் பேசினா. அவ ஹஸ்பண்டுக்கு ப்ரமோஷன்ல வேற பிராஞ்சுக்கு மாத்தப்போறதாகவும், கம்பெனியே பெரிய வீடு, காரெல்லாமும் தர்றதாகவும்... இந்த நம்பர் மாறிடும், வேற வீடு மாறினதும் அட்ரஸும், நம்பரும் தர்றேன்னு சொன்னா! ரெண்டு மாசமாகுது... இன்னும் போன் வரலே!''

''வரும்... வரும்... இதுக்காப் போய் கவலைப்படறே? சரி... டைம் பறதுக்குள்ளே வழக்கமா தர்றதைக் குடு!'' மனைவியின் கழுத்தில் கைகளை மாலையாய்ப் போட்டு இழுத்தான்.

கீர்த்தனா மெல்ல புன்னகைத்தபடி அவன் கன்னத்தை நோக்கிப் போக... ''ம்ஹூம்...

## குரங்கு முகத்துக்கு ரூ. 50 கோடி

உலக திரைப்பட வரலாற்றிலேயே அதுவும் 1968-ல் எடுத்த 'குரங்குகள் சாம்ராஜ்யம்' என்ற படத்துக்கு ஒவ்வொரு நாளும் போடப்பட்ட மேக்கப்புக்கு மட்டும் 10 லட்சம் டாலர்கள்- நம்ம ஊர் ரூபாய்க்கு 50 கோடி ரூபாய்கள் என அந்த காலத்திலேயே செலவு பண்ணியிருக்கிறார்கள். இந்த செலவு தான் உலகிலேயே அதிகமான மேக்கப்புக்கான செலவு என கின்னஸ் புத்தகமும் பாராட்டியிருக்கிறது.



-பாரிஸ் பார்த்தசாரதி.

டுபேஸ்பெஷல்... இங்கே...'' என்று உதட்டை குவித்துக் காட்டினான்.

''ம்ஹூம்... அங்கே லெஸ் பண்ண எனக்கு தெரியாது!''

''மக்கு...மூணு மாசமா டிரெய்னிங் குடுத்தும் வேஸ்ட். வா சொல்லித்தர்றேன்!'' அவள் இதழ்களை நோக்கி குனிந்தான்.

கோவிலுக்கு வந்ததும் ஏதோ ஒரு மன நிறைவு அவளுள்!

பிரம்மாண்டமான ஆஞ்சநேயரை பார்க்கும் போது தன் மனக்குறைகள் காணாமல் போனதுப் போல் நிம்மதி.

துதிப்பாடலும், தெய்வாசமும், பக்திப்பரவசமாக மக்களுமாய்... கீர்த்தனாவும் கொஞ்ச நேரம் தன்னை மறந்தாள்.

''நீ... இங்கேயே உட்கார்ந்திட்டிரு... நான் அடிப்பிரதட்சணம் பண்ணிட்டு வர்றேன்!''. என்று நீலாம்பிகை அர்ச்சனைக் கூடையை அவளிடம் கொடுத்து விட்டுச் சென்றாள்.

ஒரு தூணோரம் சாய்ந்துக் கொண்டு கண்மூடி ''ஸ்ரீராமஜெயம்'' என்று ஜெபிக்க ஆரம்பித்தாள் கீர்த்தனா.

பத்து நிமிடம் சென்றிருக்கும்.

கண்களைத் திறந்தாள்.

'ஆஞ்சநேயா... ஒன்றைக் கொடுத்ததற்காக இன்னொன்றை பறித்து விடாதே! எங்கம்மா நல்லாயிருக்கணும். எங்கிருந்தாலும் நல்லாயிருக்கணும்...' மனமுருக வேண்டியவளின் விழிகளில் நீர் எட்டிப்பார்க்க... அவசர அவசரமாய் முகத்தைத் திருப்பி துடைத்தவள், திடுக்கிட்டாள்.

'யார் அது?'

'கடைசித் தூணில் சாய்ந்து கண்மூடி அமர்ந்திருக்கும் பெண்மணி யார்?

அம்மாப்போல் உள்ளதே! அம்மா தானா? ஆமாம்... அம்மாவே தான்!'

உடம்பு தூக்கிவாரிப்போட எழுந்து அம்மாவை நோக்கி ஓடினாள்.

''அ... அம்மா!'' குரல் நெகிழ்ந்து அழுகையுடன் பிசிறிற்று.

கண்களைத் திறந்த ஜானகி தன் கண்களையே நம்ப முடியாமல் பார்த்தாள்.

''கீ..ர்..த்..தி? கீர்த்தி...!'' மகளின் கன்னங்களைப் பற்றிக் கொண்டாள் பரவசமாய்.

ஜானகி நன்கு இளைத்து, கவலையில் கண்கள் உள்ளடங்கி... மனசு பதறியது மகளுக்கு.

''எப்படிம்மாயிருக்கே? எங்கேயிருக்கே? இங்கே எப்படி?''

''நீ நல்லாருக்கியாடா? புருஷன், மாமியாரெல்லாம் உன்னை சந்தோஷமா வச்சிரு[க்]காங்களா?''

''எனக்கு எந்தக் குறையுமில்லேம்மா. என்னை விடு. உன்னைப் பத்தி சொல்லு. நா[ன்] கேள்விப்பட்டதெல்லாம் நிஜமா? நீ அண்ண[ன்]னோட இல்லையா?''

''இல்லேடா... தனியாதான் இருக்[கி]றேன்!''

''எங்கே இருக்கே, சாப்பாட்டுக்கு எ[ன்]னப்பண்றே?''

''ஒரு தனியார் ஆஸ்பத்திரியிலே எடுபி[டி] வேலை செய்யறேன். நோயாளிகளுக்கு காபி[...] டிபன், மருந்து மாத்திரைன்னு வாங்கி வர[...] சொல்வதையெல்லாம் செய்வேன். அவங்கள[...] இஷ்டப்பட்டு தர்றதை வாங்கிப்பேன். என்ஒ[...] டிக்கட்டைக்கு கிடைக்கிறது தாராளம் தான். ப[...] மாபாட்டி தெரியுமில்லையா? தனியா தா[ன்] இருக்காங்க. என் நிலைமைப் புரிஞ்சு தன்னோ[...] டயே இருக்கச் சொல்லி வற்புறுத்தினாங்க[...] அவங்களோட தான் இருக்கிறேன்.''

''ஏம்மா உனக்கு இப்படியொ[ரு] நிலைமை?''

''ப்ச்... எல்லோரும் பார்க்கிறாங்கப் பார்[...] முதல்ல கண்ணைத் துடை!''

''உன்னை இப்படிப் பார்க்க எனக்கு தாங்[...] கலேம்மா. என் மாமியாரை அம்மா மாதிரி பார்[த்]துக்கறேன். ஆனா, என் அம்மாவை பார்த்துக்[க] ஆளில்லையே! இந்த வயசுலதானேம்மா.. உனக்கு ஆறுதலா, அனுசரணையாப் பார்த்துக்[க] உறவுகள் வேணும்? அனாதை மாதிரி தவிக்கி[...] யேம்மா!''

''நான் நல்லாதான்டா இருக்கேன்[...] வாழ்ந்து முடிச்சவ நான்! பிள்ளைங்க சவுக்கி[ய]மாயிருக்காங்கன்றதை பார்த்து திருப்திப்பட்டு[...] கற வயசு இது! என் பொண்ணு நல்ல இடத்துல வாழ்க்கைப்பட்டு நல்லா இருக்காளே... இ[து] போதும் கீர்த்தி எனக்கு!''

''செக்கப்புக்கு போறியாம்மா? மாத்திரை[...]யெல்லாம் ஒழுங்கா சாப்பிடறியா? இளைச்சி[ட்]டியே!''

''வீடு, வாசல்னு இருக்கும் போது தான் உடம்பு, நோய்னு கவலை வரும்... படுத்தும். இப்ப எந்த பிரச்சினையுமில்லே! ஏதோ வயித்துப்பசிக்கு சாப்பிடற அளவுக்கு சம்பாதிக்கிறேன். அதுபோதும்!''

''கடவுளே!'' மனம் நொந்து அழுதாள்.

''எல்லாம் பவித்ரனால தானே? எல்லாத்[...]யும் அழிச்சிட்டு உன்னை நடுத்தெருவிலே [...]ட்டு, அவன் மட்டும் ஜம்முனு மாமியார் [வீட்டி]லே இருக்கான். அவன் நல்லாவே இருக்க[மாட்]டான்!''


''கோவில்ல வச்சு... அவனை சபிக்காதே[...]டி. புத்திசாலித்தனம் போதலே... எல்லாத்[தை]யும் இழந்துட்டான். பாவம்மா அவன்! மாமி[யார்] வீட்டு உப்பு ஆண் பிள்ளைக்கு ஜீரணமா[காது]. அவனும் சந்தோஷமாயில்லே கீர்த்தி. கட[வுள்] உனக்கு நல்ல வாழ்க்கையைக் கொடுத்திருக்[கா]ன். நீ நல்லாரப்பே! ஆஞ்சநேயர் உன்னை [கா]க்க வச்சிட்டான். அதுவே போதும்டா [உன]க்கு! கேக்க மறந்துட்டேனே... யாரோட வந்[திரு]க்கே? மாப்பிள்ளையோடயா?''

''இல்லேம்மா... மாமியாரோட!''

அவள் சொல்லி முடிக்கவில்லை.

''கீர்த்தனா!'' அதட்டலோடு குரல் வர... திரும்பினாள்.

நீலாம்பிகை நின்றிருந்தாள்... கோபமாக!



வீடு திரும்பும் வரை நீலாம்பிகை கீர்த்த[னா]விடம் ஒரு வார்த்தைக் கூடப் பேசவில்லை.

கீர்த்தனாவின் நெஞ்சு பக் பக் என அடித்[துக்] கொண்டது.

ஆட்டோவில் வலது ஓரமாய் அமர்ந்து [மு]கத்தை வெளிப்பக்கமாய் திருப்பிக் கொண்டி[ரு]ந்தவளைப் பார்க்க பயமாய் இருந்தது கீர்த்த[னா]வுக்கு.

''அத்தை...!'' மெல்ல அவள் கையைத் [தொ]ட்டாள்.

''சீ... தொடாதே!'' வெறுப்பாய் வார்த்[தை]யை உமிழ்ந்தாள்.

இதுநாள் வரை 'என் வீட்டு மகாலட்சுமி, [சோதி]ஜாத்தி' என்று வாய்க்கு வாய் புகழ்ந்த மாமி[யா]ர் வாயிலிருந்து முதன் முதலாய் வந்த 'சீ' [எ]ன்ற வார்த்தை... கீர்த்தனாவை புழுப்போல் [சு]ருண்டுப் போக வைத்தது.

அவளால் தாங்கிக் கொள்ள முடிய[வி]ல்லை.

'அப்படியென்ன பெரிய தவறை செய்து[வி]ட்டேன்? பல மாதங்களாய் பார்க்காத, காணா[ம]ல் போன தாயை எதேச்சையாகப் பார்த்தால், [பே]சினால் தப்பா? புகுந்த வீட்டிற்குப் போய் விட்டால் பிறந்த வீட்டுப் பாசத்தையெல்லாம் குழிதோண்டிப் புதைத்து விட்டு தான் போகணுமா?' வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டே இருந்தாள்.

வீடு வந்து விட்டது.

வாசலில் மாதவனின் பைக் இருந்தது.

''வந்துட்டானா?'' என்றபடியே உள்ளே சென்ற மாமியாரை, பலி ஆடுப்போல பின் தொடர்ந்தாள் கீர்த்தனா.

மாதவன் எதிர்ப்பட்டான்.

''மாமியாரும் மருமகளும் ஜாலியா ஊர் சுத்திட்டு வர்றதைப் பார்க்கிறப்ப எனக்கேப் பொறாமையா இருக்கு'' என்றான் கிண்டலாக.

பதிலேதும் கூறாமல் விறைப்பாய் தன்னைத் தாண்டிச் சென்ற அம்மாவை உதடை பிதுக்கியபடி பார்த்தான்.

கீர்த்தனாவின் பின்பக்கத்தில் செல்லமாய் தட்டி, கிசு கிசுப்பாய், ''என்னாச்சு உன் மாமியாருக்கு... நான் வரலேன்னு கோபமா?'' என்று கேட்டான்.

என்ன சொல்வாள் அவள்?

பரிதாபமாய் கணவனைப் பார்த்தாள்.

'சம்திங் ராங்' என்று புரிய அம்மாவிடம் சென்றான்.

டென்ஷனில் மார்புக்கூடு வேகவேகமாய் ஏறி இறங்க அமர்ந்திருந்தாள் நீலாம்பிகை.

''என்னம்மா நல்ல தரிசனமா?''

''தரிசனம் எனக்கு கிடைக்கலேடா! உன் பொண்டாட்டிக்கு தான் கிடைச்சது. அதுவும் நல்ல அம்மன் தரிசனம்!''

''அம்மன் தரிசனமா? ரெண்டு பேரும் ஆஞ்சநேயர் கோவிலுக்கு தானேப் போனீங்க?'' என்றான் புரியாமல்.

''அப்படித்தான் நினைச்சிப் போனேன். போனப்பிறகு தானே எனக்கேத் தெரிஞ்சது.''

''குழப்பாதேம்மா... நீ ஏதோ கோபத்துல இருக்கேன்னுப் புரியுது. என்ன விஷயம் சொல்லு. கீர்த்தி சொல்லு... என்னாச்சு?''

''.....?!'' கைகளைப் பிசைந்தாள் கீர்த்தனா.

''அவ எப்படிடா வாயைத் திறப்பா! இவளை நான் என்னவோ நினைச்சேன். ஆனா, இவ்ளோ சதிகாரியா இருப்பான்னு நினைக்கலே...!''

''அ... அம்மா... என்னம்மா சொல்றே? உன் கோபத்துக்கு காரணம் கீர்த்தியா? என்னால நம்ப முடியலேம்மா'' என்றான் அதிர்ச்சியாய்.

''என்னாலயும் தான்டா நம்ப முடியலே... இவ இவ்ளோ மோசமானவளா இருப்பான்னு.''



''முதல்ல என்ன விஷயம்னு சொல்லு!'' ஆத்திரத்துடன் கத்தினான்.

''நம்மளை எவ்ளோ அசிங்கப்படுத்தி, அவமானப்படுத்தி, ஏமாத்தினா இவளோட அம்மா?''

''அந்தப் பொம்பளையைப் பத்தி இப்ப எதுக்கு?''

''அவளைப் பத்தி பேச்செடுத்தாலே பத்திக்கிட்டு வருது இல்லே? அவளை கோவிலுக்கு வரவழைக்க எனக்குத் தெரியாம பேசிட்டிருக்கா... உன் பொண்டாட்டி!''

''என்னது?''

''இப்படி தான்டா எனக்கும் தூக்கி வாரிப் போட்டுச்சு. அவளோட சங்காத்தமே வேண்டாம்னு தானே, வெறுங்கையோட, கட்டின புடவையோட இவளை நாம ஏத்துக்கிட்டோம் எல்லாம் நடிப்புடா! நீ அடிக்கிற மாதிரி அ நான் அழுறமாதிரி அழறேன்னு நடிச்சிருக்க ளுங்க ஆத்தாளும், மகளும்!''

''ஐயோ... அத்தை! என்னப் பேசறீங்க?

''வாயை மூடுடி! ஒண்ணுந் தெரியாதுன் நினைச்சிட்டிருக்கியா? எப்படியோ, என் பி ளைய வளைச்சுப் போட்டுட்டே! எங்க கவுர துக்கு அஞ்சு லட்சம் வரதட்சணை, ஐம்ப பவுன் நகைன்னு கேட்கலாம். ஆனா கே டோமா? அடுத்தவங்க சொத்துக்கு ஆசைப்ப றவங்க நாங்க இல்லே. கல்யாணத்தை மட் கொஞ்சம் சீரும், சிறப்புமா செஞ்சிடுங்கன்



சொன்னேன். அதுக்கே வீட்டைக் காட்டி டிராமாப் போட்டு என்னமா நடிச்சா உங்கம்மா!''

''....?''

''என் பிள்ளை உன் குடும்பத்தை தலைமுழுகிட்டு வரச்சொல்லி கண்டிஷன் போட்டு, அதுக்கு ஒத்துக்கிட்டு தானே வந்தே?''

''அத்தை... என்னை கொஞ்சம் பேச விடுங்க. நான் எந்த தப்பும்...'' சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவள் கன்னத்தில் 'பொளேர்' என அறைந்தாள்.

சில கணங்கள் கண்கள் இருண்டன. அதிர்ச்சியும், வலியுமாய் கன்னத்தை

பொத்திக் கொண்டாள்.

''என்னடிப் பேச விடறது? என் பேச்சை மீறி உங்கம்மாவை பார்த்து பேசியிருக்கேன்னா.. அப்புறம் எனக்கென்ன மரியாதை?'' கண்கள் சிவக்கக் கேட்டாள்.

''இல்லீங்க... நீங்களாவது என்னை நம்புங்க. நான் திட்டம் போட்டு சந்திக்கலீங்க. கோவில்ல யதேச்சையாப் பார்த்தேன்!''

''பார்த்தா? பேசிடுவியா? எல்லாம் மறந்துப் போச்சா? பிள்ளைதான் முக்கியம்னு நடுத் தெருவிலே உன்னை நிறுத்தினவங்க. பார்த்தாலும் 'சீ'ன்னு காறித் துப்பிட்டு வந்திருக்கணும்.''

''எப்படிங்க.... பெத்த தாயை காறித் துப்பிட்டு வரச் சொல்றீங்களா?''

''எதிர்த்துப் பேசறா பார்டா! அம்மாவை விட்டுக் கொடுக்கிறானாப் பார்! கேடு கெட்ட அம்மாவுக்காக பரிஞ்சுப் பேசறாப் பார்!''

''எங்கம்மாவை தயவு பண்ணி திட்டாதீங்க அத்தை. அவங்கப் பாவம். யாரோட ஆதரவுமின்றி கஷ்டப்பட்டுக்கிட்டிருக்காங்க...! கொஞ்ச நாளா காணோம்னு கேள்விப்பட்டேன். அதனால தான் கோவில்லப் பார்த்ததும் போய்ப் பேசினேன்...!''

''அவங்கம்மாவை திட்டக்கூடாதாம். உன் பொண்டாட்டி சொல்லிட்டா. அவ உத்தரவுப் படி நடந்துக்க. இவளை என்னமோன்னு நினைச்சிப் பெருமைப்பட்டேன். ப்ச்... எல்லாம் போச்சு. காதல், ஊதல்லாம் எனக்குப் பிடிக்காதுன்னு தெரிஞ்சும், உனக்காகப் பொறுத்துக்கிட்டு தலையாட்டினேனே... எனக்கு நல்ல மரியாதை கிடைச்சிடுச்சப்பா. இது போதும் எனக்கு!''

முகத்தில் துயரமும், வார்த்தைகளில் வலியுமாய் பேசிவிட்டு பெருமூச்சுடன் சென்ற அம்மாவைப் பார்த்து வேதனைப்பட்டான்.

கண்ணீருடன் பரிதாபமாக நின்றிருந்த கீர்த்தனா, அவன் கண்களுக்கு இப்போது அரக்கிப்போல் தெரிந்தாள்.

மாதவனுக்கு இந்த உலகிலேயே மிக மிக முக்கியமான ஒன்று என்றால் அது அம்மா மட்டுமே! அம்மாவின் மனசு தன்னால் எந்த சந்தர்ப்பத்திலும் புண்பட்டு விடக் கூடாதென்று மிகவும் ஜாக்கிரதையாய் இருப்பான். கீர்த்தனா விஷயத்தில் அவனின் அம்மா ரூபத்தில் பெரிதாய் திருமணத்தடை ஏற்பட்ட போது, அவனுக்காக அம்மா எவ்வளவு பெருந்தன்மையாக நடந்துக் கொண்டார்கள்? யாருக்கு வரும் அந்த மனசு? அப்படிப்பட்ட அம்மாவின் மனதை நோகடித்து விட்டானே!

அவனுக்கு கீர்த்தனாவைப் பார்க்க வெறுப்பாய் இருந்தது.

''நீங்களாவது என்னை நம்புங்க!'' என நெருங்கிய அவளை ஒற்றைக் கையால் என்று ஒதுக்கி விலகிப்போய் விட்டான்.

கீர்த்தனாவுக்கு அழுகைப் பொங்கியது.

'வறிய நிலையில், மனம் நொந்த நிலையில், நிம்மதியைத் தேடி கோவிலுக்கு வ பெத்த தாயை பார்த்தது குற்றமா! இதுவா இ களின் பெருந்தன்மை?' உள்ளம் எரிந்தது.

ஆனாலும் வெளிக்காட்டிக் கொள்ள மு யுமா?

''சாப்பிட வாங்க...'' கெஞ்சினாள்.

மாதவன் அசையவில்லை.

''என் மேலே இருக்கிற கோபத்தை சா பாட்டு மேலே காட்டாதீங்க. பசித் தாங்க மா ங்க. சாப்பிட வாங்க ப்ளீஸ்...''

''உன் நம்பிக்கை துரோகத்தையே தாங்கி கிட்டேனே! பசியாத் தாங்க மாட்டேன்? முன்னாலே நிக்காதே... போய்டு. எனக்கு வும் வேண்டாம்!''

''அத்தை... இன்ஜெக்ஷன் போட்டு ணும். வெறும் வயிறோட படுக்கக் கூடாது. சா பிடுங்க!'' உணவோடுத் தட்டை அவன் மு வைத்தாள்.

''உன் நடிப்பை நம்பி ஏமாற நான் தயா யில்லே. மனசு நிறையறாப்பல தான் காரி பண்ணிட்டியே... பசியில்லே.. எடுத்து டுப்போ!''

மனசு சுருண்டுப் போனாள்.

ஆனாலும் ஒரு நம்பிக்கை.

'எந்த குடும்பத்தில் பிரச்சினையில்லை சண்டையில்லை? விடிந்தால் சரியாகப் போ விடும். என் புருஷன் மீதும், மாமியார் மீதும் நி மான நேசம் வைத்திருக்கிறேன். உண்மையா அன்பின் முன் கோபதாபங்கள் வலுவற்று போய் விடாதா என்ன?'

அந்த நம்பிக்கையுடன் உறங்க போனாள்.




''என்ன மாதவன் டல்லாத் தெரியறே உடம்பு சரி இல்லையா?'' சக ஊழியர் பால் கேட்டார்.

''ஆமா... தலைவலி'' என்றான் பொய் ய்.

உண்மையைச் சொல்ல முடியுமா? ஒரு ரமாய் மனைவியுடன் மனஸ்தாபம் என்று.

'எவ்வளவு அருமையாய் போய்க் கொண் ருந்தது வாழ்க்கை. ஆசைப்பட்டவளையே னைவியாய் அடைந்து விட்டேன் என்று பெரு மப்பட்டேனே! என் மனைவி எந்த சூழ்நிலை லும் என் பேச்சை மீறமாட்டாள் என்று நம்பி னேனே.'

'சரி... விடு! அதையே நினைத்து உன்னை ம் கஷ்டப்படுத்தி, கீர்த்தியையும் கஷ்டப்ப த்த வேண்டுமா? ஒருவாரமாய் அவளிடம் சாமல் துன்புறுத்தியதுப் போதாதா? நீ இயல் க்கு வந்தால்தானே, அம்மாவும் எல்லாம் றந்து இயல்புக்கு வருவார்கள். கீர்த்தியின் கத்தில் சிரிப்பையே காணோம். அதனால் ட களையிழந்து போயிருக்கிறது. காணாமல் போன அம்மாவை பார்த்தால் யார் தான் பேசா இருப்பார்கள்? நீ உன் அம்மா மீது பாசமாய் ல்லையா? தாய்ப்பாசத்தை யாருமே தடுக்க டியாது. தொப்புள் கொடி உறவாயிற்றே?'

ஒரு தெளிவுக்கு வந்தான் மாதவன்.

ஒரு வாரமாய் கனன்றுக் கொண்டிருந்த ரபம் சடுதியில் மறைந்தது.

'ஈவ்னிங் வீட்டிற்கு செல்லுமுன் அவ ளுக்கு பிடித்ததாய் எதையாவது வாங்கிச் செல்ல வண்டும். அதைப் பார்த்து அவள் முகம் மகிழ் தை பார்த்து...' நினைப்பே உடம்பில் புது ரத் த்தை பாய்ச்ச, அலுவலகப் பணியில் சுறுசுறுப் பாய் ஈடுபட்டான்.

மாலை நெருங்கியது.

பியூன் வாங்கி வந்த காபியை சூடாய் பரு கி கொண்டே யோசித்தான்.

'கீர்த்திக்கு என்ன வாங்கலாம்? புட வையா? அவளுக்குப் பிடித்த முத்து மாலையா? ல்லது பூவும், அல்வாவுமா?'

''சார்...'' எதிரே வந்து நின்றான் பியூன்.

''என்ன?''

''உங்களுக்கு ஒரு கூரியர் வந்திருக்கு.''

''கூரியரா?''

அவன் கொடுத்த கவரை வாங்கினான்.

முகவரி எழுதப்பட்டிருந்த கையெழுத்து வனுக்கு பழக்கமில்லாததாய் இருந்தது.

நெற்றியை சுருக்கியபடி கவரைப் பிரித்து ர்த்தவன் மிக... மிக... அதிர்ந்து போனான்.

வெயில் சுள்ளென்று பொசுக்கியது.

மொட்டை மாடியில் காயப் போட்டிருந்த துணிகளை எடுத்துக் கொண்டு கீழே வந்தாள் கீர்த்தனா.

நீலாம்பிகை ஒரு ஸ்டூலைப் போட்டு ஷெல்ப்பில் இருந்த சின்ன மரப்பெட்டியை எடுக்க முயன்றுக் கொண்டிருந்தாள்.

ஸ்டூல் மிகப் பழையது. ஸ்டோர் ரூமில் தேவையற்ற பொருட்களுடன் போட்டு வைத்திருந்ததை கொண்டு வந்து ஏறியிருக்கிறாள்.

அதைப் பார்த்து பதறி ஓடி வந்தாள் கீர்த்தனா.

''அத்தை... எது வேணும்னாலும் என்னைக் கேட்டிருக்கக் கூடாதா? ஓட்டை ஸ்டூல் வேற. விழுந்தா என்ன ஆகறது? இறங்குங்க... நான் எடுத்துத் தர்றேன்.''

''ஒன்னும் தேவையில்லை. நீ போ.'' வீம்பாய் எடுத்துக் கொண்ட பின்பே இறங்கினாள்.

அதுவரை ஸ்டூலை பிடித்துக் கொண்டு அருகிலேயே நின்றிருந்தாள்.

கேட்டை தட்டும் சப்தம் கேட்டது.

வாசலில் கூரியர் பையன்.

விரைந்து சென்று கையெழுத்துப் போட்டு வாங்கி வந்தாள் கீர்த்தனா.

கடிதம் நீலாம்பிகைக்கு வந்திருந்தது.

''அத்தை... உங்களுக்குதான்.'' கவரை கொடுத்தாள்.

''எனக்கா?'' வியப்புடன் வாங்கினாள்.

பிரித்துப் பார்த்த நீலாம்பிகை ஆடிப்போனாள்.

ஒரு போட்டோவும், கடிதமும் இருந்தது.

முகமெல்லாம் வியர்க்க, கைகள் நடுங்க, காகிதம் படபடக்க நின்றிருந்த மாமியாரைப் பார்த்து பயந்து விட்டாள். ஏதோ துக்க செய்தி என்பதை புரிந்துக் கொண்டவள் அவளருகே சென்றாள்.

''என்னாச்சு அத்தை? ஏன் முகமெல்லாம் வேர்த்திருக்கு?''

அவளை நிமிர்ந்துப் பார்த்த நீலாம்பிகையின் கண்கள் ஆக்ரோஷமாய் அனல் கக்கின.

''என் குடி முழுகிப் போய்டுச்சுடி நாயே.''

நெருப்பில் விழுந்த வார்த்தைகளில் சுருண்டுப் போனாள் கீர்த்தனா.

''அ... அத்தை... என்ன சொல்றீங்க?''

''என்னடி சொல்லச் சொல்றே? கல்யாணத்துக்கு முன்னாலேயே நீ தாங்கெட்டுப் போனவங்கிறதை போட்டோவோட எழுதி அனுப்பியிருக்கிறான் உன் காதலன்.''

நிலைகுலைந்துப் போனாள் கீர்த்தனா.

''அத்தை... இப்படி அபாண்டமா என் மேலே சேற்றை வாரி இறைக்காதீங்க. வசதியில் லாதவதான்... ஆனா, வழி தவறிப் போனவ ளில்லை.''

''ஆதாரத்தோட அனுப்பி வச்சிருக்கான். இனியும் உன் நடிப்பை நம்பி ஏமாறத் தயாரா யில்லை.''

''என்ன ஆதாரம், என்ன லெட்டர்?''

''இந்தா... உன் பவிசு என்னன்னு நீயே பார்.''

அவள் முகத்தில் வீசி எறிந்தாள்.

எடுத்துப் பார்த்தவள் நிஜமாகவே ஆடிப் போனாள்.

தீனாவும், இவளும், வினிதாவும் சேர்ந்து எடுத்திருந்த போட்டோவில் வினிதாவை கட் பண்ணி விட்டு இவளும், அவனும் மட்டுமாய் இருக்கிற போட்டோவை அனுப்பி இருந்தான். கூடவே தானும் அவளும் உயிருக்குயிராய் காத லித்ததாகவும், சிலமுறை சந்தர்ப்ப வசத்தால் உடலாலும் ஒன்று சேர்ந்ததாகவும், எத்தனை வருடமானாலும் காத்திருப்பேன் என்று சத்தியம் செய்து அவனை 'தேவி'க்கு அனுப்பி வைத்தாள் என்றும், இப்போது தன்னை ஏமாற்றி விட்டு மாதவனை மணந்து கொண்டதாகவும், அவள் தனக்கு துரோகம் செய்திருந்தாலும் அவளைத் தன்னால் மறக்க முடியாது. இப்போதும் அவளை ஏற்றுக் கொள்ள தான் தயாராய் இருப் பதாகவும் உருக்கமாய் எழுதியிருந்தான்.

அவளால் நம்பவே முடியவில்லை.

'தீனா இவ்வளவு கீழ்த்தரமானவனா? இந் தளவு மோசமாய் கற்பனை செய்பவனா? நான் அவனை காதலிக்கவில்லை என்பதற்காக என் கேரக்டரை மட்டமாய் நாசப்படுத்தி... சே... எப் படி முடிந்தது அவனால்?'

''என்னடி? மூடி வச்ச அசிங்கமெல்லாம் அம்பலத்துக்கு வந்துடுச்சுன்னு ஆடிப்போய்ட் டியா?''

''அத்தை... தயவுப் பண்ணி அவசரப்படா தீங்க. இது எல்லாமேப் பொய்.''

''இந்த தீனாவை உனக்கு தெரியாது?''

''தெ... தெரியும். ஆனா...''

''அவனோடு போட்டோவுல இருக்கிறது நீ தானே?''

''ஆமாம்... ஆனா...''

''அப்புறம் என்னடி பத்தினி மாதிரி வேஷம் போடறே. நாங்க என்னடி துரோகம் பண்ணினோம்? என் பிள்ளை எப்பேர்ப்பட்ட வன்? எல்லாத்திலேயும் சுத்தம் பார்க்கிறவன், அவன் வாழ்க்கையை அசிங்கப்படுத்திட் டியே?''

''அநாவசியமா பேசாதீங்க அத்தை... எவனோ ஒருத்தன்... எதையோ எழுதினா நம்பிட றணுமா? என் புருஷன் வரட்டும். அவர்கிட் டேயே நியாயம் கேட்கிறேன். அவருக்கு என் னைப் பத்தித் தெரியும். இந்த லெட்டர்ல இருக் கிறது உண்மையா, பொய்யான்னு அவருக்குத் தெரியும்.'' இதுவரை மாமியாரை ஒரு வார்த் தைக் கூட கடிந்துப் பேசாதவள், முதல் முறை யாக குரல் உயர்த்திப் பேசினாள்.

''அதிலே இருக்கிறது உண்மைன்னா... இந்த வீட்டை விட்டுப் போய்டுவியா?''

வாசலிலிருந்து மாதவனின் குரல் வர... இருவரும் திரும்பினர்.

''எ... என்ன சொல்றீங்க?''

''எனக்கும் உன் அருமைப் பெருமை யைப் பத்தின கடிதம் கூரியர்ல வந்தது.'' அவன் முகத்தில் தாண்டவமாடிய வெறுப்பு, வார்த்தை யில் வெளிப்பட்ட கசப்பு... புரிந்து விட்டது கீர் த்தனாவுக்கு. அம்மாவுக்குப் பிள்ளைத் தப்பாமல் இருக்கிறான் என்று.

''நம்பிட்டீங்களா மாதவன்?'' தொய்ந்து வந்தது வார்த்தை.

''அவன்தான் ஆதாரத்தோட, விளக்கமா எழுதி இருக்கிறானே? எப்படியெல்லாம் உனக்கு... அவ னோட அப்படியெல்லாம் இருந்துட்டு, என் னைக் கல்யாணம் பண்ணிக்க மனசு வந்தது? உடம்பு கூசலே?''

''ஐயோ... ஐயோ... வேணாங்க... உங்க வாயால இப்படியெல்லாம் பேசாதீங்க. எவனோ ஒருத்தன் போட்ட லெட்டரை நம்ப றீங்க. ரெண்டு வருஷமா காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிட்ட என்னை நம்ப மாட்டீங்களா? என்னைப் பார்த்து சொல்லுங்க. நான் அப்படிப் பட்டவளா?''

''உன் பேச்சைக் கேட்க நான் தயாரா யில்லே. முட்டாளுமில்லே. நான் போட்டிருக் கிற சட்டை மாதிரியே வேற யாராவது போட்டி ருந்தாக் கூட தாங்கிக்க முடியாதவன் நான்! மறு படி அந்த சட்டையைத் தொடவும் மாட்டேன். ஆஃப்ட்ரால் சட்டைக்கே அப்படி என்றால்... என் வொய்ஃபிடம் எவ்வளவு பர்ஃபெக்ஷன் எதிர்பார்ப்பேன்? எவனோ அனுபவிச்ச... சே...'' நெற்றியில் அடித்துக் கொண்டான் தாள முடியாத ஆதங்கத்துடன்.

''என்னை நம்புங்க மாதவன். என்னை சந் தேகப்படாதீங்க. அவன் தான் என்னை ஒருத லையாய் காதலிச்சான். நான் அதை நிராகரிச் சேன். இந்த போட்டோவிலே வினிதாவும் இருப்பா. சாமர்த்தியமா அவளை கட் பண் ணிட்டு நீங்க நம்பற மாதிரி அனுப்பியிருக்கி றான். என்னை நம்புங்க மாதவன்... ப்ளீஸ் என்னை நம்புங்க.'' அவன் கையை கெட்டியாகப் பற் றிக் கொண்டாள்.

''ச்சீ... விடு. மரியா தையா வெளியேப் போய்டு. என் முகத்தில் முழிக்காதே... போடி.'' அவன் கையை உதறித் தள்ளி விட்டான்.

பொத்தென்று கீழே விழுந்தவள், பாம்பு படமெடுப்பதுபோல் தலை நிமிர்த்தி பார்த்தாள்.

''நான் ஏன் போக ணும்? இதுக்காகவா என் குடும்பத்தை பிரிஞ்சி வந் தேன்? நான் போக மாட்டேன். என் மேலே எந்த களங்கமும் இல்லேன்னு நிரூபிப்பேன். என்னை விரட்ட நினைச்சீங்கன்னா... தற்கொலை பண் ணிப்பேன்'' என்றாள் உறுதியாக.

தாயும் மகனும் அதிர்ச்சியுடன் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.




கீர்த்தனா எவ்வளவு எடுத்துச் சொல்லி யும் இருவரும் கேட்பதாயில்லை.

அவள் இன்னொருவனை காதலித்தவள், படுக்கையையும் பகிர்ந்துக் கொண்டவள் என்ற நினைப்பே மாதவனை ஊசியாய் குத்துகிறது.

## விமான ஓட்டல்

விண்ணில் பறக்கும் விமானம், இன்று வயிறார புசிக்கும் உணவகமாக உருமாறி யுள்ளது. ஆம், இங்கிலாந்தில் தான் இந்த அதி சயம். லண்டனை சேர்ந்த இந்திய வம்சாவளி சாலிக்மியா என்பவர், பிரிட்டிஷ் ஏர்வேஸின் பழுதாகி கிடந்த போயிங்- 747 விமானம் ஒன்றை விலைக்கு வாங்கி மேற்கண்ட கின் னஸ் சாதனைக்கு அடி போட்டு உள்ளார்.

போயிங் விமானத்தை பாஸ்ட்புட் ஓட்ட லாக்கவே இவருக்கு முழுசாக ஆறு மாதங்கள் பிடித்ததாம். தொழிலதிபர் சாலிக்மியாவின் மனதிற்குள் முளைத்த யோசனை, இவரை நிஜ மாகவே புகழ்வானின் உச்சத்துக்கு கொண்டு சேர்த்து விட்டது.

விமான காக்பிட் அறை, சரக்கு பெட்டகம் உள்ளிட்ட அம்சங்களுடன் காட்சி அளிக்கும் போயிங் விமானம், இன்று டைனிங் ஹால், கிச்சன், மதுபான பார் போன்ற சகல இத்யாதி களுடன் தோற்றமளிக்கிறது.

போயிங் ஓட்டலுக்கு சாலிக்மியா சூட்டி யிருக்கும் பெயர் 'ராஜாமணி'. இங்கு பெரும் பாலும் இந்திய வகை நான்- வெஜ் அயிட்டங் களே பரிமாறப்படுகிறது.



இங்கிலாந்தின் பட்டர்ஸ்பால் நகரத் தில் நிலைநிறுத்தப்பட்டு உள்ள இந்த ஓட்டல், அசைவ பட்சிணி மனிதர்களுக்கு மட்டுமே உகந் தது. போயிங் ஓட்டலின் சரக்கு பெட்டகதளம், நடுத்தர மக்களின் பூலோக சொர்க்கம் ஆகும்.

இங்கு சுமார் 150 டைனிங் டேபிள்கள் உள்ளன. மேல் தட்டு ரக மக்களுக்கு குளிர்சா தன வசதியுடன் கூடிய டைனிங் ஹால். விமான காக்பிட் ரூமில் சமையலறை இயங்கு கிறது. இந்த விமான ஓட்டல் மெனு- கார்டில் உள்ள சிக்கன் டிக்- ஆப், மைலட்- ரைஸ், சீட் பாஸ்டி, தந்த்- எர்ரி சிக்கன், விண்டா புரூ நூடுல்ஸ் மற்றும் மைல்- ரைஹ கிரப் சாஸ் ஆகிய அயிட்டங்கள் சர்வதேச அளவில் மிக வும் பிரசித்தம்.

-சந்தியா சிவன்.

நினைப்பே மாதவனை ஊசியாய் குத்துகிறது. அவனுடன் வாழ்ந்த நாட்களை நினைக்கையில் அருவருப்பாய் இருக்கிறது.

இனி அவனுடன் சேர்ந்து வாழ்வதென்பது இயலாத காரியம் என உணர்ந்தவள்... அவனை பார்க்கப் பிடிக்காமல், வீட்டிற்கு இரவில் தாமதமாக வந்தாள். அவளுடன் யாரும் பேசவில்லை.

நீலாம்பிகைதான் சமைத்தாள். கீர்த்தனா சமைத்தால்... சாப்பிட யாரும் தயாராயில்லை. நீலாம்பிகைதான் மகனை கவனித்துக் கொண்டாள்.

துவண்டுப்போனாலும் கீர்த்தனா நம்பிக்கை இழக்கவில்லை.

எடுத்தேன் கவிழ்த்தேன் என்று முடிவெடுத்து தன் கற்பையே சந்தேகப்பட்ட புருஷனை 'போய்யா... நீயுமாச்சு, உன் வாழ்க்கையுமாச்சு' என்று அவனைத் தூக்கியெறிந்து விட்டு தன் வழியைப் பார்த்துக் கொள்ள அவளுக்கும் தெரியும்.

ஆனால் கீர்த்தனா, மாதவனை உயிருக்குயிராய் நேசித்ததால்... அந்த காரியத்தை செய்ய மனது துணியவில்லை. மாதவன் நல்லவன். அவனைப் பெற்றவளும் நல்லவள். அதனால் தான் இக்கட்டான சூழ்நிலையிலும் அவளை அந்த வீட்டின் மருமகளாக ஏற்றுக் கொண்டவள்.

படுபாவி தீனா, அவர்கள் நம்புகிற மாதிரி லெட்டர் எழுதி, போட்டோவும் அனுப்பியிருக்கிறான். அவன் யார்? எப்படிப்பட்டவன், இந்த போட்டோ எந்த சூழ்நிலையில் எடுக்கப்பட்டது என்பதையெல்லாம் ஆதாரத்துடன் இவர்களுக்கு விளக்கி சந்தேகத்தை நிவர்த்தி செய்வது அவள் கடமை. அவசரப்பட்டு நல்ல கணவனையும், மாமியாரையும் இழக்க விரும்பவில்லை. ஜானகி இன்று கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது மகளின் ஆதரவு இல்லாததால்தானே? இந்த திருமண பந்தம் தோற்று விட்டால் ஜானகி படும் கஷ்டத்திற்கோ, கீர்த்தனா அம்மாவை பிரிந்திருப்பதற்கோ அர்த்தமின்றிப் போய் விடுமே!

கீர்த்தனா தீவிரமாய் யோசித்தாள்.

'தீனாவிற்கு மாதவனின் அலுவலக முகவரியும், வீட்டு முகவரியும் எப்படி கிடைத்தது?'

'ச்சட்! நான் தானே அவனுக்கு என் திருமண அழைப்பிதழை அனுப்பி வைத்தேன்? அதிலிருந்து எடுத்து இருப்பான். வினிதா இங்கிருந்திருந்தால் இந்த பிரச்சினையை எளிதாக தீர்க்கலாம். அவளிடம் மூன்று பேரும் சேர்ந்து எடுத்த போட்டோ இருக்கிறது. அது ஒன்றேப் போதுமே... என் மீது சுமத்தப்பட்டிருக்கிற குற்றத்தை தவிடுப் பொடியாக்க. அவள் மலேஷியாவில் வேறு வீட்டிற்கு குடிபோவதாகவும், போனதும், அட்ரஸ்-ம், போன் நம்பரும் தருகிறேன் என்றாள்! எவ்வளவு நாட்களாகிவிட்டது. அவளிடமிருந்து எந்த போனும் வரவில்லையே! வினிதாவின் அப்பாவுக்கு மாற்றலாகி மதுரைக்குப் போய்விட்டார்கள். வினிதாவின் அட்ரஸை எப்படிக் கண்டுபிடிப்பது?' இதே சிந்தனை... தான்.

மாதவன் இப்போது புதிதாய் குடிக்கவும் கற்றுக் கொண்டிருந்தான். அவன் உள்ளே வரும் போதே... குப்பென்று லிக்கர் வாசம் வீசுகிறது.

மனம் குமைந்து கண்ணீர் விடத்தான் முடிகிறது அவளால். ஒவ்வொரு விடியலும் கண்ணீருடனே விடிந்தாலும்... நம்பிக்கையுடனே கண் விழித்தாள்.

நீலாம்பிகை கீர்த்தனாவை முழுக்கவே வெறுத்து விட்டாள்.

புத்தம் புதிய வீட்டின் மயான அமைதி அவள் வயிற்றை பிசைந்தது.

'என் மகனின் வாழ்க்கை அவ்வளவு தானா? கடவுளே... உனக்கு என்ன குறை வைத்தேன் என்று இப்படியொரு தரமிழந்த பெண்ணை மருமகளாய் அனுப்பி வைத்தாய்?

'இல்லை... இதை நான் இப்படியே விட்டுவிடப் போவதில்லை. என் பிள்ளைக்கு நல்ல பெண்ணாய் பார்த்து மறுகல்யாணம் பண்ணி வைப்பேன்! முதலில் இவளை வீட்டை விட்டு வெளியேற்ற வேண்டும்.'

தன் எண்ணத்தை மகனிடமும் வெளிப்படுத்தினாள். மாதவன் பதிலேதும் கூறாமல் மௌனமாய் இருந்தான்.

''என்னப்பா பேசாம இருக்கே?''

''என்னம்மா பேசச் சொல்றே? எதையும் சிந்திக்கிற மனநிலையிலே நான் இல்லேம்மா. வீட்டுக்கு வர்றதே பிடிக்கலேம்மா. உனக்காக தான் வர்றேன். அவ முகத்தைப் பார்க்கவே பிடிக்கலே...''

''புரியுது மாதவா! கொஞ்சம் பொறுத்துக்க... அந்த நாயை எப்படியாவது வெளியே விரட்டியடிச்சுடலாம். எனக்கும் கொஞ்சம் ச... டம் தெரியும். அவளோட காதலன் எழுதின லெட்டரும், போட்டோவும் போதும் நமக்கு. இவகிட்டேர்ந்து ஈஸியா விவாகரத்து வாங்கிடலாம். நல்லப்பொண்ணா, நம்ம குடும்ப கவுரவத்துக்கு ஏத்த மாதிரி பார்த்து உனக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறேன். கவலைப்படாதே... கண்டதையும் நினைச்சு உடம்பை கெடுத்து...

...காதே'' ஜாடைமாடையாய் அவன் குடிப்பழக்கம் தனக்கு தெரிந்துவிட்டது என்பதை சொல்லிக் காட்டினாள்.

மாதவன் எதுவுமே சொல்லாமல் பெருமூச்சு விட்டபடி அங்கிருந்து எழுந்துச் சென்றான்.

இவர்கள் பேசுவதை எல்லாம் அறைக்கு வெளியில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த கீர்த்தனாவுக்கு முகம் வெளிறிப் போயிற்று.

'என் வாழ்க்கை பறிபோய் விடுமோ? இன்னொரு பெண்ணை மணக்க மாதவன் ஒப்புக் கொண்டு விடுவாரோ? அவரின் அம்மா பேசினதுக்கு வேண்டாம் என்று மறுப்பும் சொல்லவில்லையே! மவுனம் என்பது சம்மதத்தின் மறுபெயர் அல்லவா?'

கீர்த்தனா நிலை கொள்ளாமல் தவித்தாள். மாமியாரின் மனசு இளகாதா என்று அதிகாலையில் இன்னும் முன்னதாகவே விழித்தெழுந்து வேலைகள் செய்தாள். வீட்டை பளிச்சென்று வைத்துக் கொண்டாள். திரைச்சீலைகளையும், பெட் கவர்களையும் மூன்று நாட்களுக்கொரு முறை மாற்றி, துவைத்து சுத்தமாக வைத்துக் கொண்டாள்.

அப்பவும் அவள் பக்கம் நீலாம்பிகை திரும்பவில்லை.

அன்றிரவு!

மாதவன் சட்டை பேண்ட்டை கழற்றி லுங்கிக்கு மாறினான்.

பூனைப்பாதம் வைத்து உள்ளே நுழைந்த கீர்த்தனா... சட்டென பின்பக்கமாய் அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

திடுக்கிட்ட மாதவன் அவளை உதறித் தள்ளினான்.

''சீ... வெட்கமாயில்லை? பெண்ணா நீ? உடல் சுகத்துக்கு வெறிப்பிடித்து அலைகிற பெண்ணை இப்போதுதான் பார்க்கிறேன். எச்சில் என்று தெரிந்தப்பிறகும் அதை தொட்டுக் கூட பார்க்க மாட்டேன். உன் மயக்குகிற வித்தையை என்னிடம் காட்டாதே!'' வெறுப்பை கக்கினான்.

புழுபோல் துடித்தாள் கீர்த்தனா.

''என்னைப் பார்த்தா இப்படியெல்லாம் பேசறீங்க? நான் உங்க மனைவி... மறந்துட்டீங்களா?''

''எத்தனை நாளைக்கு இந்த பதவி? மனசளவில் உன்னை எப்பவோ பிரிஞ்சாச்சு. கூடிய சீக்கிரம் சட்டப்படியும்...''

அவளை ஒரு ஜந்துவைப் போல் பார்த்து விட்டு வெளியேறினான்.

அதுவரை அவளிடம் உறுதியாய் இருந்த நம்பிக்கை லேசாய் ஆட்டம் காண ஆரம்பித்தது.

கவலையினால் உடல் இளைத்துப் போனாள் கீர்த்தனா.

அன்று ஐம்பது வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் நீலாம்பிகையுடன் ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தார். ஜாதகம், போட்டோ, படிப்பு, குடும்பம் என்ற வார்த்தைகள் காதில் விழ... புரிந்துப்போயிற்று.

கல்யாணத் தரகரை வரவழைத்திருக்கிறாள்.

'ம்ஹூம்... இதற்கு மேலும் பொறுமையாய் இருக்க முடியாது. என் உரிமையை, வாழ்க்கையை நான் யாருக்காகவும் விட்டுத்தர மாட்டேன்.'

தரகர் போனதும் மாமியாரின் முன்பு ஆவேசமாய் நின்றாள்.

''நீங்கப் பண்றது உங்களுக்கே நல்லாயிருக்கா?''

''எதைச் சொல்றே?'' தெரிந்தும் தெரியாதது மாதிரி கேட்டாள்.

''யாருக்கு பொண்ணு பார்க்கறீங்க?''

''என் பிள்ளைக்கு!''

''நான் அவரோட பொண்டாட்டி! எதுக்காக அத்தை என் வாழ்க்கையில் மண்ணள்ளிப் போடறீங்க?''

''இதோ பார்! என்னை அத்தை, கித்தைன்னு சொல்ற வேலையெல்லாம் வேணாம். கோர்ட்டு, அது இதுன்னு அலைய வேண்டாம். பேசாம உன் கைப்பட ஒரு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டு வெளியேப் போய்டு. வீண் பிரச்சினை வேண்டாம்.''

''நீங்களா இப்படியெல்லாம் பேசறீங்க? என் மேலே எவ்வளவு பாசமா இருந்தீங்க? மாறிட்டீங்களே!''

''வீணாப்பேசி நேரத்தை வீணாக்காதே! என் ஒரே பிள்ளையோட வாழ்க்கை பாழாகிடக் கூடாது. அவனும் வாழணுமில்லையா? உனக்காக உன் காதலனும் காத்துக்கிட்டிருக்கான். இப்பவும் உன்னை ஏத்துக்க தயாராய் இருக்கிறதா எழுதியிருந்தானே. பாவம்... நல்ல பிள்ளை தான் போல! போ... அவன்கிட்டேயே போய் சேர்ந்திடு!''

''சீ...!''

கோபமாய் அதட்டினாள்.

''பொம்பளையா நீ? துடிக்கிறேனே... அழறேனே... அப்பக்கூடவா என் மனசை உன்னால புரிஞ்சுக்க முடியலே? பொம்பளை





மனசை பொம்பளையால புரிஞ்சுக்க முடி
லேன்னா... நிச்சயமா நீ பொம்பளையா இருக்க மு
யாது. பேய்... நீ பேய் தான்! என் வாழ்க்கை
அழிக்க வந்த பேய் நீ!''

அவனிடமிருந்து இப்படிப்பட்ட வார்த்தை
களை எதிர்பார்க்காத நீலாம்பிகை திக்பிரமை பிடித்
வள் போல் நின்றுவிட்டாள்.

14

''பேயா? நான் பேயா? என்னைய
சொன்னோ நாய்னு தெரியாம குளிப்பாட்டி உன்னை
நடுவீட்டிலே வச்சதுக்கு நல்ல பட்டத்தைக் கொடு
திட்டே! பேய்... நான் பேய்...!'' அதையே திரும்
திரும்ப சொல்லிக் கொண்டிருந்தவள், சடாரெ



அறைக்குள் நுழைந்து தாளிட்டுக் கொண்
டாள்.

அவளின் செய்கையில் வித்தியா
சத்தை உணர்ந்த கீர்த்தனா, சந்தேகத்து
டன் ஜன்னல் வழியே பார்த்தாள்.

நீலாம்பிகை ஸ்டூல் போட்டு ஏறி
நின்று கயிறை ஃபேனில் கட்ட முயன்
றுக் கொண்டிருந்தாள்.

உடம்பு தடதடவென ஆடியது
கீர்த்தனாவுக்கு.

''அ...அத்தை... என்ன காரியம்
பண்றீங்க?''

''போதும்டியம்மா... உன் வாயால
நல்ல பட்டத்தைக் கொடுத்திட்டே!
இதுக்கு மேலேயும் இந்த உயிர் உடம்புல
இருந்தா... என்னை விட கேடு கெட்டப்

பிறவி இருக்க முடியாது.''

''தெரியாம வாய் தவறி சொல்லிட்டேன். என்னை மன்னிச்சிடுங்க... முதல்ல கதவைத் திறங்க...!''

நீலாம்பிகை கயிறைப்போட்டு முடிப் போட்டாள்.

''ஐயோ அத்தை... அவசரப்பட்டு முடிவு எடுக்காதீங்க. கதவைத் திறங்க... யாராவது வாங்களேன். ஐயோ...'' பலம் கொண்ட மட்டும் கதவைத் தட்டினாள்.

ஆபீஸிலிருந்து வீடு திரும்பிய மாதவன் அவளின் அலறல் சத்தம் கேட்டு பைக்கை அப்படியே போட்டு விட்டு ஓடிவந்தான்.

நீலாம்பிகை மயக்கத்தில் இருந்தாள்.

சரியான நேரத்தில் கதவை உடைத்து அம்மாவை காப்பாற்றியிருந்தான் மாதவன்.

தண்ணீர் தெளித்து புகட்டியவனின் கண்கள் கலங்கின.

கண்களைத் திறந்தாள் நீலாம்பிகை.

''என்னம்மா இப்படியொரு காரியம் பண்ணிட்டே? என்னை விட்டுட்டு போக எப்படிம்மா மனசு வந்தது? அப்படியென்னம்மா தப்பு பண்ணிட்டேன்?''

''ஆமாம்பா... தப்பு தான் பண்ணிட்டே! இவளை இந்த வீட்டுக்கு கூட்டிட்டு வந்தியே... பெரிய தப்புடா... அது!''

''என்னாச்சம்மா?''

''என்னை பேய்னு சொல்றாடா! நீயெல்லாம் ஒரு பொம்பளையான்னு கேக்கறா!''

''உன்னையா... உன்னையாம்மா அப்படி சொன்னா?'' நரம்புகள் புடைத்துக் கொண்டன.

''உங்கப்பாக் கூட 'சீ' ன்னு ஒரு வார்த்தை சொன்னதில்லே... இவ சொல்லிட்டாளேடா! இவளை செருப்பால அடிச்சு விரட்டு மாதவா!''

''அம்மா சொல்லிட்டே இல்லே? நீ ரெஸ்ட் எடும்மா. உன் ஆசையை நான் நிறைவேத்தறேன். காலைல ஆபீஸ் விஷயமா பெங்களுர் வரை போக வேண்டியிருக்கு. அதுக்கு முன்னால உன் ஆசையை நிறைவேத்திட்டே போறேன்ம்மா!''

அறைக்கு வெளியே நின்றுக் கொண்டிருந்த கீர்த்தனாவை வெறித்துப் பார்த்தவன், பைக்கை எடுத்துக் கொண்டு போய் விட்டான்.

கீர்த்தனாவுக்கு மனசு பக் பக் என அடித்துக் கொண்டது. இனம் புரியாத பயம் இதயம் முழுக்க ஆக்கிரமித்துக் கொண்டது.

ஒரு மணி நேரம் கடந்த பின் மாதவன் திரும்பி வந்தான்.

நல்ல போதையில் இருந்தான். கண்களில் வெப்பேறியிருந்தது.

''ஏய்... உள்ளே வா!'' ஹாலில் ஒரு மூலையில் பயத்துடன் அமர்ந்திருந்த கீர்த்தனாவை ஒரு விரலால் அழைத்தான்.

''இதோ... வந்துட்டேங்க!'' வெகு நாள் கழித்து கணவன் தன்னிடம் பேசிவிட்டானே என்கிற மகிழ்ச்சியுடன் துள்ளி எழுந்து ஓடினாள்.

அவள் உள்ளே வந்ததும் கதவை சார்த்தி தாளிட்டான்.

''என்னங்க?'' என்றவளை ஏறிட்டான்.

அவளைப் பார்க்க பார்க்க வெறி உச்சிக்கு ஏறியது. அம்மா, துடிதுடிக்கும் உடலோடு தூக்கில் தொங்கிய காட்சி கண்முன் வந்தது.

''எங்கம்மாவை நான் தெய்வமா மதிக்கிறவன். அவங்களை விடவும் உலகில் எனக்கு வேறெதுவும் பெரிதில்லை.''

''....?!''

''அம்மா மன உறுதி அதிகமுள்ள பெண்மணி. அப்படிப்பட்டவங்களையே தற்கொலைக்கு தூண்டியிருக்கேளா... நீ எப்பேர்ப்பட்ட பொம்பளை?''

''....!?''

''அம்மா, உன்னை மருமகளா ஏத்துக்கிட்டதே மிகப்பெரிய விஷயம்! பெத்தவ உன்னை நடுத்தெருவிலே நிறுத்திட்டா. ஆனா, எங்கம்மா பெரிய மனசு பண்ணி உன்னை எனக்கு கல்யாணம் பண்ணி, பாசத்தை கொட்டினதுக்கு நீ கொடுத்த பட்டம் பேய்! அப்படித்தானே?''

''இல்லீங்க... நான் எதுக்காக அப்படி சொன்னேன்? உங்களுக்கு வேற கல்யாணம் பண்ண பொண்ணு பார்க்கிறாங்க. என்னை விடுதலை பத்திரம் எழுதி கொடுக்க சொன்னாங்க...''

''ஆமாம்... நான் வேற கல்யாணம் பண்ணிக்கதான் போகிறேன். என்ன பண்ண முடியும் உன்னால? ஒரு ஏழைக்கு வாழ்க்கைத் தரலாம். ஆனா இன்னொருத்தனை உடம்பாலயும், மனசாலயும் சுமந்த உன்னை ஏத்துக்கிற அளவுக்கு நான் பரோபகாரி இல்லை.''

''ஐயோ... என்னைத் தப்பாவே புரிஞ்சுட்டிருக்கீங்களே!'' அழுதாள்.

''இந்த பாசாங்கைப் பார்த்து உருகறதுக்கு நான் பழைய மாதவன் இல்லே. எதுக்காக என்னை ஏமாத்தி கல்யாணம் பண்ணிக்கிட்டே? என் வாழ்க்கையை நாசம் பண்றதுக்கா?''

''உங்களுக்கு எப்படி சொல்லி புரிய வைக்கிறதுன்னு எனக்குப் புரியலீங்க. வினிதாவுக்கு



எல்லா உண்மையும் தெரியும். ஆனா, அவ மலேசியாவிலே எங்கே இருக்கான்னே தெரியலே. உங்க மேலே உயிரையே வச்சிருக்கேன். அதனால தானே என் குடும்பத்தை மறந்துட்டு நீங்களே கதின்னு வந்தேன்.''

''வரமா? உனக்கெல்லாம் கிழவனுக்கு மூன்றாந்தாரம், நாலாம்தாரம்னு போகிற அளவுக்கு தான் குடும்பத்தகுதி! என்னை மாதிரி ஆள் கிடைச்சா விட்டுவியா என்ன? நீனாவும் நல்லாதானே இருக்கான்? அவனை ஏன் விட்டுட்டு வந்தே?'' மிக கேவலமாய் பேசினான்.

வார்த்தைகளின் வீச்சைத் தாங்காமல் வாயடைத்துப் போயிருந்தாள்.

''எங்கம்மாவை கொஞ்சம் நான் லேட்டா வந்திருந்தா கூட உயிரோட பார்த்திருக்க முடியாது. அதுக்குக் காரணமான உன்னை சும்மா விடலாமா?''

''.....?!''

''உன்னை செருப்பால அடிக்க விரட்டச் சொன்னாங்க எங்கம்மா! அவங்க பேச்சை தட்டாத பிள்ளை நான்!'' என்றவன் காலிலிருந்த செருப்பை கழற்றினான்.

பயந்து பின் வாங்கினாள் கீர்த்தனா.

''அடிக்காதீங்க... ப்ளீஸ்... நான் தெரியாமப் பேசிட்டேன். என்னை மன்னிச்சிடுங்க''

அவன் எதையும் காதில் வாங்கிக் கொள்வதாய் இல்லை.

அவள் தலைமுடியை கொத்தாய் பற்றி செருப்பால் கன்னத்தில் மாறி மாறி அடித்தான்.

''போய்டு... எங்களை விட்டுப் போய்டு...''

''வலிக்குதுங்க... அடிக்காதீங்க... தாங்க முடியலியே... அம்மா...!''

''கேடு கெட்ட அம்மா ஞாபகம் வேற வருதா?'' இடுப்பிலிருந்த பெல்ட்டை உருவி விளாசித் தள்ளினான்.

பொறியில் மாட்டிய எலிப் போல் அடிபட்ட வலியில் இங்குமங்கும் ஓடினாள், பதுங்கினாள், கதறினாள்.

அவள் கத்த கத்த அவனின் மூர்க்கம் அதிகமாயிற்று. சுவற்றில் மோதி தலையிலிருந்து ரத்தம் வடிந்தது. உதடு கிழிந்தது. உடம்பெங்கும் ரத்தக்கோடுகள்.

ஒரு கட்டத்தில் அலறக் கூட தெம்பின்றி சுருண்டு விழுந்தாள்.

களைத்துப்போனான் மாதவன்.

''மரியாதையா வீட்டை விட்டுப் போய்டு. இல்லே கொன்னுடுவேன்!'' அவளை எட்டி உதைத்து விட்டு வெளியேறினான்.

அடிபட்ட வேதனையோடு முனகிக் கொண்டிருந்த அவளை கவனிக்க யாருமில்லை. ரத்தம் வெளியேறிக் கொண்டிருக்க மயக்கத்திற்குப் போனாள்.

அதிகாலையிலேயே எழுந்து பெங்களூர் புறப்பட்டு விட்டான் மாதவன். முன்தினம் இரவு நடந்ததையே மறந்து விட்டான்.

ஒரே நாளில் வந்த வேலை முடிந்துவிட்டது.

'வீட்டிற்கு போய் என்ன பண்ணப் போகிறோம்? அந்த நாயின் முகத்தை தான் பார்க்க வேண்டி வரும். வீட்டை விட்டு போய் விட்டால் நிம்மதியாய் இருப்பேன். அவளானால் அட்டைப்போல் ஒட்டிக் கொண்டு உயிரை வாங்குகிறாள். ஏன் என் வாழ்க்கை இப்படியாகி விட்டது? எல்லா விஷயத்திலும் கவனமாய் இருப்பேனே... அவள் விஷயத்தில் மட்டும் எப்படி ஏமாந்தேன்?' சாலையோரம் நடந்துக் கொண்டே யோசித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று...

சுரீர் என யாரோ சூடிழுத்துப்போல் வலி துடித்துப்போனான் மாதவன்.

அழுக்கும், அலங்கோலமுமான உடையில் கோணங்கித்தனமான சிரிப்புடன் ஒரு பைத்தியம். கையில் சாட்டை.

''ஏய்.. போ... போ!'' என்று ஒரு மனிதர் விரட்டி விட்டு, ''இது பைத்தியம் சார் போற வர்றவங்களை திடீர்னு அடிச்சிடும். பார்த்துப் போங்க!'' என்றார்.

கையில் விழுந்திருந்த அடியில்... பட்டையாய் சிவந்து எரிச்சலாய் இருந்தது. கையை உதறிக் கொண்டான்.

'ஐயோ... அடிக்காதீங்க.. வலிக்குது... வலி உயிர்போகுது...' கீர்த்தனாவின் அலறல் காதில் எதிரொலித்தது.

'ஒரு அடிக்கே இவ்வளவு வலிக்கிறதே!' மனசுக்குள் என்னவோ பிறாண்டியது.




பெங்களூரிலிருந்து திரும்பினான்.

''வாப்பா'' என்றாள் அம்மா.

''எப்படிம்மா இருக்கே? முகம் டல்லாயிருக்கே''

''பாம்பு காலை சுத்திக்கிட்டிருக்கே... அப் படித்தான் இருப்பேன். குளிச்சிட்டு வா... சாப் பாடு ரெடியாயிருக்கு.''

''அவ... அவ... இன்னும் இருக் காளாம்மா?''

''லேகிலே போய்டுவாளா என்ன? என் உயிரை பலி வாங்கிட்டுதான் போவா.''

''ப்ச்... ஏம்மா இப்படி பேசறே? சாப்பாடு எடுத்து வை. பசிக்குது... பத்து நிமிஷத்திலே வந்திடறேன்.''

குளித்து முடித்து சாப்பிட அமர்ந்தான்.

பரிமாறும் போது கையில் நீளமாய் சிவந்து தடித்திருந்த காயத்தை பார்த்து நீலாம் பிகை திடுக்கிட்டாள்.

''மாதவா... என்னப்பா இது காயம்?''

சொன்னான்.

''அவன் நாசமாப் போக... ஏம்பா வலிக் குதா? இரு மருந்து எடுத்திட்டு வர்றேன்.''

அம்மாவின் அன்பில் நெகிழ்ந்து போன வன் கீர்த்தனாவை தேடினான்.

சப்தமே இல்லை.

''அவ எங்கே?''

''பின்பக்கம் மோட்டார் ரூம்லே கிடக் குது.''

சாப்பிட்டு முடித்து விட்டு வீட்டின் பின் பக்கம் சென்றான். அங்கு பத்துக்கு பத்தடியில் ஒரு சின்ன அறை உண்டு. மோட்டார் பொருத் தப்பட்டிருந்த அந்த அறையில் வேண்டாத பொருளையும் போட்டிருந்தாள் நீலாம்பிகை.

அங்கு... ஒரு மூலையில் ஜுரத்தில் உடல் நடுங்க படுத்துக் கொண்டிருந்தாள் கீர்த்தனா.

அருகே சென்று பார்த்தவன் உறைந்து போனான்.

முகம் வீங்கிப் போய் அகோரமாய் இருந் தது. கன்னங்களில் காலடித்தடம் போல செருப் பின் தழும்புகள்... சிவந்துக் கன்றி, உப்பிப் போய் இருந்தது. உதடு கிழிந்ததில் அது வேறு வீங்கி ரத்தமாய்...

உடம்பெங்கும் கண்களில் தெரிந்த இட மெல்லாம் பட்டை பட்டையாய் ரத்தக் கோடு கள்.

உறைந்து போய் விட்டான்.

'இவ்வளவு மோசமாகவா அடித்து விட் டேன்? மூன்று நாளாக இவள் காயத்திற்கு மருந்து போடவில்லையா? உடம்பு வேறு இப் படி தூக்கிப் போடுகிறதே?'

அவளைத் தொட்டான். நெருப்பைத் தொட்டது போலிருந்தது.

'கடவுளே... இப்படி கொதிக்கிறதே?'

அவன் கைப்பட்டதில் கண் திறந்த கீர்த்த னாவின் முகம் பயத்தில் வெளிறியது. மெல்ல எழுந்தமர்ந்தவள் உட்கார்ந்தபடியே பின் னோக்கி நகர்ந்தாள்.

''நா... நான் ஒன்னும் பண்ணலீங்க... அத் தையை நான் எதுவும் சொல்லலே... என்னை அடிக்காதீங்க... வலிக்குதுங்க... நான் எந்த தப் பும் பண்ணலீங்க... அடிக்காதீங்க...'' தடதட வென நடுங்கும் உடம்பும், கண்களில் அதீத பய மும், குழந்தைத்தனமான அழுகையும், மாத வனை என்னவோ செய்தது.

தப்பு செய்து விட்டோமோ? என்று தோன் றியது.

கண்கள் இதயத்தின் கண்ணாடி. இவள் கண்களில் கள்ளம் தெரியவில்லையே. காட்டுமி ராண்டித்தனமாய் அடித்திருக்கிறேன். அப்படி யும் இங்கேயே இருக்கிறாள் என்றால்?

'தீனாவை காதலித்தது நிஜமென்றால், என் டார்ச்சர் தாங்காமல், 'போடா... நீயுமாச்சு, உன் வாழ்க்கையுமாச்சு' என்று அவனிடமே போயி ருக்கலாமே! ஏன் போகவில்லை?

என் அவசரபுத்தி, தீர விசாரிக்காமல் தண் டித்து விட்டதோ? ஒருதலையாய் காதலித்து இவள் கிடைக்காத ஆத்திரத்தில் இவள் வாழ்க் கையை கெடுக்க அந்த கடிதம் அனுப்பியிருக்க லாம். நவீன யுகம் இது. அமெரிக்காவில் பிறந்த ஒரு பெண்ணையும், ஆண்டிப்பட்டியில் பிறந்த ஆணையும் போட்டோவில் இணைத்து ட்ரிக்ஸ் பண்ண சாத்தியக் கூறுகள் அதிகமிருக்கும்

போது... அந்த போட்டோவிலும் ஏன் இல்லா தல்லா இருக்கக்கூடாது? எப்படி யோசிக்காமல் போனேன்? என்னையே நம்பி வந்தவளுக்கு நான் நம்பிக்கைத் துரோகம் அல்லவா செய்து விட்டேன்? நம்பிக்கைதானே வாழ்க்கை? பரஸ் பரம் நம்பிக்கையில்லாவிட்டால் வாழ்க்கை குரங்கு கையில் கிடைத்த பூமாலையாகி விடுமே. இதோ.... கிழிந்த கந்தல் துணியாக கிடக்கிறாளே... இவளா தரமிழந்தவள்?

'இல்லை... இல்லை... இல்லை' என்று மனசு ஓலமிட்டது.

அவளின் அலங்கோலமான தோற்றம் மாதவனை இம்சிக்க... வார்த்தைகள் வெளிவரா மல் தொண்டைக்குள்ளேயே சிக்கிக் கொண் டன.

அவன் அவளை நோக்கி கையை நீட்டிய படி அருகில் செல்ல..

ரொம்ப பயந்து போன கீர்த்த னாவுக்கு வலிப்பு வர ஆரம்பித்து விட்டது.

காலும், கையும் வெட்டி வெட்டி இழுக்க...

''ஐயோ... கீர்த்தி'' என்றலறி னான் மாதவன்.

''மனுஷனா

சார் நீங்க?'' டாக்டர் கோபமாய் மாதவனை முறைத்தார்.

''.....'' தலை கவிழ்ந்தான்.

''மாட்டை அடிக்கிற மாதிரி அடிச்சிருக் கீங்க. யாருங்க? உங்க வொய்ஃபா?''

''ம்.''

''வொய்ஃப்பா? அடிச்சிடணுமா? காய மெல்லாம் பலமா இருக்கு. ஒரு இடம் பாக்கி யில்லே. அடிபட்ட காயத்துக்கு ஃபர்ஸ்ட் எய்ட் தராம அப்படியே விட்டிருக்கீங்க. பட்டினியும் போட்டிருக்கீங்க. காய்ச்சல் அதிகமாகி ஜன்னி யிலே போய் நிறுத்தியிருக்கு. சீரியஸ் கண்டி ஷன்ல இருக்காங்க. உடனே நாங்க போலீஸ்ல கம்ப்ளெண்ட் பண்ணியாகணும். இது போலீஸ் கேஸ்.''

''டாக்டர் ப்ளீஸ்... அப்படியெல்லாம் பண்ணிடாதீங்க. நான் கவுரவமான குடும்பத்தைச் சேர்ந்த வன்.'' கெஞ்சினான்.

''கவுரவமான வங்க செய்யற காரி யமா சார் இது? என்ன... டவுரி கேட்டு அடிச் சீங்களா?''

''எங்களது காதல் கல்யாணம் சார். கட்டினப் புட வையோட அவளை ஏத்துக்கிட்டவன். ப்ளீஸ், நான் கோபத் துல அடிச்சிட்டேன். போலீஸ் அது இதுன்னு போய் என் வாழ்க்கையை நாச மாக்கிடாதீங்க. என் கீர்த்தியை எப்படியா வது காப்பாத்திக் கொடுத்திடுங்க. எவ் வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை. ப்ளீஸ் டாக்டர்.'' அவர் கையை பிடித்து அழு தான்.

டாக்டர் கொஞ்சம் நிதானத்துக்கு வந்தார்.

அவள் அபாயக் கட்டத்தை தாண்ட வே மூன்று நாட்களாயிற்று.

மாதவன் அருகிலிருந்து அவளை கவனி த்துக் கொண்டான். அவள் வலியால் முகம் சுரு

## இன்டர்நெட்டில் பைபிள்!

காலத்தின் அபரிமித வளர்ச்சியான இன்றைய நவீன யுகத்தில் தவிர்க்க முடியாதது கணிப்பொறி. இதை அச்சு இயந்திரத்தின் பரிணாம வளர்ச்சி என்றும் கூறலாம். பழமைக்கும், புதுமைக்கும் பாலம் அமைக்கும் செயலாக உலகின் முதல் பைபிள் இப்போது இன்டர் நெட்டில் ஏற்றப்பட்டு உள்ளது.

ஜான் கூடன்பர்க் என்ற ஜெர்மானியர் 1450-ல் அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்தார். அவரே 1455-ல் கிறிஸ்தவர்களின் புனித நூலான பைபிளை அச்சில் ஏற்றி புத்தகமாக வெளியிட்டார். 1268 பக்கங்களுடன் இரண்டு தொகுதிகளாக வந்தது அந்த பைபிள். 'கூடன்பர்க் பைபிள்' என்று அழைக்கப்பட்ட அது சுமார் 200 பிரதிகளே அச்சடிக்கப் பட்டது.

அரிய பொக்கிஷமான அந்த பிரதிகளில் பல காணாமல் போய் விட்டன. 1978-ல் கிடைத்த ஒரு பிரதியின் மதிப்பு மட்டும் சுமார் ரூ. 1000 கோடி ஆகும். டெக்சாஸ் பல்கலைக்கழகம் இந்த பைபிளை தற்போது இன்டர்நெட்டில் வெளியிட்டுள்ளது. விரைவில் சி.டி. ஆகவும் வெளியிட திட்டமிட்டுள்ளது.



ஷேக்ஸ்பியரின் புகழ் பெற்ற நாடகங்கள், புகழ் பெற்ற ஆங்கிலக் கவி வில்லியம் வேர்ட்ஸ்வர்த்தின் மனதை மயக்கும் கவிதைகள் என அனைத்துமே விரலின் நுனியில் உள்ளது. ஆமாம், பட்டனை தட்டினாலே போதும். இந்த வரலாற்று பெட்டகங்கள் அனைத்துமே இன்டர்நெட்டில் நம்மை வரவேற்கின்றன. அரிய நூல்களை எல்லாம் கணினியில் ஏற்றும் காலம் வந்து விட்டது. நமது பழைய இலக்கியங்களையும் இதுபோல் கணினி மயமாக்கும் காலம் வெகுதூரம் இல்லை.

-அனுராதா.

கும் போதெல்லாம் இவன் வேதனைப்பட்டான். எல்லாவற்றையும் விட பெரிய வேதனை, கீர்த்தி அவனிடம் ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை. ஏறிட்டும் பார்க்கவில்லை... என்பதுதான்.

நீலாம்பிகைக்கு மகனின் போக்கு ஆச்சர்யத்தை தந்தது.

"என்னடா... அவளுக்குப் போய் சேவை பண்றே?"

"கீர்த்தி என் மனைவிம்மா. அந்த லெட்டர், போட்டோ எல்லாமே பொய்ம்மா. நான் தான் அவசரப்பட்டுட்டேன்."

"எப்படி சொல்றே? அவ நிரூபிச்சாளா?"

"தப்பு செய்யறதுக்கும் ஒரு தைரியம் வேணும்மா. அது என் கீர்த்திக்கிட்டே கிடையாது."

'கீர்த்தனா நல்லவளா, கெட்டவளா?' குழப்பமாயிருந்தது நீலாம்பிகைக்கு.

பதினைந்து நாட்களுக்கு பிறகு கீர்த்தனா டிஸ்சார்ஜ் செய்யப்பட்டாள்.

வீட்டுக்கு வந்த பின்பும் யாரிடமும் பேசவில்லை. மாதவன் அவளிடம் நெருங்கவே தயங்கினான்.

'இரண்டு நாள் போகட்டும், சகஜ நிலைக்கு வருவாள்' என்று தேற்றிக் கொண்டான்.

காயங்கள் முழுக்க ஆறாத நிலையில் கீர்த்தனாவை பார்க்கையில் நீலாம்பிகைக்கும் பரிதாபம் ஏற்பட்டது.

மறுநாள் காலை!

மாதவன் கிச்சனிற்குள் நுழைந்து பால் கவரை உடைத்து காய்ச்சினான்.

"இங்கே நீ என்ன பண்ணிட்டிருக்கே?" ஆச்சர்யமாய் கேட்டபடி வந்தாள் அம்மா.

"பால் காய்ச்சறேன்."

"காபி கேட்டா நான் போட்டுத் தரமாட்டேனா? நீ போ."

"இல்லேம்மா... எனக்கு காபி கேட்டா நீ போட்டுத்தருவேதான். ஆனா இது கீர்த்திக்காக. ஹார்லிக்ஸ் கரைச்சுத் தரணும். நீ செய்ய மாட்டே. நான் தானே கவனிச்சுக்கணும்... நீ போ."

"ரொம்ப புத்திசாலித்தனமா பேசறதா நினைப்பு. நான் செய்யமாட்டேன்னு சொன்னேனா? போடா... போய் அவளை கவனி. நான் எடுத்திட்டு வர்றேன்."

மாதவன் சந்தோஷமாய் வெளியில் வந்தான்.

கீர்த்தனா இருந்த அறை கை வைத்ததும் திறந்து கொண்டது.

அவள் இல்லை.

பாத்ரூமில் தேடினான். கதவு திறந்தே இருந்தது. வீட்டின் பின்புறம், பூஜையறை, மாடி என்று முழுக்கவே தேடினான். ஏதோ ஒரு சங்கடம் வயிற்றைப் பிசைய மறுபடி அவன் அறைக்கு வந்தான்.

தலையணைக்கடியில் இரண்டு கவர்கள் இருக்க... கைகள் நடுங்க எடுத்துப் படித்தான்.

'அன்பில்லாத மாதவனுக்கு,

உங்கள் விருப்பப்படி உங்களை விட்டு, உங்கள் வீட்டை விட்டு, உங்கள் வாழ்க்கையை விட்டுப் போகிறேன். கேட்டுக் கொண்டபடி 'விடுதலை பத்திரம் தனியே எழுதி வைத்திருக்கிறேன். எத்தனை திருமணம் செய்து கொண்டாலும் இந்த ஏழைப் பெண் குறுக்கே வரமாட்டாள். ஏழை சொல் அம்பலத்தில் ஏறாது என்பது என் வரையில் நிரூபணமாகி விட்டது. என் நியாயத்தை எடுத்துச் சொல்ல என் பக்கம் யாருமில்லை. உங்கள் அம்மா நல்ல பெண்ணாய் பார்த்து மணமுடிப்பார்கள். அந்தப் பெண்ணையாவது சந்தேகப்படாமல் சந்தோஷமாய் வைத்திருங்கள். என்னை நிரூபிக்காமல் இங்கிருந்து போகிறேன் என்பதில் வருத்தம்தான். என்னை எனக்குத் தெரியும். அதுபோதும் எனக்கு. விடை பெறுகிறேன்... மாறாத வடுக்களுடன்... மனதிலும்... உடலிலும்.

கீர்த்தனா.'

கண்கள் இருண்டன மாதவனுக்கு.

"கீர்த்தனா!!" என்றலறினான்.




"குட்மார்னிங் சார்!" உள்ளே நுழைந்த மாதவனுக்கு விஷ் பண்ணினான் பியூன் மருது.

"ம்..." தலையாட்டியபடி தன் கேபினுக்குள் போய் விட்டான்.

மருது அவன் அணிந்திருந்த சட்டையும், தன் சட்டையும் ஒரே மாதிரி இருப்பதுப் பார்த்து சலித்துக் கொண்டான்.

மாதவனின் அறைக்குள் நுழைந்தான்.

ஏதோ யோசனையில் இருந்தவனின் முகத்தில் ஒரு வார தாடி.

"என்ன சார் புறப்படலியா?"

"எங்கே?"



"இல்லே... உங்களை மாதிரியே நானும் ஷர்ட் போட்டிருக்கேன். உங்களுக்கு பிடிக்காதே. உடனே கடைக்குப் போய் வேற வாங்கிப் போட்டுப்பீங்களே!"

விரக்தியாய் சிரித்துக் கொண்டான் மாதவன்.

"மத்தவங்க என்னை மாதிரி உடுத்தக்கூடாதுன்னு நினைச்சிருந்தது ஒரு காலம். ஆனா, இப்ப மத்தவங்க மாதிரி நானும் சந்தோஷமா வாழ மாட்டேனான்னு இருக்கு. சரி... விடு. நேத்து ஒரு மஞ்சள் கலர் ஃபைலை கப்போர்ட்ல வைக்க சொல்லி கொடுத்தேனே... அதை எடுத்துட்டு வா!"

மருது வெளியே சென்றான்.

மாதவன் ஆயாசமாய் தலைமுடியை இரு கைகளால் அழுத்தி ஒதுக்கிக் கொண்டான். மனக்கண்முன் கீர்த்தனா வந்தாள்.

'எங்கேப் போயிட்டே கீர்த்தி? நான் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்பதற்குள், அதற்கு அவகாசமே தராமல் எங்கு தான் போனாய்? நான் உன்னை சந்தேகித்தது மிகப்பெரும் அநியாயம். ஆனால் உணர்ந்து விட்டேன் கீர்த்தி. வந்து விடு. எங்கிருந்தாலும் வந்து விடு!'

கீர்த்தனா வீட்டை விட்டுப்போய் இரண்டு மாதம் ஓடி விட்டது. அண்ணன் வீடு உள்பட எங்கெங்கோ தேடிப்பார்த்தும்... கிடைக்கவில்லை.

"சார்... பைல்!" மருது வந்தான்.

"வச்சிட்டுப்போ!"

சற்று நேரத்தில் அலுவலகப் பணியில் மூழ்கிப் போனான்.

இப்போதெல்லாம் அவனுடைய ஒவ்வொரு மணித் துளியும் உப்பு சப்பின்றி, சுவாரஸ்யமில்லாமல் தான் கழிகின்றன.

மாலை அலுவலகம் முடிந்து வீடு திரும்பிய போது அம்மா இவனுக்காகவே வாசலில் காத்திருந்தாள். பாவம் அவளுக்கும் குற்றமுள்ள நெஞ்சு. அநியாயமாய் ஒரு பெண்ணின் வயிற்றெரிச்சலை கொட்டிக் கொண்டோமே என்ற வேதனையில் சரிவர உறங்கி மூன்று மாதமாகி விட்டது.

"வா... மாதவா..." என்றாள் அவசரமாய்.

"என்னம்மா, டென்ஷனாத் தெரியறே?"

"யாரோ வினிதாவோ, அனிதாவோ சரியா தெரியலே... மலேஷியாவிலேர்ந்து போன் பண்ணினா. கீர்த்தனாவோட படிச்சவளாம். 'இப்ப கீர்த்தனா உன் கூடயா இருக்கிறா'ன்னு கேட்டுட்டேன். அவ திகைச்சுப் போயிட்டா. 'என்ன பண்ணீங்க அவளை'ன்னு காச் மூச்னு கத்த ஆரம்பிச்சிட்டா. நான் நடந்ததை சொன்னேன். 'வரட்டும் மாதவன் கிட்டேயே பேசிக்கிறே'ன்னு சொன்னா. எட்டு மணிக்கு போன் பண்றாளாம்!"

"சரி" என்றான் யோசனையாய்.

சொல்லி வைத்தாற்போல் எட்டு மணிக்கு வினிதாவிடமிருந்து போன் வந்தது. எடுத்ததுமே கத்த ஆரம்பித்து விட்டாள்.

"ஆர் யூ மேன்? உங்களுக்கெல்லாம் எதுக்கு சார் கல்யாணம்? உங்களைப் பெத்தவ மேலே யாராவது களங்கம் சுமத்தினா... நம்பிடுவீங்களா? யாரோ ஒரு தாய் பெத்த பொண்ணு தானே? எதை வேணும்னாலும் பேசிடலாம். அப்படித்தானே? கீர்த்தி உங்கமேலே எவ்வோ அன்பு வச்சிருந்தா தெரியுமா? அவ பேர்ல யாராவது தப்பா சொன்னா அதிலே உண்மையிருந்தாலும் நம்பக் கூடாது. அது தான் காதல். நீனாவைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். கீர்த்தனாவை ஒரு தலையா காதலிச்சவன். கீர்த்தனா உங்களை கல்யாணம் பண்ணிக்கிட்டது தெரிஞ்சதும் மோசமான செயல்ல இறங்கிட்டான். அவன் உங்களுக்கு அனுப்பிய போட்டோவுல நானும் இருப்பேன். சாமர்த்தியமா கட் பண்ணிட்டான். அந்த போட்டோவை உடனே அனுப்பி வைக்கிறேன். கடவுள் இருக்கிறான் சார்! ஒரு கற்புக்கரசியோட கண்ணீர் சும்மா விடாது. போன வாரம் நீனா கோவாவுல ஒரு ஆக்ஸிடெண்ட்ல இறந்துட்டான்னு கேள்விப்பட்டேன். அதுக்காக அப்ப வருத்தினேன். ஆனா, இப்ப சந்தோஷப்படறேன். இங்கே என் ஹஸ்பண்டுக்கு உடம்பு சரியில்லாமப் போயி ரெண்டு மாசமா ஹாஸ்பிடல்ல தான் இருந்தார்.

உருத்திராட்சம் தற்போது அணிகலன்களில் ஒன்றாக ஆகிவிட்டது. நேபாளத்தில் விளையும் உருத்திராட்சத்திற்கு எலியோ கார்பஸ் கனிட்ரஸ் என்று தாவரப் பெயர். பாலைக்காய் நோய்க்கு மருந்தாகப் பயன்படுத்தப்படும் இதனை செந்தமிழில் 'அக்கமணி' என்று அழைப்பர்கள்.

வெண்ணிறம், செந்நிறம், பொன்னிறம், கருநிறம் கொண்ட இதன் மதிப்பை இதில் உள்ள கோடுகளை(முகங்களை)க் கொண்டு கணக்கிடப்படுகிறது. உருத்திராட்சம் ஒன்று முதல் [illegible] முகங்களை உடையது. பொதுவாக உருத்திராட்சம் [illegible] வகைகளில் கிடைக்கும். அவற்றில் இந்தியாவில் மட்டும் [illegible] வகைகளில் கிடைக்கின்றன. நேபாளத்தில் விளையும் உருத்திராட்சமே அணியக் கூடியதாகக் கருதப்படுகிறது.

-ஆர்-அனிதா, கம்பம்.

கேள்விப்பட்டா கீர்த்தனா வருத்தப்படுவான்னு தான் போன் பண்ணாம இருந்தேன். ஆனா, முன்னேயே பண்ணியிருந்தா... என் கீர்த்தனா இப்படியொரு முடிவு எடுத்திருக்க மாட்டான்னு தோணுது. தயவு செய்து எப்படியாவது அவளைக் கண்டுபிடிச்சுங்க..." அவன் பேசிக் கொண்டே போக...

மாதவன் இன்னும் கூனிக்குறுகிப்போனான்.

பைக் அலுவலகத்தை நெருங்க... வேகத்தைக் கட்டுப்படுத்தினான்.

கேட்டிற்கு வெளியே ஒரு ஓரமாய் நின்றுக் கொண்டு கண்களை இடுக்கியபடி வருகிறவர்களை உற்று கவனித்துக் கொண்டிருந்த பெண்மணியைப் பார்த்து விட்டான் மாதவன்.

'யாரது? கீர்த்தனாவின் அம்மா போல் உள்ளதே?' பைக்கை நிறுத்தினான்.

அவனைப் பார்த்து விட்ட ஜானகி வேகமாய் நடந்து அருகில் வந்தாள்.

இளைத்து, கறுத்து, கவலைப்படிந்த முகத்துடன் பரிதாபத்திற்குரிய தோற்றத்தில் இருந்தவளைப் பார்க்கும் பொழுது... மனசு இளகியது.

"வ... வணக்கம் மாப்பிள்ளை!"

கனிவாய் புன்னகைத்தான் மாதவன்.

"எப்படி இருக்கீங்க?"

"நா... நான் ஒரு முக்கியமான விஷயம் சொல்லதான் வந்தேன்..."

"என்ன அத்தை?"

அந்த வார்த்தையில் உள்ளம் குளிர்ந்தது.

"கீர்த்தனா... இப்ப என் கூடதான் இருக்கா!"

"எ...என்ன?" மிக மிக அதிர்ந்தான்.

கூடுவாஞ்சேரியில்... ஒதுக்குப்புறமாய் இருந்தது அந்த ஒற்றை அறை கொண்ட ஓடு வேய்ந்த வீடு.

கீர்த்தனா குழந்தைகள் காப்பகத்தில் வேலை செய்கிறாள். அம்மாவை எந்த வேலைக்கும் அனுப்புவதில்லை. சொற்ப சம்பளத்தில் இருவரும் நிம்மதியாகவே வாழ்ந்தனர். ஜானகிக்கு தான் மகளைப் பார்க்கும் போதெல்லாம் கண்ணீர் சுரந்தது. எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். மாதவனுடன் வாழமாட்டேன் என்று பிடிவாதமாய் மறுத்துவிட்டாள்.

ஜானகி தந்த டிபன் பாக்ஸை வாங்கி பேகில் வைத்துக் கொண்ட கீர்த்தனா, "வர்றேம்மா!" என்று செருப்பை மாட்டினாள்.

அப்போது வாசலில் ஆட்டோ வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

வியப்புடன் எட்டிப்பார்த்தவள் திடுக்கிட்டாள்.

ஆட்டோவிலிருந்து மாதவனும், நீலாம்பிகையும் இறங்கினர்.

கீர்த்தனா சந்தேகத்துடன் அம்மாவைப் பார்க்க, ஜானகி தலைகுனிந்து கொண்டாள்.

புரிந்து விட்டது.

இளைத்து, நிறம் குன்றி, கழுத்திலும், கையிலும் காயத்தின் தழும்புகளுடன், ஆனால் கண்களில் அந்நியப் பார்வையுடன் நின்றிருந்த தன் மனைவியைப் பார்த்ததும் சந்தோஷத்தில் விம்மினான் மாதவன்.

"எப்படி இருக்கே கீர்த்தி?"

"எங்கே வந்தீங்க?"

"கீ...ர்...த்..தி!"

"என்னம்மா இது? உன் புருஷனைப் பார்த்து எங்கே வந்தீங்கன்னு கேக்கறே? இத்தனை மாசமா உன்னை காணாம துடிச்சுப் போய், தேடாத இடம் பாக்கியில்லை. அவனைப் போய்..." என்றாள் நீலாம்பிகை ஆதங்கத்துடன்.

"ஏன் தேடணும்? அதான், நீங்க கேட்டபடி விடுதலைப்பத்திரம் எழுதிக் கொடுத்துட்டு வந்துட்டேனே! எதுக்காக மறுபடி என் நிம்மதியை கெடுக்கறீங்க?"

"கீர்த்தி... கொல்லாதே என்னை! நான் அவசரப்பட்டு உன்னை சந்தேகப்பட்டுட்டேன். இப்ப நினைச்சாக் கூட எனக்கே அசிங்கமாயிருக்கு. ஆனா, இதை நான் அப்பவே உணர்ந்துட்டேன். உன்கிட்டே மன்னிப்பு கேக்கணும்னு நினைச்சிட்டிருந்த நேரத்திலே தான் நீ வீட்டை விட்டு போயிட்டே...."

"எந்த விளக்கமும் எனக்குத் தேவையில்லே. நான் இப்ப எங்கம்மாவோட நிம்மதியா இருக்கிறேன். போயிடுங்க..."

"என்னை மறந்துட்டியா கீர்த்தி?" என்றான் தழுதழுப்பாய்.

"எப்படி முடியும்? என் உடம்புல உள்ள ஒவ்வொரு தழும்பும் உங்களை தானே நினைவுப்படுத்துது!"

"மன்னிச்சிடு கீர்த்தி... மிருகத்தனமா நடந்துக்கிட்டேன். அதுக்காக நான் ஃபீல் பண்ணாத நாளே இல்லை. என்னை மன்னிச்சிடு!"

"ஸாரி... என்னால எதையும் மறக்க முடியாது. எனக்கு நேரமாகுது. வீணா பேசிட்டிருக்க வேண்டாம்!"

"கீர்த்தி... என்ன பிடிவாதம் உனக்கு? புருஷன், பொண்டாட்டிக்குள்ளே கோபதாபங்கள் சகஜம். பெரிசு பண்ணாதே! இவங்க ரெண்டுபேரும் ரொம்ப நல்ல மனுஷங்கன்னு எப்பவும் சொல்லிக்கிட்டிருப்பியே... நடந்ததெல்லாம் நன்மைக்குன்னு நினைச்சுக்க. இருட்டு கழிஞ்சா மாதிரி! வாழாவெட்டிங்கற பட்டத்தோட வாழற பொண்ணுங்களை ஊரும், உலகமும் கவுரவமா பார்க்கிறதில்லேம்மா!"

"உனக்கு நான் பாரமாயிட்டேனாம்மா? அதனால தான், என்கிட்டே சத்தியம் பண்ணிக் கொடுத்ததையும் மீறி நான் இங்கேயிருக்கேன்னு சொல்லிட்டு வந்திட்டியா?" என்றாள் கோபமாக.

"பத்துமாசம் உன்னை காத்தவ நான். அது பாரமில்லே... பெருமை! ஆனா, பத்துமாசத்துக்கு பிறகேயும் என் குழந்தையை நான் காத்துக்கிட்டே தான் இருப்பேன்னு ஆசைப்பட்டா... அது முட்டாள் தனமில்லையா? இந்த வயசுல நீ இருக்க வேண்டிய இடம் புருஷன் வீடு. நீ அங்கே இருந்தா தான் எனக்குப் பெருமை. எந்தத் தாயும் தன் பொண்ணு வாழாவெட்டியாப்பாயும் தன் கூடவே இருக்கணும்னு ஆசைப்படமாட்டாம்மா!"

"செய்த தவறை உணர்ந்து வந்திருக்கேன் கீர்த்தி. என்னை ஒதுக்கறதை தவிர வேற எந்த தண்டனை வேணும்னாலும் கொடு! இனி உங்கம்மாவும் நம்மோடவே இருக்கட்டும்."

"இல்லே மாப்பிள்ளே... உங்க நல்ல மனசு எனக்குப் புரியுது. ஆனா, அது சரியா வராது. நான் மறுபடி ஆஸ்பத்திரி வேலைக்குப் போய்டறேன். என்னைப் பத்தி கவலை வேண்டாம். என் பொண்ணு நல்லா இருந்தா அதுவேப் போதும்!"

"என்னம்மா.. நீயும் விளையாடறியா? இவங்க பேச்சுட லாகக் கேட்டு மயங்கிட்டியா? எனக்கு மறுபடியும் இவரோட வாழ முடியாதும்மா! அந்தளவுக்கு என் மனசை சிதைச்சிட்டார். அவங்கம்மா பேச்சைக்கேட்டு செருப்பால என் கன்னத்துல... மறக்க முடியலேம்மா! அவ்வளவு பாசத்தைக் கொட்டி நாய் மாதிரி இவங்க காலையே சுத்தி சுத்தி வந்தேன்ம்மா! கடைசியிலே தாலியை விடவும் கேவலமாயில்லே விர டினாங்க? இதோ இவங்களை உன்னை விட மேலா, அன்புகாட்டினேன்ம்மா! கடை சியிலே... நான் இருக்க, தன் பிள்ளை பொண்ணு தேடினாங்க. நான் எவ்வளவு த சேன், அழுதேன்? அப்ப எங்க போச்சு இ வோட அன்பெல்லாம்?" கன்னத்தில் வடி கண்ணீரை துடைத்தெறிந்தாள் கீர்த்தனா.

நீலாம்பிகை அருகில் வந்தாள்.

"தப்புப் பண்ணிட்டேன் கீர்த்தி. டுக்கு வந்த மகாலட்சுமிய வீடுக்கு துரத்தி நினைச்சேன். இவ்வளவு பிரச்சினை

## கைரேகை செல்போன்

இந்த கம்ப்யூட்டர் யுகத்தில், அறிவியல் வளர்ச்சியின் வேகம், மின்னலை தாண்டுகிறது. எவ்வளவோ விந்தை சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும், தற்போது உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்களின் செல்ல போனாக, 'செல் போன்' ஆகிவிட்டது. செல்போன்களில் பலவிதமானவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக ஜப்பான்காரர்கள் தயாரிக்கும் செல்போன்களுக்கு உலக அளவில் மார்க்கெட் அதிகரித்துள்ளது.

மினி கம்ப்யூட்டராக உள்ள இந்த செல்போன்களில் அதிக நவீன வசதிகளை கொண்டவற்றை வி.வி.ஐ.பி.க்கள் மட்டுமே வைத்துள்ளனர். பல வித்யாசமான ஜப்பான்காரர்கள் தற்போது புதிய ரேகை செல்போனை அறிமுகப்படுத்தி உள்ளனர்.

அதி நவீன வசதி கொண்ட இந்த செல்போனில், அதிகபட்சம் 10 பேரின் கைவிரல் ரேகைகளை பதிவு செய்யலாம். அதில் இவை அதே வரிசையில் பதிவாகிவிட்ட பின், தேவைப்படும்போது இந்த கை ரேகைகளை பதித்து பயன்படுத்தி கொள்ளும்படி வசதி செய்யப்பட்டுள்ளது.

செல்போனில் [illegible] அடக்கியவர்கள் இப்போது கைவிரல் ரேகையை பதிவு செய்து ஜோசியத்தையும் பார்த்து விடலாம். நாம் நினைப்பது போலவே இதுவும் [illegible].

-எஸ்.ஜி. சன்.



நான் பெரிசாக்காம தடுத்திருக்கலாம். புத்திக் கெட்டுப்போச்சு. நீயிலே கட்டாலும் தங்கம் தங்கம் தான்னு நீ நிரூபிச்சிட்டே. அவசர புத்தியால தலைகுனிஞ்சு நிக்கறோம். மாதவன் எனக்கு ஒரே பிள்ளை. அவன் வாழ்க்கை பட்டமரமானது என்னால தான். ஒவ்வொரு நாளும் அவன் உன்னை நினைச்சி துடிச்சது எனக்குதாம்மா தெரியும். அப்பவெல்லாம் என் குற்ற உணர்ச்சியே என்னை கொல்லுது. எந்த தப்புக்கும் பரிகாரமிருக்கு. எல்லாத்துக்கும் காரணம் நான் தானே? நானே பரிகாரம் தேடிக்கிறேன். என் பிள்ளைய மன்னிச்சு ஏத்துக்கிட்டு ரெண்டு பேரும் சந்தோஷமா வாழ்ந்தா அது போதும் எனக்கு!''

என்றவள் சட்டென மூலையில் கிடந்த கெரசின் கேனை எடுத்துத் திறந்து மேலே கொட்டிக்கொண்டாள். கையில் தீப்பெட்டியை எடுத்தாள்.

என்ன காரியம் செய்கிறாள் என்ற திகைப்பில் அனைவரும் பிரம்மித்து நிற்க... நீலாம்பிகை குச்சியை உரசினாள்...

''ஐய்யோ... அத்தை...''

''அம்மா!!''

அலறிக் கொண்டு ஓடி அவள் கையை தட்டி விட தவறி சேலையில் குப்பென்று தீப்பற்றிக் கொண்டது.

கீர்த்தனா வேகமாய் செயல்பட்டாள்.

நீலாம்பிகையின் சேலையை உருவி தண்ணீர் ஊற்றி அணைத்தாள்.

ஜானகி வேறு சேலைத் தந்தாள்.

''அத்தை... என்ன காரியம் பண்ணிட்டீங்க? கையிலே காயமாய்டுச்சு. கொஞ்சம் தாமதிச்சிருந்தாலும்.. நினைக்கவே பதறுதே!'' கீர்த்தனாவின் உடல் லேசாய் நடுங்கிக் கொண்டிருந்தது.

மாதவன் அம்மாவின் கையை பற்றிக் கொண்டான்.

''எதுக்கும்மா... எதுக்காக இப்படியொரு முடிவு? எனக்காகவா? பெத்த தாயையும் சந்தோஷப்படுத்தாம, நம்பி வந்த பொண்டாட்டியையும் வச்சு வாழத்தெரியாத நானல்லவா முதல்ல சாகணும்?''

சட்டென அவன் வாயைப் பொத்தினாள் கீர்த்தனா.

''என்ன இது? மோசமான வார்த்தையெல்லாம் பேசிக்கிட்டு?'' தன்னை மீறி பதறினாள். அதன் பிறகே தன் நிலை உணர்ந்து கையை எடுத்தாள்.

''என்டி நடிக்கிறே? இதுதான்டி உண்மையான நேசம்! எவ்வளவு கொடுமைகள் செய்தேன்? அதை எல்லாம் மறந்து எனக்கு ஒரு ஆபத்துன்னதும் துடிச்சுப்போய் காப்பாத்தினியே! இதான்டி பாசம். என் பிள்ளை தான் சாகணும்னு ஒரு வார்த்தை சொன்னதும் பதறிப் போய் வாய்ப் பொத்தினியே... இதுதான்டி கணவன் மனைவியோட பந்த பாசம்! எத்தனை கோபதாபங்கள் வந்தாலும், எத்தனை உறவுகள் வந்தாலும் இந்த நேசத்தை மட்டும் அறுத்தெறிஞ்சிட முடியாது. உண்மையான பாசத்துக்கு முன்னால எதுவுமே எடுபடாது கீர்த்தனா!'' என்றாள் நீலாம்பிகை.

''அம்மா பேசிட்டேயிருக்க நேரமில்லே! உன் கையிலே காயம்! உடனே ஹாஸ்பிடல் போகணும். கிளம்பு!'' அம்மாவை அழைத்துக் கொண்டு ஆட்டோவில் ஏறினான்.

ஆட்டோவின் அருகில் கீர்த்தனாவும் வந்து நின்றாள்.

''வரட்டுமாம்மா?'' மனசேயின்றி சொன்னாள் நீலாம்பிகை.

ஒரு கணம் கண் மூடி பெருமூச்சு விட்ட கீர்த்தனா, ''நானும் உங்களோடயே வர்றேன் அத்தை!'' என்றாள்.

''நிஜமாகவா?'' நம்பாமல் கேட்டாள்.

மாதவனோ தன் காதல் மனைவியை திகைப்புடன் பார்த்தான்.

'என்னை மன்னிச்சிட்டியா கீர்த்தி?'

'மன்னிப்புதானே உங்களுக்கு நான் தர்ற பெரிய தண்டனை!'

'ஒரு முறை தவறவிட்டேன். மறுபடி தவற விட நான் முட்டாள் இல்லை.... கீர்த்தி! உன்னை நெஞ்சுக்குள்ளே பொத்தி பாதுகாப்பேன்.'

நான்கு கண்களும் பேசிக்கொண்டன.

அதிர்ஷ்டசாலிக்கு சேவல் கூட முட்டையிடும். மாதவன் அதிர்ஷ்டக்காரன்.

புகையை கக்கிப் புறப்பட்டு சென்ற ஆட்டோவை ஆனந்தக் கண்ணீருடன் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜானகி.

*** (முற்றும்) ***

ஓசூர் அருகிலுள்ள 'ரண மண்டலா' என்னும் ஊரில் உள்ள உயர்ந்த மலையின் உயரம் 400 அடி. அதன் உச்சியில் ஆஞ்சநேயர் கோயில் உள்ளது.

—எஸ். லாவண்யா, சீர்காழி.